www.padippkam.com

# புதிய ஜனநாயகம்

டிசம்பர் 2012
ரூ.10.00



## பாக். பயங்கரவாதிக்குத் தூக்கு! உள்நாட்டு பயங்கரவாதி தாக்கரேவுக்கு அரசு மரியாதை!

படிப்பகம்

www.padippkam.com




# முதலாளித்துவம் மக்களைக் கொல்லும்! மக்களைக் காக்கும் கம்யூனிசமே வெல்லும்!

## – புரட்சிகர அமைப்புகளின் நவம்பர் புரட்சி நாள் சூளுரை

முதலாளித்துவம் ஆளத் தகுதியற்றது என்று உலகுக்கு அறிவித்து, அதன் முதுகெலும்பை முறித்த பஞ்சைப்பராரிகளான பாட்டாளி மக்கள், அதற்குப் புதைகுழி வெட்டி, கல்லறை கட்டிய நாள்தான், 1917, நவம்பர் 7. அன்றைய சோவியத் ஒன்றியத்தில் - உலகின் ஐந்திலொரு பங்கு நிலப்பரப்பில் பாட்டாளி வர்க்கத்தின் ஆட்சி மலர்ந்த 96-ஆம் ஆண்டு ரஷ்ய சோசலிசப் புரட்சி நாளை தமிழகமெங்கும் ம.க.இ.க; வி.வி.மு; பு.மா.இ.மு; பு.ஜ.தொ.மு; பெ.வி.மு; ஆகிய புரட்சிகர அமைப்புகள் தமது தோழமை அமைப்புகளுடன் இணைந்து தாங்கள் செயல்படும் பகுதிகளில் மறுகாலனியாதிக்கத்துக்கு எதிராகவும் இந்துவெறி பாசிசத்துக்கு எதிராகவும் புதிய ஜனநாயகப் புரட்சியைச் சூளுரைத்தும் பேருற்சாகத்துடன் கொண்டாடின.

***சென்னையில்...***

பு.மா.இ.மு. சென்னைக் கிளைச் செயலர் தோழர் நெடுஞ்செழியன் தலைமையில் நடைபெற்ற விழாவில், கூடங்குளம் அணு உலை எதிர்ப்பு மக்கள் போராட்டத்தில் துணை நிற்கும் ம.உ.பா.மையத்தின் அனுபவத்தை விளக்கிய தோழர் சக்தி சுரேஷ், இப்போராட்டம் மக்களை எவ்வாறு ஐக்கியப்படுத்தியுள்ளது என்பதை விளக்கினார். மறுகாலனியாக்கத்தை வீழ்த்தி நமது நாட்டிலும் ஒரு நவம்பர் புரட்சியைச் சாதிக்க எந்தப் பாதையில் நாம் பயணிக்க வேண்டுமென்பதை பு.ஜ.தொ.மு. மாநில அமைப்புச் செயலர் தோழர் வெற்றிவேல் செழியன் விளக்கி உரையாற்றினார். ம.க.இ.க. சென்னைக் கிளை தோழர்கள் ''நவம்பர் ஏழென்ற தினம்'', ''யார் உண்மையான விடுதலை வீரர்கள்'', ''முட்டிமோதிச் சாய்த்து'' ஆகிய புரட்சிகரப் பாடல்களை இசைத்தனர். தோழர்களோடு குழந்தைகளும் இணைந்துகொண்டு பாடி நடனமாடினர். பெ.வி.மு.தோழர்கள், தேசிய நதிநீர்க்கொள்ளையை எதிர்த்து நடத்திய ''தண்ணீர் தாகத்திற்கா? இலாபத்திற்கா?'' என்ற நாடகம் பார்வையாளர்களிடம் பெருத்த வரவேற்பைப் பெற்றது. பு.மா.இ.மு. தோழர்கள் அந்நிய முதலீட்டின் கோரவிளைவுகளை விளக்கும் விவாத நிகழ்ச்சியையும், தொலைக்காட்சித் தொடர்கள் பரப்பிவரும் சீரழிவுகளை அம்பலப்படுத்தும் நாடகத்தையும் நடத்தினர். ஏறத்தாழ 750 பேர் கலந்து கொண்ட இந்த விழா வர்க்க உணர்வைப் பறைசாற்றுவதாக அமைந்தது.

***கும்மிடிப்பூண்டியில்...***

திருவள்ளூர் மாவட்ட பு.ஜ.தொ.மு. சார்பில் கும்மிடிப்பூண்டியில் பு.ஜ.தொ.மு. இணைப்புச் சங்கங்கள் சேர்ந்து நவம்பர் புரட்சி நாளை வர்க்க உணர்வூட்டும் விழாவாக நடத்தின. திருவள்ளூர் மாவட்ட பு.ஜ.தொ.மு. செயலாளர் தோழர் சுதேஷ் குமார் தலைமையில் நடைபெற்ற இந்த விழாவில்,பு.ஜ.தொ.மு. மாநிலப் பொதுச் செயலாளர் தோழர் சுப. தங்கராசு சிறப்புரையாற்றினார். இளந்தோழர்கள் நடத்திய நாடகமும் புரட்சிகர பாடல்களும் திரளாகக் குடும்பத்துடன் பங்கேற்ற தொழிலாளர்களிடம் பெருத்த வரவேற்பைப் பெற்றன. சோசலிசப் புரட்சி நாளை உழைக்கும் மக்கள் கொண்டாட வேண்டிய விழாவாக, அதையொரு பண்பாடாக வளர்த்தெடுக்க வேண்டிய அவசியத்தை உணர்த்திய இந்த நிகழ்ச்சி, தொழிலாளர்களிடம் நம் நாட்டிலும் ஒரு சோசலிசப் புரட்சியைச் சாதிக்க வேண்டும் என்ற உணர்வை ஊட்டியது.

***திருச்சியில்...***

நவம்பர் புரட்சி நாள் அன்று காலையில், பாய்லர் ஆலை முன்பாக பாய்லர் பிளாண்ட் ஒர்க்கர்ஸ் யூனியனும், குட்ஷெட் பகுதியில் சுமைப்பணி தொழிலாளர் பாதுகாப்புச் சங்கமும், தில்லைநகர் காந்திபுரத்தில் ம.க.இ.க.வும் எழுச்சிமிகு முழக்கங்களுடன் கொடியேற்றுவிழாவை நடத்தின. மாலையில், ம.க.இ.க. மாவட்டச் செயலர் தோழர் சீனிவாசன் தலைமையில் நடந்த விழாவில், ஆட்டோ ஓட்டுநர் பாதுகாப்புச் சங்கத்தின் தலைவர் தோழர் தர்மராஜ், சூத்திரர்களையும் பஞ்சமர்களையும் இழிவுபடுத்தும் பார்ப்பன ஆதிக்க விழாவான தீபாவளிப் பண்டிகையைச் சாடியதோடு, ரஷ்யப் புரட்சியின் சாதனைகளை விளக்கி, எந்த விழாவை உழைக்கும் மக்களாகிய நாம் கொண்டாட வேண்டும் என்பதை உணர்த்தினார். அதைத் தொடர்ந்து வாலிபால், ஸ்லோ சைக்கிள், இசை நாற்காலி, பானை உடைத்தல், குடுவையில் நீர் நிரப்புதல், கயிறு இழுத்தல், ஓட்டப்பந்தயம், ஓவியம், கவிதை, பேச்சு, பாட்டுப் போட்டிகளில் வெற்றிபெற்றவர்களுக்கு ம.உ.பா.மையத்தின் வழக்குரைஞர்கள் பரிசுகளை வழங்கினர்.



தொடர்ச்சி 35-ஆம் பக்கம்



படிப்பகம்

www.padippkam.com

புதிய ஜனநாயகம்

மார்க்சிய-லெனினிய அரசியல் ஏடு

தொகுதி: 28 இதழ்: 2

டிசம்பர் 2012

உள்நாடு

தனி இதழ்: ரூ.10.00

ஆண்டு சந்தா: ரூ.120.00

வெளிநாடுகள்

(வான் அஞ்சலில்)

ஆண்டு சந்தா: US $ 20

அட்டை வடிவமைப்பு: *முகிலன்*

தொடர்பு முகவரி:

புதிய ஜனநாயகம்,
110, இரண்டாம் தளம்,
63, என்.எஸ்.கே. சாலை,
(அ.பெ.எண்: 2355)
கோடம்பாக்கம்,
சென்னை - 600 024.

மின்னஞ்சல்:
puthiyajananayagam@gmail.com

தொலைபேசி: 94446 32561

# பாக். பயங்கரவாதிக்குத் தூக்கு! உள்நாட்டு பயங்கரவாதி தாக்கரேவுக்கு அரசு மரியாதை!

166 பேரைப் படுகொலை செய்த, பிரபலமாக அறியப்பட்ட 26/11 மும்பை பயங்கரவாதத் தாக்குதலை நடத்திய பத்து பாகிஸ்தான் பயங்கரவாதிகளில் உயிருடன் பிடிபட்டவரான முகம்மது அஜ்மல் அமீர் கசாப், கடந்த 21/11 அன்று முற்றிலும் இரகசியமாக இந்திய அரசால் தூக்கிலிடப்பட்டார். இதை, மும்பை பயங்கரவாதத் தாக்குதலில் கொல்லப்பட்டவர்களுக்கு மரியாதை செலுத்தியும், நினைவுகூர்ந்தும், பட்டாசு வெடித்தும், இனிப்பு வழங்கியும் பலவாறாக நாடே கொண்டாடியது. ''மும்பை பயங்கரவாதத் தாக்குதலில் கொல்லப்பட்டவர்களுக்கு நீதி வழங்கப்பட்டது; பயங்கரவாதத்துக்குப் பதிலடி கொடுத்தாகிட்டது; இந்தியச் சட்டம், நீதி அமைப்பின் சிறப்பு நிரூபிக்கப்பட்டுவிட்டது; பயங்கரவாதக் குற்றவாளிக்குக் கூட சட்டபூர்வமான எல்லா வாய்ப்புகளும் வழங்கிய இந்திய ஜனநாயகத்தின் மேன்மை உலகுக்கு மீண்டும் தெளிவாகியுள்ளது'' என்று கூறி கசாப் தூக்கு பற்றி பலரும் பெருமிதம் கொள்கின்றனர்.

கசாப் தூக்கை வரவேற்பவர்களிலேயே இன்னொரு பிரிவினரும் உள்ளனர். கசாப்பைத் தூக்கிலிட்டதன் மூலம் பாதி நீதியைத்தான் நிலைநாட்டியிருக்கிறோம். பாகிஸ்தானில் பாதுகாப்பாக வாழும் பயங்கரவாதத் தலைமைக் குற்றவாளிகளின் கருவிதான், கசாப். 26/11 மும்பை பயங்கரவாதத் தாக்குதலைத் திட்டமிட்டு, பயிற்சி, நிதி, ஆயுதங்கள் கொடுத்து ஏவிவிட்ட அக்குற்றவாளிகளைக் கொண்டுவந்து அல்லது அங்கேயே தாக்குதல்கள் நடத்திக் கொல்லப்பட்டால்தான் மும்பையில் பலியானவர்களுக்கு முழுமையான நீதி வழங்கியதாகும். கசாப்பை உடனடியாகத் தூக்கிலிடாமலும், பிற குற்றவாளிகள் மீது தாக்குதல் தொடுக்காமல் தாமதிப்பதும், கசாப்பை சிறையில் வைத்துப் பராமரிப்பதற்கு பல கோடி செலவு செய்ததும் தவறுதான் என்றும் பலர் கொந்தளிக்கிறார்கள். இந்திய நாடாளுமன்றத்தின் மீது பயங்கரவாதத் தாக்குதல் நடத்தியதாகக் கூறி தூக்குத் தண்டனை வழங்கப்பட்டுள்ள அப்சல் குருவை இனியும் தாமதமின்றித் தூக்கிலிட வேண்டும் என்று கோருகின்றனர்.

இவ்வாறு கசாப்பின் தூக்கை வரவேற்றுக் கொண்டாடுபவர்கள், பாகிஸ்தான் மீதான பதிலடிக்கும் தாக்குதலுக்கும் ஏங்குபவர்கள்தான் தேச பக்தர்கள்; இதற்கு மாற்றுக் கருத்துடையவர்கள் எல்லாம் தேசத்துரோகிகள் என்ற கருத்து அரசாலும், ஆளும் கட்சிகள் - எதிர்க்கட்சிகளாலும், ஊடகங்களாலும் உருவாக்கப்படுகிறது. மாற்றுக் கருத்துக் கொண்டவர்களும் பரப்புபவர்களும் பாசிச முறையில் மிரட்டப்படுகின்றனர். அதையும் மீறுபவர்கள் அச்சத்துடன் கூடிய மழுப்பலைக் கவசமாக அணிந்து கொள்கிறார்கள். மரண தண்டனையையே எதிர்ப்பது என்ற மனிதாபிமான வாதத்துக்குள் புகுந்து கொள்கிறார்கள். ''குடியரசுத் தலைவர் தக்க காரணம் கூறாமல் அவசரகதியில் கசாப்பின் கருணை மனுவை நிராகரித்து விட்டார்; அதன் பிறகும் மேல்முறையீடு செய்வதற்கான கசாப்பின் சட்ட உரிமை மறுக்கப்பட்டு விட்டது; முற்றிலும் இரகசியமாக வைத்துத் தூக்கிலிடப்பட்டது தவறு; 26/11 தாக்குதலுக்கான ஒரே சாட்சியமாக இருந்தவரை, அதுவும் பாகிஸ்தானில் நடக்கும் வழக்கு விசாரணை முடியும் முன்பு தூக்கிலிட்டு அழித்தது தவறு; வரும் குஜராத் தேர்தலில் ஆதாயம் தேடிக் கொள்வதற்காகவும், சில்லறை வர்த்தகத்தில் அந்நிய முதலீடு முதலிய தேசத்துரோகச் செயல்கள் மீதான எதிர்ப்பிலிருந்து திசைதிருப்பவும் ஆளும் கூட்டணி உள்நோக்கத்தோடு அவசர அவசரமாகச் செயல்பட்டு விட்டது'' - இப்படிப்பட்ட மழுப்பலான மாற்றுக் கருத்துக்கள்தாம் சொல்லப்படுகின்றன.

ஆனால், கசாப்பின் தூக்கை வரவேற்றுக் கொண்டாடுவது மற்றும் அதற்குப் பதிலாக மழுப்பலான மாற்றுக் கருத்துக்களைக் கொள்வது - இரண்டில் இருந்தும் முற்றிலும் மாறாக, நாடும் மக்களும் புரிந்து கொள்ள வேண்டிய வேறு சில உண்மைகள் உள்ளன.

கசாப் தூக்கிலிட்டுக் கொல்லப்பட்டதற்கு நான்கு நாட்களுக்கு முன்புதான் மும்பை சிவசேனாவின் நிறுவனரும் தளபதியுமான பாலாசாகேப் கேசவ் தாக்கரே அனைத்துக் கட்சித் தலைவர்கள், அரசு - அரசாங்கத் தலைவர்கள், அனைத்துப் பிரிவு ஊடகப் பிரபலங்களின் புகழஞ்சலியோடும் அனைத்து அரசு மரியாதைகளுடனும் இறுதிச் சடங்கு நடத்தி, எரியூட்டப்பட்டார். கசாப் தூக்கிலிடப்பட்டது, பால் தாக்கரே இயற்கை மரணமடைந்து அரசு மரியாதையுடன் இறுதிச்சடங்கு நடத்தி எரியூட்டப்பட்டது - இவை இரண்டும் தொடர்பே இல்லாத, வேறுவேறு நிகழ்வுகளாக, ஒப்பீடு செய்யாது தனித்தனியே கருதத்தக்கவை அல்ல. கசாப், 26/11 மும்பைத் தாக்குதலை நடத்திய பாகிஸ்தான் - இசுலாமியப் பயங்கரவாதக் கும்பலில் ஒருவன்; ஆனால், பால் தாக்கரே மும்பையில் நடந்த பல படுகொலைகளுக்குக் காரணமான இந்திய 'இந்து' மத, சாதி, இனவெறி



படிப்பகம்

www.padippkam.com

பயங்கரவாதக் கும்பலின் தலைவர்; ஒரு கிரிமினல் குற்றக்கும்பலின் மூளையாகச் செயல்பட்டவர்.

மும்பையில் காலூன்றுவதற்காக, நூற்றுக்கணக்கான தென்னிந்தியர்களைக் கொன்று, அவர்களின் சொத்துக்களைச் சூறையாடியது சிவசேனா பாசிசப் படை; தொழிற்சங்கங்களைக் கைப்பற்றுவதற்காக வலது கம்யூனிஸ்டு சட்டமன்ற உறுப்பினரையும் பல தொழிற்சங்க முன்னணியாளர்களையும் ஈவிரக்கமின்றிக் கொன்றது; மும்பை சினிமா மற்றும் நிழல் உலகைத் தன் கட்டுப்பாட்டிற்குள் கொண்டு வருவதற்காக, தாவூத் இப்ராகிம் கும்பலுக்குப் போட்டியாக அருண் காவ்லி தலைமையிலான கிரிமினல் குற்றக்கும்பலை வளர்த்து, உருட்டல் மிரட்டல், மாமூல் வசூல் முதல் தாக்குதல்கள், படுகொலைகளைச் செய்தது; மண்டல் இடஒதுக்கீடு எதிர்ப்பு மற்றும் மரத்வாடா பல்கலைக்கழகத்திற்கு அம்பேத்கர் பெயரிடுவதை எதிர்த்து ஒடுக்கப்பட்ட, தாழ்த்தப்பட்ட மக்கள் பலரை நடுத்தெருவில் வெட்டிச் சாய்த்தது; அயோத்தி-பாபரி மசூதியை இடிப்பதற்கு ஒரு பயங்கரவாத கும்பலை ஏவியதோடு, 1992-இல் இரண்டு மாதங்கள் மும்பையைத் தனது சர்வாதிகார-பாசிச படையால் கைப்பற்றிக் கொண்டு, ஆயிரத்துக்கும் மேற்பட்ட இசுலாமியர்களை வெட்டியும் உயிரோடு எரித்தும் கொன்றது. இதற்கெல்லாம் மூளையாக விளங்கியவர் பால்தாக்கரே.

இவையெல்லாம் ஆதாரமற்ற குற்றச்சாட்டுக்கள் அல்ல; இக்குற்றங்களுக்காக 16 கிரிமினல் வழக்குகள் நீதிமன்றங்களில் பதிவு செய்யப்பட்டு பா.ஜ.க. மற்றும் காங்கிரசுத் தலைமை கூட்டாளிகளின் சதியால் பின்னர் முடக்கப்பட்டன. இவற்றுக்கான ஆதாரங்கள் பால் தாக்கரே மரணமடைந்த அன்றைய நாளில் எல்லா நாளேடுகளிலும் காணக்கிடக்கின்றன. 26/11 மும்பை பயங்கரவாதப் படுகொலைகளில் பங்கேற்றதற்காக கசாப் தூக்கிலிடப்பட்டான், முப்பதாண்டுகளாக பல படுகொலைகளை நடத்தி அதே மும்பையை ஆட்டிப் படைத்த பால்தாக்கரே இயற்கையாக மரணமடைய விடப்பட்டதோடு அரசு மரியாதை இறுதிச் சடங்கு பெற்றார்.



இசுலாமிய பயங்கரவாதி என்பதாலேயே இந்திய அரசால் தூக்கிலிடப்பட்ட முகம்மது அஜ்மல் அமீர் கசாப்.

கசாப் பகை நாடாகிய பாகிஸ்தான் பயங்கரவாதி, பால் தாக்கரே நமது சொந்த நாடாகிய இந்தியப் பயங்கரவாதி என்பதால் மட்டும் இந்த வேறுபாடு இல்லை! அவர் ஒரு இசுலாமியப் பயங்கரவாதி. இவர் ஒரு ''இந்து'' பயங்கரவாதி என்பதாலும் இந்த வேறுபட்ட அணுகுமுறை. ஆயிரக்கணக்கான இசுலாமியரைக் கொன்ற ''இந்து'' பயங்கரவாதி மோடிக்கு என்ன தண்டனை தரப்பட்டது? ஐதராபாத் மசூதி, அஜ்மீர் தர்க்கா, சம்ஜவ்தா விரைவு வண்டி, மலேகான் மசூதி குண்டுவெடிப்புகளை நடத்திய ''இந்து'' பயங்கரவாதிகள் பல ஆண்டுகளாகத் தண்டனை ஏதுமின்றி, அரசு விருந்தினர்களாகத் தானே உள்ளனர். இந்தப் பயங்கரவாதத் தாக்குதல்களுக்கும் இசுலாமியர்கள்தாம் காரணமென்று கூறிப் பல இசுலாமிய இளைஞர்களைப் பிடித்து, சித்திரவதை செய்து, சிறையில் அடைத்துத் தண்டித்து வருகிறது, இந்திய அரசு.

1996-ஆம் ஆண்டு டெல்லி லஜ்பத் நகர் சந்தை குண்டுவெடிப்பு வழக்கில் தூக்குத் தண்டனை பெற்றிருந்த இசுலாமிய இளைஞர்கள் இருவரை நிரபராதிகள் என 14 ஆண்டுகளுக்குப் பிறகு, கசாப் தூக்கிலிட்ட இரண்டாவது நாள் உயர் நீதிமன்றம் விடுவித்தது. அதற்குள் இதே வழக்கில் அவர்களில் ஒருவரின் சகோதரர் செய்யாத குற்றத்திற்காக ஆயுள் தண்டனை முடிந்து விடுதலையாகி விட்டார். மரண தண்டனையிலிருந்து தப்பியவரை, இராஜஸ்தான் குண்டுவெடிப்பில் சிக்க வைத்து இன்னமும் சிறையில் அடைக்கப்பட்டுள்ளார். இதற்கு முந்தைய மாதம்தான் பதினோரு இசுலாமிய '''தடா'' கைதிகளை உச்சநீதிமன்றம் நிரபராதிகள் என விடுவித்தது. இதுதான் இந்தியச் சட்டம், நீதி! கசாப் தூக்கிலிடப்பட்டவுடன், ''ஆதாரம் இல்லை என்றாலும், தேசத்தின் உணர்வை மதித்துத் தூக்குத் தண்டனை வழங்கப்படுவதாக'' உச்ச நீதிமன்றம் தீர்ப்பளித்துள்ளதால், நாடாளுமன்றத் தாக்குதல் வழக்கில் அப்சல் குருவைத் தூக்கிலிட வேண்டுமென பார்ப்பன மதவெறி பாசிச பயங்கரவாதக் கும்பல் கூச்சலிடுகிறது.

லஜ்பத் நகர் குண்டு வெடிப்பில் கீழமை நீதிமன்றத்தால் தூக்கு தண்டனை விதிக்கப்பட்டு, பின் டெல்லி உயர் நீதிமன்றத்தால் குற்றமற்றவர்கள் என விடுவிக்கப்பட்ட (இடமிருந்து) முகம்மது அலி பட், மிர்சா நிசார் ஹூசைன் மற்றும் தூக்கு தண்டனை ஆயுள் தண்டனையாகக் குறைக்கப்பட்ட முகம்மது நௌஷத்.



இத்தகைய தேசிய உணர்வு, தேசபக்தி உண்மையானதா? நேர்மையானதா? அவசியமானதா? அறிவியல்பூர்வமானதா? இதுதான் மதவெறி பயங்கரவாத எதிர்ப்பா? ஒழிப்பா? இல்லை. இத்தகைய போக்கினால் இங்கே ''இந்து மதவெறி''யையும் அங்கே ''இசுலாமிய மதவெறி''யையும் தூபமிட்டு ஆதாயம் அடைகின்றன, இருநாட்டு ஆளும் கும்பல்கள். இதனால் ஒன்றுக்கொன்று பயங்கரவாதத் தாக்குதல்களை நடத்தி, பகைமையையும் வெறுப்பையும் அடுத்த கட்டத்திற்கு முன்தள்ளி, சுருள் வளர்ச்சி முறையில் மேலும் உயர்த்துவதாகவே முடியும்.



படிப்பகம்

www.padippkam.com

# பால் தாக்கரே:

# அதிகாரபூர்வ இந்துவெறி-இனவெறி பயங்கரவாதி

**பாசிச பயங்கரவாத தாக்கரே கும்பலை அதிகார வர்க்கம், போலீசு, நீதித்துறை அடங்கிய அரசு எந்திரமும் ஆளும் வர்க்கக் கட்சிகளும் ஆதரித்து நின்றதாலேயே, இத்தனை காலமும் அது கொட்டமடிக்க முடிந்தது.**

சிவசேனா கட்சியின் தலைவரான பால்தாக்கரே கடந்த நவம்பர் 17 அன்று இயற்கையாக மரணமடைந்து விட்டார் என்பதற்காக நாம் வருந்தத்தான் வேண்டும். ஒரு இனவெறி-இந்துவெறி பாசிச பயங்கரவாத கிரிமினல் மாஃபியா கும்பலின் தலைவன் தண்டிக்கப்பட்டு, பலமுறை தூக்கிலிடப்பட்டுக் கொல்லப்படாமல், இயற்கையாக மரணமடைந்திருப்பது வருத்தமானதுதான்.

செத்தவன் எவ்வளவு பெரிய அயோக்கியனாக இருந்தாலும், அவனைத் தெய்வமாக்குவதென்பது இந்துத்துவ மரபு. அந்த வழியில் முதலாளித்துவ ஊடகங்களும் ஓட்டுக்கட்சிகளும் தாக்கரேவுக்காக ஒப்பாரி வைத்து, அவரது சிவசேனா கும்பலின் பாசிச பயங்கரவாத வெறியாட்டங்களைச் சூடு சொரணையின்றி மூடிமறைத்தன. ஆனால், இப்பயங்கரவாத கும்பலின் இரத்தவெறி பிடித்த வரலாறை நாட்டு மக்கள் ஒருக்காலும் மறக்கவே முடியாது.

1960-களில் இந்தியாவில் நிலவிய அரசியல் - பொருளாதார நெருக்கடியின் விளைவாக ஆளும் காங்கிரசு கட்சியின் மீது மக்களிடம் அதிருப்தி பெருகிய நேரத்தில், மண்ணின் மைந்தர்கள் என்ற கொள்கையுடன், மும்பையில் மார்மிக் எனும் மராத்திய வார இதழை நடத்திய பால்தாக்கரே, குஜராத்தியர்கள், பீகாரிகள் மற்றும் தென்னிந்தியர்களால் மராத்திய மக்களின் வாழ்வும் வளமும் பறிக்கப்படுவதாக இனவெறியூட்டும் பிரச்சாரத்தை நடத்தி, 1966-இல் சிவசேனா கட்சியைத் தொடங்கினார். மராத்திய மன்னன் சிவாஜியின் படையாக அறிவித்துக் கொண்ட இக்கட்சி, 'வந்தேறி'களான குஜராத்தியர்கள் மற்றும் தென்னிந்தியர்கள் மீதும் அவர்களது கடைகள், உணவகங்கள் மீதும் தாக்குதலை நடத்தியது. பிப்ரவரி 1969-இல் மும்பையில் குடியேறிய கர்நாடகத்தவர் மீது கொடிய தாக்குதலைக் கட்டவிழ்த்துவிட்ட தாக்கரேவின் குண்டர்கள் 59 பேரைக் கொன்று 274 பேரைப் படுகாயப்படுத்தினர்.

மகாராஷ்டிராவில், குறிப்பாக மும்பை நகரில் தொழிலாளி வர்க்கத்தின் போராட்டங்களைக் கண்டு அரசும் பெருமுதலாளிகளும் கதிகலங்கிய காலம் அது. 1967 செப்டம்பர் 10 அன்று மார்மிக் இதழில் கம்யூனிஸ்டுகளை ஒழிப்பது தான் தனது லட்சியம் என்று தாக்கரே வெளிப்படையாக அறிவித்தார். மூன்று மாதங்கள் கழித்து, 1967 டிசம்பரில், சிவசேனா குண்டர்கள் பரேல் பகுதியில் தால்வி கட்டிடத்தில் இருந்த இருந்த வலது கம்யூனிஸ்டு கட்சியின் தலைமை அலுவலகத்தை அடித்து நொறுக்கித் தீயிட்டுக் கொளுத்தினர். இடது, வலது கம்யூனிஸ்டு கட்சிகளைச் சேர்ந்த முன்னணியாளர்களும் தொழிற்சங்க செயல்வீரர்களும் சிவசேனா குண்டர்களால் தாக்கப்பட்டனர்.

தொழிலாளர்களின் போராட்டம் நடக்குமிடத்துக்கு போலீசு வாகனங்களோடு கூடவே சிவசேனா குண்டர்கள் இருசக்கர வாகனங்களில் வந்திறங்கிப் போராட்டக்காரர்கள் மீது பாய்ந்து தாக்குதல் தொடுப்பார்கள். படுகாயமடைந்த தொழிலாளர்கள் போலீசால் கைது செய்யப்பட்டு சிறையிடப்படுவார்கள். இப்பயங்கரவாதத் தாக்குதல்கள் மூலம் பாரதீய காம்கார் சேனா என்ற சிவசேனாவின் தொழிற்சங்கம் ஆலைகளில் மட்டுமின்றி வங்கி, அரசுத்துறை மற்றும் சேவைத்துறை நிறுவனங்களில் கம்யூனிஸ்டுகளுக்கு எதிரான போட்டி சங்கமாக வளரத் தொடங்கியது. இதனாலேயே தரகுப் பெருமுதலாளியான ராகுல் பஜாஜ், ''தனது ஆலையின்

அதிகாரபூர்வ பயங்கரவாதிக்கு அரசு மரியாதை: தேசியக் கொடி போர்த்தப்பட்டு நடந்த பாசிச பயங்கரவாதி தாக்கரேவின் இறுதி ஊர்வலம்.





படிப்பகம்

www.padippkam.com

பிரச்சினைகளை தாக்கரே தீர்த்து வைத்தார்'' என்று பெருமையுடன் கூறினார்.

1970-களில் தாக்கரேவின் இந்துவெறியானது பிவாண்டி, ஜலகோன், மகத் ஆகிய பகுதிகளில் முஸ்லிம்களுக்கு எதிரான பயங்கரவாதத் தாக்குதலாகப் பரவியது. ''இந்திய நாட்டில் இஸ்லாமியர்களும் கிறித்துவர்களும் புற்று நோயைப் போன்றவர்கள்; அவர்களை அழிக்கும் வரை நமது போராட்டம் ஓயாது'' என்று வெறியூட்டிய தாக்கரே, முஸ்லிம்களுக்கு எதிராக தற்கொலைப் படையைத் திரட்டுவோம் என்று வெளிப்படையாக அறிவித்தார்.



ராமாபாய் அம்பேத்கர் நகரில் சிவசேனா குண்டர்களின் வன்கொடுமை வெறியாட்டத்தைத் தொடர்ந்து போலீசு நடத்திய துப்பாக்கிச் சூட்டில் கொல்லப்பட்ட தாழ்த்தப்பட்டோர்.

காங்கிரசுக்கு ஆதரவாக வாக்களிப்பதைத் தடுக்க, தாழ்த்தப்பட்டோர் மீது திட்டமிட்ட பயங்கரவாத வெறியாட்டங்களை சிவசேனா குண்டர்கள் கட்டவிழ்த்து விட்டனர். ஜனவரி 1974-இல் தலித் சிறுத்தைகள் கட்சித் தலைவர் பாகவத் ஜாதவ் தாக்கரே கும்பலால் படுகொலை செய்யப்பட்டார். 1984-இல் விதர்பா பிராந்தியத்தில் தாழ்த்தப்பட்ட விவசாயிகள் மீது சிவசேனாவின் தொடர் தாக்குதல் கட்டவிழ்த்து விடப்பட்டு, அவர்களின் குடிசைகள் எரிக்கப்பட்டு பயிர்கள் நாசமாக்கப்பட்டன. மரத்வாடா பல்கலைக்கழகத்துக்கு அம்பேத்கர் பெயர் சூட்டுவதை எதிர்த்து 1990-களில் சிவசேனா குண்டர்கள் இப்பிராந்தியத்தில் பயங்கரவாத வன்முறை வெறியாட்டத்தைக் கட்டவிழ்த்துவிட்டனர். இருப்பினும், சிவசேனா குண்டர்கள் நடத்திய வன்கொடுமை வெறியாட்டங்கள் தொடர்பான 1,100 வழக்குகளை 1990-களின் இறுதியில் சிவசேனா-பா.ஜ.க. கூட்டணி ஆட்சி தள்ளுபடி செய்தது. அதன் பின்னர், ஜூலை11,1997-இல் ராமாபாய் அம்பேத்கர் நகரில் சிவசேனா குண்டர்கள் நடத்திய தாக்குதல் நடத்திய பின், போலீசு நடத்திய துப்பாக்கிச் சூட்டில் 10 தாழ்த்தப்பட்டோர் கொல்லப்பட்டு, 30 பேர் படுகாயமடைந்தனர். ஆனாலும் சிவசேனா மீது எந்த நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை.

காதலர் தினத்துக்கு எதிர்ப்பு தெரிவித்து இளஞ்சோடிகளைத் தாக்கிய சிவசேனா, தன்னை கலாச்சாரப் போலீசாக நியமித்துக் கொண்டு ஆட்டம் போட்டது. தேசபக்த சவடால் அடித்துக் கொண்டு பாகிஸ்தான் கிரிக்கெட் விளையாட்டு வீரர்கள், கலைஞர்கள் எழுத்தாளர்களுக்கு எதிர்ப்பு காட்டுவது என்ற பெயரில் மிரட்டலையும் அச்சுறுத்தலையும் ஏவியது. பாலிவுட் திரைப்படங்கள் தாக்கரே தயவுக்குப் பின்னரே வெளிவர முடிந்தது. சச்சின் தெண்டுல்கர், சானியா மிர்சா முதலான விளையாட்டு வீரர்களும், அமிதாப்பச்சன், ஷாருக்கான் முதலான சினிமா நடிகர்களும் அச்சுறுத்த

## இருதலைப் பயங்கரவாதக் கொள்ளிகளுக்கிடையில் கருத்துச் சுதந்திரம்!



ஷாஹீன் ததா (வலது), அவரது தோழி ரேணு.

''தினமும் ஆயிரக்கணக்கான மக்கள் இறக்கிறார்கள். ஆனாலும் உலகம் தன் வழியில் இயங்கிக் கொண்டிருக்கிறது. ஆனால், ஒரு அரசியல் தலைவரின் இயற்கையான மரணத்துக்காக நாம் ஏன் இப்படி பைத்தியக்காரத்தனமாக நடந்து கொள்ள வேண்டும்? இன்று நடைபெறும் கடையடைப்பு அச்சத்தினால்தான் நடக்கிறதே தவிர, மரியாதையினால் அல்ல. நமது நாட்டின் விடுதலைக்காகப் போராடி உயிர்நீத்த பகத்சிங், ஆசாத், சுகதேவ் போன்றவர்களை நினைவு கூர்வதற்குக்கூட நாம் இரண்டு நிமிடங்கள் மவுன அஞ்சலிதானே செலுத்தினோம்'' என்று மகாராஷ்டிராவின் தானே நகரைச் சேர்ந்த ஷாஹீன் ததா என்ற கல்லூரி மாணவி, பால்தாக்கரேவின் இறுதிச் சடங்கிற்காக மும்பை முடக்கப்பட்டது குறித்து முகநூலில் தனது தோழி ரேணு என்பவருடன் கருத்தைப் பகிர்ந்து கொள்ள, அவரும் இதனை ஆதரித்துள்ளார்.

இப்படி எழுதியதற்காக ஷாஹீனின் உறவினரது மருத்துவமனை சிவசேனா குண்டர்களால் சூறையாடப்பட்டது. பால்தாக்கரே தங்களது கடவுள் என்றும், அவரை விமர்சித்ததன் மூலம் தங்களது மத உணர்வுகளைப் புண்படுத்திவிட்டதாகவும் சிவசேனா குண்டர்கள் போலீசில் புகார் செய்தனர். அதைத் தொடர்ந்து, தனது கருத்தை முகநூலில் இருந்து ஷாஹீன் நீக்கிவிட்டதோடு,



படிப்பகம்



1992-93 இல் மும்பையில் இந்துவெறியர்களும் சிவசேனாவும் இணைந்து நடத்திய பயங்கரவாத வெறியாட்டம்: முஸ்லிம்களைக் கொன்று வீதியில் வீசியெறிந்த கொடூரம்.

லுக்குள்ளாயினர். சிவசேனாவை விமர்சித்த எழுத்தாளர்கள் - ஓவியர்கள் மீது தாக்கரே குண்டர்கள் தாக்குதலை நடத்தினர்.

மண்ணின் மைந்தர்கள் என்ற கொள்கையுடன் மராத்தியர்களுக்காகப் பாடுபடுவதாகக் காட்டிக் கொண்ட சிவசேனா, மும்பை நகராட்சியைக் கைப்பற்றிய பின்னர், அரசு ஒப்பந்தங்களை மராத்தியர்களுக்குத் தராமல் பிற மாநிலப் பெரு முதலாளிகளுக்குத்தான் கொடுத்தது. மும்பையில் ஜவுளி ஆலைகள் நெருக்கடியில் சிக்கியிருந்த காலத்தில், வேலைநிறுத்தம் செய்தால் அதைச் சாக்கிட்டு ஆலை மூடல்கள் நடந்தன. அப்போது ஏறத்தாழ 2 லட்சத்து 75,000 தொழிலாளர்கள் வேலையிழந்தனர். அவர்களில் 90 சதவீதத்தினர் மராத்தியர்கள்தான். ஆனாலும் சிவசேனா அவர்களுக்காக எதுவும் செய்யவில்லை. ஜனவரி 1982 -இல் மும்பையில் நடந்த மாபெரும் ஜவுளி ஆலைத் தொழிலாளர்களின் வேலை நிறுத்தப் போராட்டத்தை எதிர்த்து தொழிற்சங்க முன்னணியாளர்கள் மீது சிவசேனா குண்டர்கள் தாக்குதலை நடத்தினர். தொழிலாளர்களை வீதியில் வீசியெறிந்த பின்னர், மூடப்பட்ட பஞ்சாலைகள் சிவசேனாவின் ஆதரவுடன் அடுக்குமாடிக் குடியிருப்புகளாக மாறிப் போயின.

ஜூலை 1996-இல் மும்பையின் மாதுங்கா பகுதியில் ஒரு வீட்டைக் காலி செய்ய மறுத்த ரமேஷ் கினி என்பவர் சிவசேனா குண்டர்களால் கடத்திச் செல்லப்பட்டு கொல்லப்பட்டார். அந்த வீட்டின் உரிமையாளரான லட்சுமிகாந்த் ஷா, தாக்கரேயின் தம்பி மகனும் தற்போதைய நவநிர்மாண் சமிதியின் தலைவருமான ராஜ்தாக்கரேவின் நெருங்கிய கூட்டாளியாவார். தனது கணவரின் கொலைக்குக் காரணம் ராஜ்தாக்கரேதான் என்று தைரியமாக குற்றம் சாட்டி அவரது மனைவி ஷீலா நீதிக்காகப் போராடினார். அப்போது சிவசேனா ஆட்சியிலிருந்ததால் புலன் விசாரணையை மாநில அரசு முடக்கியது. பின்னர் மகாராஷ்டிர உயர் நீதிமன்றம் மையப் புலனாய்வுத்துறை மூலம் விசாரணை நடத்த உத்தரவிட்டது. ஆனாலும், மும்பை போலீசு ஒத்துழைக்க மறுத்து தடயங்களை அழித்தது. சிலி நாட்டில் ராணுவ சர்வாதிகாரி பினோசெட் உருவாக்கிய குண்டர் படையைப் போலவே சிவசேனா குண்டர்களும் சட்டத்துக்கு அப்பாற்பட்டவர்களாகக் கொட்டமடித்தனர்.

அமெரிக்காவின் என்ரான் மின் நிறுவனத்திக்கு எதிராகச் சவடால் அடித்து, ஆட்சிக்கு வந்த பின்னர் ஒப்பந்தத்தை ரத்து செய்து சூரத்தனம் காட்டிய தாக்கரே, பின்னர் அதே என்ரான் நிறுவனத்தின் கொள்ளைக்கு கதவை அகலத் திறந்துவிட்டார். மராத்தியர்களின் வாழ்வும் வளமும் பிற மாநிலத்திலிருந்து குடியேறியவர்

---

தனது கருத்து யாருடைய மனதையாவது புண்படுத்தியிருந்தால், அதற்காக மன்னிப்பு கேட்பதாகவும் தெரிவித்தார்.

ஆனாலும் மகாராஷ்டிரா போலீசு இந்தியக் குற்றவியல் சட்டம் 295 ஏ-யின்படி மத உணர்வுகளைப் புண்படுத்தியதாகவும், 505(2)-இன்படி மாற்று மதங்கள், மொழிகள், இனங்களைச் சேர்ந்தவர்களிடையே பகைமையூட்டும் தகவல்களைப் பரப்பியதாகவும் அம்மாணவிகள் மீது குற்றம் சாட்டி கைது செய்தது. மகாராஷ்டிர அரசும் போலீசும் எந்த அளவுக்கு இந்துத்துவ பாசிசத்தால் நஞ்சூட்டப்பட்டுள்ளது என்பதை இது நிரூபித்துக் காட்டியது. நாட்டில் ஜனநாயகம் நிலவுவதாகவும், எதையும் சுதந்திரமாக சமூக வலைத்தளங்களில் எழுதலாம் என்ற கருத்தில் உள்ள நடுத்தர வர்க்கத்தின் மாயைகளை இது தகர்த்துள்ளது.

இம்மாணவிகள் மீது தகவல் தொடர்புச் சட்டம் 66-ஏ வின் கீழும் வழக்கு பதிவு செய்யப்பட்டுள்ளது. தடா, பொடா சட்டங்களைப் போன்று குடிமகனின் கருத்துரிமை, பேச்சுரிமையை முற்றாக மறுக்கும் இன்னுமொரு பாசிச பயங்கரவாதச் சட்டம்தான் இது. இச்சட்டத்தின்படி, சமூக வலைத்தளங்களின் ஊடாக ஒருவரது மனதைப் புண்படுத்தும் வகையில் எழுதினார் என்று குற்றம் சாட்டி ஒருவரைக் கைது செய்து மூன்றாண்டுகள் வரை சிறையிலடைக்க முடியும். ஏற்கெனவே ப.சிதம்பரத்தின் மகன் கார்த்தி சிதம்பரத்துக்கு சொத்து எப்படி குவிந்தது என்று எழுதியதற்காக புதுச்சேரியில் ஒருவர் இச்சட்டத்தின்கீழ் கைது செய்யப்பட்டார்.


இம்மாணவிகள் கைது செய்யப்பட்டதைக் கண்டித்தும், இது அரசியல் சாசனம் ஒருவருக்கு வழங்கக்கூடிய அடிப்படை உரிமையை மறுதலிக்கும் செயல் என்றும் சாடிய முன்னாள் உச்ச நீதிமன்ற நீதிபதியும் பத்திரிகையாளர் கவுன்சிலின் தலைவருமான மார்க்கண்டேய கட்ஜு, இவர்களைக் கைது செய்த போலீசாரை கிரிமினல் குற்றப் பிரிவுகளின்கீழ் உடனடியாகத் தண்டிக்க வேண்டும் என்றார். இது குறித்து போலீசு உயரதிகாரிகள் விசாரித்து நடவடிக்கை எடுக்க மகாராஷ்டிர முதல்வர் உத்தரவிட்டார். கண்டனங்கள் பெருகத் தொடங்கியதும் மாணவிகள் மீதான இந்த வழக்கு மட்டும் இப்போது தள்ளுபடி செய்யப்பட்டு, தானே புறநகர் போலீசு கண்காணிப்பாளரும் பால்கர் நகர போலீசு ஆய்வாளரும் தற்காலிகப் பணிநீக்கம் செய்யப்பட்டுள்ளனர். மறுபுறம், போலீசு அதிகாரிகளைத் தற்காலிகப் பணிநீக்கம் செய்துள்ளதை எதிர்த்து பால்கர் நகரில் சிவசேனா கடையடைப்புப் போராட்டத்தை நடத்தியுள்ளது.

ஒருபுறம் அரசு பயங்கரவாதக் கருப்புச் சட்டங்கள், மறுபுறம் இந்துவெறி-இனவெறி பாசிச பயங்கரவாதிகள் எனும் இருதலைக் கொள்ளிகளின் நடுவில் நாடும் மக்களும் சிக்கியிருப்பதை மெய்ப்பித்துக் காட்ட இதைவிட வேறென்ன சான்று வேண்டும்?



படிப்பகம்

www.padippkam.com



முஸ்லிம்கள் மீதான பயங்கரவாதத் தாக்குதலுக்கான ஒத்திகை: சிவசேனா மற்றும் இந்துவெறி பாசிச பயங்கரவாதிகளால் இடிக்கப்படும் அயோத்தி பாபர் மசூதி.

களால்தான் பாதிக்கப்படுகிறது என்று இனவெறியூட்டி தாக்குதலை நடத்திய தாக்கரே, அமெரிக்காவின் என் ரானால் மகாராஷ்டிரா சூறையாடப்பட்டதைப் பற்றி கவலைப்படவில்லை. இதுதான் தாக்கரே முன்வைத்த மண்ணின் மைந்தர்கள் எனும் இனவெறி பாசிச அரசியலின் யோக்கியதை.

காங்கிரசின் ஆதரவு இல்லாமல் சிவசேனா இந்த அளவுக்கு வளர்ந்திருக்கவே முடியாது. வசந்தராவ் நாயக், வசந்த்தாதா பட்டீல் ஆகிய காங்கிரசு முதல்வர்கள் சிவசேனாவின் வெறியாட்டங்களுக்குத் துணைநின்றனர். சிவசேனாவை ஒரு கருவியாகக் கொண்டு மும்பையில் தொழிற்சங்க இயக்கம் வலுவடைவதைத் தடுத்தனர். பிவாண்டி கலவரம் குறித்து விசாரணை நடத்திய நீதிபதி மதன் கமிசன் சிவசேனாவையும் இதர காவிக் கும்பல்களையும் குற்றம் சாட்டிய போதிலும், காங்கிரசு அரசு எந்த நடவடிக்கையும் எடுக்கவில்லை.

எல்லாவற்றுக்கும் மேலாக 1992-93இல் அயோத்தி பாபர் மசூதி இடிப்புக்குப் பின்னர், மும்பையில் இந்துவெறியர்களும் சிவசேனா குண்டர்களும் முஸ்லிம்கள் மீது நடத்திய பயங்கரவாதத் தாக்குதலுக்கும் நரவேட்டைக்கும் மூளையாகச் செயல்பட்டவர்தான் பால்தாக்கரே என்று சிறீகிருஷ்ணா கமிசன் குற்றம் சாட்டிய போதிலும், ''மும்பையில் முஸ்லிம்களுக்கு எதிராகத் தாக்குதலை நான்தான் தொடங்கி வைத்தேன். நான் அறிவித்த பிறகுதான் தாக்குதல் நின்றது'' என்று பகிரங்க வாக்குமூலமாக சாம்னா இதழின் தலையங்கத்தில் தாக்கரே எழுதியிருந்த போதிலும், இந்திய அரசு இப்பயங்கரவாதியைத் தண்டிக்காமல் அதிகாரபூர்வ பயங்கரவாதியாக வைத்துப் பாதுகாத்தது. தாக்கரே மீதான இதர வழக்குகளும் அவரது சாம்னா நாளேட்டின் இனவெறிப் பிரச்சாரத்துக்கு எதிரான வழக்குகளும் இன்னமும் நடத்தப்படவேயில்லை. பிரதீபா பட்டீல், பிரணாப் முகர்ஜி ஆகியோர் அரசுத் தலைவர்களான விவகாரங்களில் சிவசேனாவுடனான காங்கிரசின் கள்ளக்கூட்டு அப்பட்டமாக வெளிப்பட்டது.

போலி கம்யூனிஸ்டுகளின் ஆதரவு இல்லாமல் பாசிசம் ஒருக்காலும் அதிகாரத்துக்கு வருவதில்லை. போலி கம்யூனிஸ்டுகளும் போலி சோசலிஸ்டுகளும் சமரச - சந்தர்ப்பவாதப் போக்கைப் பின்பற்றாமல் இருந்திருந்தால், பாசிச சிவசேனா கும்பல் இந்த அளவுக்கு வளர்ந்து வெறியாட்டம் போட்டிருக்கவே முடியாது. பால்தாக்கரேவின் உடல் எரியூட்டப்பட்ட அதே சிவாஜி பூங்கா பகுதியில் 1970-இல் ''பால்தாக்கரேவையும் அவனது கூலிப்படையினரையும் மும்பை வீதிகளில் வெட்டிப் புதைப்போம்!'' என்று சூளுரைத்து 25,000-க்கும் மேற்பட்ட தொழிலாளர்கள் ஊர்வலமாகச் சென்றனர். மத்திய மும்பை தொகுதியின் வலது கம்யூனிஸ்ட் கட்சியின் எம்.எல்.ஏ.வும் தொழிற்சங்கவாதியுமான கிருஷ்ண தேசாய், ஜூன் 6, 1970 அன்று சிவசேனா குண்டர்களால் கொல்லப்பட்ட பின்னர் நடந்த அவரது இறுதி ஊர்வலம்தான் அது. சிவசேனாவுக்கு எதிராகத் தொழிலாளி வர்க்கம் எதிர்த்தாக்குதலுக்குத் தயாராக இருந்தபோதிலும், அன்றைய போலிகம்யூனிசத் தலைமை அமைதி காத்தது. சிவசேனாவை அம்பலப்படுத்தித் தனிமைப்படுத்த எந்த முயற்சியும் எடுக்காமல், அனைத்தையும் சட்டவாத ரீதியில் தீர்த்துக் கொள்ள முயற்சித்தது. உழைக்கும் மக்களிடம் இந்தியப் போலி ஜனநாயகத்தின் மீது மாயைகளை வளர்த்தது.

தேசாயின் துணைவியாரான சரோஜினி தேசாய் அதே தொகுதியில் வலது கம்யூனிஸ்டு கட்சி வேட்பாளராகப் போட்டியிட்டபோது, இடைத்தேர்தலில் அவரைத் தோற்கடித்து, முதன் முறையாக கம்யூனிஸ்டு கோட்டையைத் தகர்த்து முன்னிலும் தீவிரமாக சிவசேனா கும்பல் தொழிற்சங்க இயக்கத்தினரைத் தாக்கத் தொடங்கியது. இவ்வளவுக்கும் பின்னரும், பாசிச இந்திரா ஆதரவு

வடமாநிலத்திலிருந்து பிழைப்புக்காக மும்பையில் குடியேறிய பேல்பூரி வியாபாரியைத் தாக்கும் ராஜ்தாக்கரேவின் இனவெறி பயங்கரவாத குண்டர்படை.





படிப்பகம்

www.padippkam.com

போலிகம்யூனிஸ்டு தலைவரான டாங்கே, ஒருமுறை தாக்கரேயுடன் சேர்ந்து மேடையேறி கைகுலுக்கினார். சோசலிஸ்டு வேடம் போட்ட ஜார்ஜ் பெர்ணான்டஸ் தாக்கரே குடும்பலின் குடும்ப நண்பராகிப் போனார்.

2001 மார்ச் மாதத்தில் பா.ஜ.க. கூட்டணி அரசின் பட்ஜெட்டை எதிர்த்தும், அரசுத்துறை நிறுவனங்களைத் தனியார்மயமாக்குவதை எதிர்த்தும், தொழிலாளர் சட்டங்களைத் தனியார் முதலாளிகளுக்குச் சாதகமாகத் திருத்தம் செய்வதை எதிர்த்தும் இடது, வலது கம்யூனிஸ்டு தொழிற்சங்கங்கள் இணைந்து வேலை நிறுத்தத்துக்கு அறைகூவல் விடுத்தன. அரசியல் ஆதாயத்துக்காக சிவசேனாவும் இந்தப் போராட்டத்தை ஆதரிப்பதாக அறிவித்ததும், அதனைப் போலி கம்யூனிஸ்டு தொழிற்சங்கங்கள் வரவேற்று, தங்களது பொதுக்கூட்டங்களில் பாசிச சிவசேனா குண்டர்படைத் தளபதிகளை மேடையேற்றிக் கூடிக் குலாவின.


அமெரிக்காவின் என்ரான் மின் திட்டத்தை ரத்து செய்வதாகச் சவடால் அடித்துவிட்டு, பின்னர் அதனை ஆதரித்து என்ரான் நிறுவனத்தின் தலைவரான கென்னத் லே-யுடன் கூடிக்குலாவும் பால் தாக்கரே.

போலி கம்யூனிஸ்டுகள், போலி சோசலிஸ்டுகளின் சந்தர்ப்பவாதமும் காங்கிரசின் ஆதரவும் மட்டுமல்ல; எல்லாவற்றுக்கும் மேலாக அதிகாரவர்க்கம், போலீசு, நீதித்துறை அடங்கிய அரசு எந்திரமே இந்துவெறி போதை தலைக்கேறி பாசிச பயங்கரவாத சிவசேனா கும்பலை ஆதரித்து நின்றது. இதனாலேயே இட்லரின் வாரிசாக சிவசேனா இத்தனை காலமும் கொட்டமடிக்க முடிந்துள்ளது. இதுதான் பீற்றிக் கொள்ளப்படும் இந்திய போலி ஜனநாயக அரசியலமைப்பு முறையின் மகிமை. தாக்கரே, மோடி, அத்வானி, இந்திரா, ராஜீவ், எம்.ஜி.ஆர், ஜெயலலிதா - என இத்தகைய பாசிஸ்டுகளும் இன்னும் பல புதிய பாசிஸ்டுகளும் உருவாவதற்கு அடிப்படையாக இருப்பது இந்தியாவின் போலி ஜனநாயக அரசியலமைப்பு முறைதான்.

எந்த அரசுப் பதவியிலும் இல்லாத, இந்துவெறி - இனவெறி பாசிச பயங்கரவாதியான பால்தாக்கரேவின் உடலுக்குத் தேசியக் கொடியைப் போர்த்தி அரசு மரியாதையுடன் இறுதி ஊர்வலம் கொண்டு செல்லப்பட்டுள்ளது. பிற மாநிலத்தவர்களுக்கு எதிராக வன்முறை வெறியாட்டங்களில் ஈடுபட்ட பயங்கரவாதிக்கு, தேசிய ஒருமைப்பாட்டை உபதேசிக்கும் இந்திய அரசு தேசியக் கொடியைப் போர்த்தி மரியாதை செய்தது ஏன் என்பது புரியாத புதிரல்ல. ஏனென்றால் இந்திய அரசானது இந்துத்துவ மேலாதிக்க, பாசிச சர்வாதிகார அரசு.




தாக்கரேவின் பாசிச அரசியல் வாரிசாக அவரது மகன் உத்தவ் தாக்கரேவும், அவரது தம்பி மகன் ராஜ்தாக்கரேவும் உள்ளனர் என்றாலும், நாடெங்கும் பல்வேறு அரசியல் கட்சிகளிலும் இயக்கங்களிலும் அவரது மண்ணின் மைந்தர்கள் கொள்கையை ஆதரித்து அரசியல் நடத்தும் இனவெறியர்கள் இருக்கவே செய்கிறார்கள். வர்க்க அரசியலை மறுத்து, உழைக்கும் மக்களின் ஒற்றுமையைச் சிதைத்து திசைதிருப்பி ஆளும் வர்க்கத்துக்கு வெவ்வேறு அளவுகளில் சேவை செய்யும் இயக்கங்களும் கட்சிகளும் இன்னமும் நீங்காத அபாயமாக நீடிக்கவே செய்கின்றன.

மண்ணின் மைந்தர் கொள்கையை வேரூன்றச் செய்து மகாராஷ்டிராவில் அசைக்க முடியாத பாரம்பரியத்தை நிலைநாட்டியவர், மக்களின் செல்வாக்குமிக்க தலைவர் பால்தாக்கரே என்று இந்துவெறி-இனவெறியர்களும் ஓட்டுப் பொறுக்கி பிழைப்புவாதிகளும் அவரைப் புகழ்ந்து அஞ்சலி செலுத்தி வருந்துகிறார்கள். நாமும் வருந்தத்தான் வேண்டும் - ஒரு பாசிச பயங்கரவாத மாஃபியா கும்பலின் தலைவன் தண்டிக்கப்படாமல் இயற்கையாக மரணமடைந்ததற்காக.

● பாலன்



படிப்பகம்

www.padippkam.com

# தருமபுரி வன்கொடுமைத் தாக்குதல்:

# ஆதிக்க சாதி ஓட்டு வங்கி அரசியலின் விளைவே!

**நக்சல்பாரி புரட்சிகர இயக்கம் கடுமையாக ஒடுக்கப்பட்டு, அதற்கு மாற்றாக ஆதிக்க சாதி ஓட்டு வங்கி அரசியல் திட்டமிட்டு வளர்க்கப்பட்டதன் விளைவுதான், நாயக்கன்கொட்டாயில் நடந்திருக்கும் வன்கொடுமை வெறியாட்டம்.**

உயிரை மட்டும் மிச்சம் வைத்து விட்டு, வாழ்க்கையை உருத்தெரியாமல் அழிப்பது என்பதற்கு நடைமுறை எடுத்துக்காட்டுதான், நவம்பர் 7-ஆம் தேதியன்று தருமபுரி மாவட்டத்தின் 3 கிராமங்களில் தாழ்த்தப்பட்ட மக்கள் மீது வன்னிய சாதிவெறியர்கள் நடத்தியிருக்கும் வன்கொடுமைத் தாக்குதல்.

தருமபுரியிலிருந்து சுமார் 10 கி.மீ. தொலைவில் உள்ளது நாயக்கன் கொட்டாய். நக்சல்பாரி இயக்கத்தின் அரசியல் செல்வாக்கு காரணமாக, சாதிவெறி தலையெடுக்காமல் தடுக்கப்பட்டிருந்த மாவட்டம் தருமபுரி. தோழர் பாலன் தலைமையில் தனிக்குவளை முறை போராடி ஒழிக்கப்பட்ட இடம் நாயக்கன் கொட்டாய். தாழ்த்தப்பட்ட மக்கள் மீது விதிக்கப்பட்டிருக்கும் அடிமைத் தொழில்கள் ஒழிக்கப்பட்டிருப்பது அந்த வட்டாரம். நக்சல்பாரி இயக்கத்தின் முன்னணித் தியாகிகளான தோழர்கள் அப்பு, பாலன் ஆகியோரது நினைவுச் சின்னம் நிறுவப்பட்டிருக்கும் இடமும், தமிழகத்தில் நக்சல்பாரி அமைப்புகள் செல்வாக்குப் பெற்றிருந்த ஊருமான நாயக்கன் கொட்டாய்தான் இன்று ஆதிக்க சாதிவெறியின் அடையாளமாகியிருக்கிறது. நக்சல்பாரி இயக்கம் கடுமையான ஒடுக்குமுறைக்கு ஆளாக்கப்பட்டு, சாதி அமைப்புகள் எனும் நச்சுப் பாம்புகள் திட்டமிட்டுத்தூண்டி வளர்க்கப்பட்டதன் விளைவே, நவம்பர்-7 அன்று நடந்திருக்கும் சாதிவெறித்தாக்குதல்.

நத்தம் காலனியைச் சேர்ந்த இளவரசன் என்னும் தாழ்த்தப்பட்ட இளைஞனுக்கும், செல்லன் கொட்டாயைச் சேர்ந்த திவ்யா என்ற வன்னியர் சாதிப் பெண்ணுக்கும் இடையிலான காதல் திருமணம்தான் இந்தத் தாக்குதலுக்கான முகாந்திரமாகப் பயன்பட்டிருக்கிறது. போலீசு வேலைக்குத் தெரிவு செய்யப்பட்டிருக்கும் இளவரசனும், செவிலியர் பட்டத்துக்குப் படித்து வரும் திவ்யாவும் இரண்டு ஆண்டுகளாகக் காதலித்து வருவது அனைவருக்கும் தெரியும் என்றும், இரு சமூகங்களையும் சேர்ந்த சில இளைஞர்களின் ஒத்துழைப்புடன்தான் கடந்த ஒன்றரை மாதங்களுக்கு முன்னர் அவர்களது திருமணம் நடந்ததாகவும் நத்தம் காலனி மக்கள் கூறுகின்றனர்.

அக்டோபர் 14-ஆம் தேதி பதிவுத் திருமணம் செய்து கொண்டு, டி.ஐ.ஜி. சஞ்சீவ் குமார் மற்றும் எஸ்.பி. அஸ்ரா கார்க்கிடம் இளவரசனும் திவ்யாவும் பாதுகாப்பு கோரியிருக்கின்றனர். மணமகனின் பெற்றோர் திருமணத்தில் கலந்து கொண்டிருக்கின்றனர். பெண் வீட்டார் யாரும் திருமணத்தில் கலந்து கொள்ளவில்லை. பெண்ணின் தந்தை நாகராஜ், இந்தக் காதலுக்கு எதிர்ப்பு தெரிவித்திருக்கிறார். சாதி உணர்வின் காரணமாக, இந்த திருமணத்தை தனக்கு நேர்ந்த தனிப்பட்ட அவமானமாக நாகராஜ் கருதிய போதிலும், அதற்கு மேல் வேறு எந்த நடவடிக்கையிலும் ஈடுபடும் நோக்கம் அவருக்கு இல்லை. அன்றாடம் நத்தம் காலனி வழியாகத்தான் அவர் வேலைக்குச் செல்வார் என்றும், தாழ்த்தப்பட்ட மக்களுடன் நட்பாகப் பழகக் கூடியவர் என்றும் நாகராஜைப் பற்றி நத்தம் காலனி மக்கள் கூறுகின்றனர். இந்த திருமணத்தைச் சாக்கிட்டு தாக்குதலை நடத்த வேண்டும்

நத்தம் காலனியில் நடந்த வன்னிய சாதி வன்முறை வெறியாட்டத்தின் சாட்சி: அடித்து நொறுக்கி தீ வைத்துக் கொளுத்தப்பட்ட தனது வீட்டில் மிச்சம் மீதி ஏதாவது தேறுமா எனத் தேடும் தாழ்த்தப்பட்டோரின் அவலம்.





படிப்பகம்

www.padippkam.com

என்பதில் தீவிரம் காட்டியவர்கள் வன்னிய சாதியைச் சேர்ந்த ஆதிக்க சக்திகளும், சாதிவெறியர்களும்தான்.

வன்னிய சாதி வெறியர்கள்தான் அவரை மானங்கெட்டவன் என்றும், போறான் பாரு பறயன் சம்மந்தி என்றும் ஏசியிருக்கின்றனர். உன்னால் சாதிக்கே கேவலம் என்றும், தலைகுனிவு என்றும் தூற்றியிருக்கின்றனர். நாகராஜின் தனிப்பட்ட கவுரவப் பிரச்சினை என்ற வரம்பிற்குள் நின்றிருந்தால், இது தாக்குதலாக வெடித்திருக்காது. காலப்போக்கில் பெண் வீட்டார் சகஜ உறவுக்கும் வந்திருக்கக் கூடும்.


தனது பதினைந்து வருட உழைப்பு வன்னிய சாதி வெறியர்களால் சிதைக்கப்பட்டதைத் தாங்க முடியாத துயரத்தோடு காட்டும் அண்ணா நகரைச் சேர்ந்த மாது.

அப்படி ஒரு விபரீதம் நடந்துவிடக்கூடாதே என்பதுதான் சாதிவெறியர்களின் கவலையாக இருந்திருக்கிறது. அதனால்தான் திருமணம் முறைப்படி நடந்துவிட்டது என்று தெரிந்த பின்னரும், அடுத்த மூன்று நாட்களில் பையனின் தந்தையை உள்ளூர் போலீசு நிலையத்துக்கு வரவழைத்துப் பெண்ணின் பாதுகாப்புக்கு நான்தான் பொறுப்பு என்று அவரிடம் எழுதி வாங்கியிருக்கிறார்கள். பஞ்சாயத்துக் கூட்டத்தைக் கூட்டி பெண்ணைக் கொண்டு வந்து ஒப்படைக்குமாறு நத்தம் காலனி மக்களை மிரட்டத் தொடங்கியிருக்கிறார்கள் சாதிவெறியர்கள்.

பா.ம.க. தருமபுரி ஒன்றிய பொருளாளர் மதியழகன், கொண்டாம்பட்டி பஞ்சாயத்து தலைவர் பொன்னுசாமி ஆகியவர்கள் இந்தப் பஞ்சாயத்தில் முன்நின்றதாகவும், கண்பார்டி முருகன் பஞ்சாயத்துக்குத் தலைமை தாங்கியதாகவும் சொல்கிறார் நத்தம் காலனியின் ஊர்த் தலைவர்.

''பஞ்சாயத்தில் 500, 600 பேர் இருப்பார்கள். ஒரே வார்த்தைதான் - பொண்ணைக் கொண்டாந்து வுடு என்பார்கள். சட்டப்படித் திருமணம் செய்தவங்களாச்சேன்னு சொன்னா, சட்டம் கிடக்கட்டும், பொண்ண கொண்டாந்து விடுங்கன்னுதான் பேசுவாங்க. நாங்க பதில் பேசினா பறப்பசங்களுக்குத் திமிரான்னு கூட்டத்திலேருந்து திட்டுவாங்க. உன் பொண்டாட்டிய தூக்கிட்டுப் போனா ஒத்துக்குவியான்னு கேப்பாங்க. பையனோட அப்பா பொண்ணை ஒப்படைச்சிடலாம்னுதான் நெனச்சாரு. ஆனால், அந்தப் பொண்ணுக்குப் பொறுப்புன்னு கையெழுத்து போட்டிருக்கார். பொண்ண ஒப்படைச்சி, அப்புறம் அதுக்கு ஏதாவது ஆனா, தான்தான் பொறுப்புங்கிறதால மறுத்துட்டாரு. இருந்தாலும் ஊர்சார்புல கேட்டதால ஏத்துகிட்டாரு'' - என்று நடந்ததை விளக்கினார் நத்தம் ஊர்த் தலைவர்.

நவம்பர் 5-ஆம் தேதியன்று பஞ்சாயத்தில் நத்தம் மக்களை மிரட்டி எச்சரிக்கை விட்டிருக்கிறார்கள். நவம்பர் 7-ஆம் தேதி காலை திவ்யா வீட்டார் சார்பில் அவருடைய அம்மா, பெரியம்மா, சித்தப்பா உள்ளிட்ட உறவினர்களும், நத்தம் ஊர் சார்பில் 10 பேரும் தொப்பூர் என்ற ஊருக்குச் சென்று திவ்யாவையும், இளவரசனையும் சந்தித்திருக்கின்றனர். திவ்யாவின் அம்மா தேன்மொழி, திவ்யாவின் காலைப் பிடித்து வீட்டிற்கு வா என அழுது கூப்பிட்டும், திவ்யா வர மறுத்திருக்கிறார். திவ்யாவின் உறவினர்கள் அவளைத் தனியாக அழைத்துச் சென்றும் பேசிப் பார்த்திருக்கின்றனர். ''வீட்டிற்குக் கூட்டிச் சென்று என்னைக் கொல்லத்தானப் போறீங்க, அதற்கு இங்கேயே என்னைய கொல்லுங்க'' என்று அவர் கூறியிருக்கிறார்.

''உன் பொண்ணு வரமாட்டேங்குறா, நீ இருக்குறதுக்கு தூக்கு போட்டு சாகலாம்'' என்று உறவினர்கள் நாகராஜிடம் சொன்னதாகவும், அதனால் மனமுடைந்து அவர் தற்கொலை செய்து கொண்டதாகவும் சிலர் கூறுகின்றனர். அவருடைய மரணத்தில் மர்மம் இருக்கிறது என்று கூறுகிறார்கள் நத்தம் காலனி மக்கள். நாகராஜின் மரணத்தைத் தொடர்ந்து நடைபெற்ற நிகழ்வுகள், அது தற்கொலையாக இருக்க முடியாது என்ற சந்தேகத்தையே ஏற்படுத்துகின்றன.

நாகராஜின் உடலை அன்று மாலை 4 மணிக்கு நத்தம் காலனிக்குள் கொண்டு வந்து, பையன் வீட்டு வாசலில் வைத்து, அந்தப் பையன் வீட்டை முதலில் உடைத்திருக்கிறது நூறு பேர் கொண்ட கும்பல். பிறகு உடலை தருமபுரி - திருப்பத்தூர் சாலைக்கு கொண்டு சென்று, அங்கே வைத்து மறியல் செய்யத் தொடங்கியிருக்கின்றனர். பைக், வேன், டெம்போ, மினி லாரியில் சுமார் 2000-க்கும் மேற்பட்டவர்கள் கண்ணிமைக்கும் நேரத்தில் திரண்டுள்ளனர். ஒரு கும்பல் சடலத்தின் அருகில் இருக்க, இன்னொரு கும்பல் மரங்களை அறுத்துப் போட்டுச் சாலைகளை மறித்தது. மீதமுள்ளவர்கள் 400, 500 பேர் கொண்ட மூன்று குழுக்களாகப் பிரிந்து நத்தம் காலனி, கொண்டாம்பட்டி, அண்ணாநகர் ஆகிய கிராமங்களுக்குள் வெறிக்கூச்சலுடன் புகுந்திருக்கின்றனர்.



படிப்பகம்

www.padippkam.com




போலீசு பாதுகாப்போடு பள்ளிக்கூடத்திற்குச் செல்லும் நத்தம் காலனியைச் சேர்ந்த தாழ்த்தப்பட்ட சிறுவர்கள்.

கடப்பாரை, சம்மட்டி, கோடாரி, பெட்ரோல் கேன், பெட்ரோல் பாம் பாட்டில்களுடன் வெறிக்கூச்சலிட்டுப் புகுந்துள்ளனர். ஒவ்வொரு வீடாகச் சென்று, கதவினை உடைத்து உள்ளே புகுந்து பீரோக்களை உடைத்து நகைகளையும் பணத்தினையும் கொள்ளையடித்துள்ளனர். துணிமணிகள், புத்தகங்கள், குடும்ப அட்டைகள், சான்றிதழ்கள், நிலப்பத்திரங்கள், மெத்தை, சோபா போன்றவற்றைக் கிழித்தெறிந்து மொத்தமாக எரித்துள்ளனர். கேஸ் சிலிண்டர்களைக் கழற்றி தாங்கள் கொண்டுவந்த வாகனங்களில் ஏற்றியுள்ளனர். தாங்கள் கொண்டுவந்திருந்த பெட்ரோலை பெயின்ட் அடிக்கும் ஸ்பேயரில் நிரப்பி வீடு முழுவதும் பீய்ச்சி அடித்துள்ளனர். பிறகு வெளியிலிருந்து பெட்ரோல் குண்டுகளை வீசித் தீக்கிரை யாக்கியுள்ளனர்.

ஓட்டு வீடுகளின் மேலே ஏறி, பெரிய கல்லால் அவற்றினை உடைத்துச் சேதப்படுத்தியுள்ளனர். மின்சார மற்றும் தண்ணீர் பைப் லைன்களையும், மீட்டர் பெட்டிகளையும் அடித்து நொறுக்கியுள்ளனர். வெளியே நின்றிருந்த சைக்கிள், மோட்டார் சைக்கிள் போன்ற இரு சக்கர வாகனங்களைத் தீயிட்டு கொளுத்தியுள்ளனர். உடைக்க முடியாத பீரோக்களையும், ஆடுகளையும் தங்களது வாகனங்களில் ஏற்றிச் சென்றுள்ளனர். நத்தம் காலனி கொடகாரி அம்மன் கோயிலுக்குச் சொந்தமான 5 கிலோ தங்கம் மற்றும் 22 கிலோ வெள்ளி போன்ற விலை உயர்ந்த நகைகளை, அவை பாதுகாக்கப்பட்டிருந்த பெட்டகத்தை உடைத்துக் கொள்ளையடித்திருக்கின்றனர். மூன்று ஊர்களிலுமாக மொத்தம் 300-க்கும் மேற்பட்ட வீடுகள் நொறுக்கப்பட்டிருக்கின்றன. 100-க்கும் மேற்பட்ட இரு சக்கர வாகனங்கள், நூற்றுக்கும் மேற்பட்ட சைக்கிள்கள், சில நான்கு சக்கர வாகனங்கள் உருத்தெரியாமல் எரித்துச் சிதைக்கப்பட்டிருக்கின்றன.

நாயக்கன் கொட்டாய், சோனயம்பட்டி, புளியம்பட்டி, சவுலுப்பட்டி, சீராம்பட்டி, ஒன்னியம் பட்டி, குடூர், ஆண்டிப்பட்டி, கதிர்நாயக்கன் நள்ளி, கொல்லுப்பட்டி, மொரப்பூர், கெங்குசெட்டிப்பட்டி, குண்டல்பட்டி - எனப் பல ஊர்களிலிருந்து சாதி வெறியர்கள் திரட்டப்பட்டிருக்கின்றனர். காரிமங்கலம் பெட்ரோல் பங்கிலிருந்து பெட்ரோலும், ஒன்னியம் பட்டி, கோணம்பட்டி ரேஷன் கடைகளிலிருந்து மண்ணெண்ணையும் கொண்டு வரப்பட்டிருக்கின்றன.

ஒன்றிய கவுன்சிலர் கிருஷ்ணமூர்த்தி, வெள்ளாளப்பட்டி பஞ்சாயத்துத் தலைவர் ராஜா, மெடிகல் சிவா, கவுன்சிலர் பச்சையப்பன், லாரி மாது (செங்கல்மேடு), கொண்டம்பட்டி பஞ்சாயத்து தலைவர் பொன்னுசாமி, பா.ம.க. ஒன்றியச் செயலர் மதியழகன் போன்றோர் தாக்குதலுக்குத் தலைமை தாங்கியிருக்கின்றனர்.

தாக்குதல் தொடங்கிய நேரம் மாலை 4 மணியாதலால் ஊரில் ஆண்கள் இல்லை. பெண்கள் குழந்தைகளைத் தூக்கிக் கொண்டு கரும்புக்காட்டுக்கு உயிர் தப்பி ஓடி, இரவு முழுவதும் அங்கே ஒளிந்திருக்கின்றனர். தீயும் புகையும் சூழ்ந்து மூச்சடைத்துப் போன குழந்தைகளை, மற்ற குழந்தைகளின் சிறுநீரைக் குடிக்க வைத்துக் காப்பாற்றியிருக்கிறார்கள் பெண்கள்.

நடக்கவிருக்கும் தாக்குதல் பற்றி போலீசுக்கு ஏற்கெனவே தெரியும். நாயக்கன் கொட்டாய் பகுதியில் நிரந்தரமாகக் குடியிருக்கும் நக்சல் பிரிவு மற்றும் க்யூ

தனிக்குவளை முறை உள்ளிட்டு தாழ்த்தப்பட்டோர் மீது திணிக்கப்பட்டிருந்த அடிமைத்தனத்தை தமது போராட்டங்களின் மூலம் ஒழித்துக்கட்டிய நக்சல்பாரி புரட்சியாளர்களான தோழர்கள் அப்பு மற்றும் பாலனின் தியாகத்தைப் போற்றி நாயக்கன் கொட்டாயில் நிறுவப்பட்டுள்ள நினைவுச் சின்னம்.





படிப்பகம்

www.padippkam.com

பிரிவு போலீசார், கிருஷ்ணாபுரம் இன்ஸ்பெக்டர் போன்றோரிடம் நத்தம் காலனியிலிருந்து புகார் செய்து தாக்குதலைத் தடுக்குமாறு மன்றாடியிருக்கின்றனர். போலீசார் கண்டுகொள்ளவில்லை. சுமார் 100 போலீசாரும், தீயணைப்பு வண்டிகளும் தாக்குதலை வேடிக்கைதான் பார்த்திருக்கின்றனர். மாவட்ட எஸ்.பி. அஸ்ரா கார்க் பரமக்குடியிலிருந்து வந்து சேர்ந்த பின்னர்தான் கைது நடவடிக்கைகளே தொடங்கியுள்ளன. சுமார் 2000 பேருக்கு மேல் வன்முறையில் ஈடுபட்டிருந்தும், பத்து சதவீதம் பேர்கூட இதுவரை கைது செய்யப்படவில்லை.

அழிவு வேலையைக்கூட நுணுக்கமாகவும் வக்கிரமாகவும் நிதானமாகவும் செய்து முடித்திருக்கிறார்கள் சாதி வெறியர்கள். தரைக்கு டைல்ஸ் பதிக்கப்பட்ட வீடுகளில் அவை தூள் தூளாக நொறுக்கப்பட்டிருக்கின்றன. மாடி வீட்டின் மொட்டை மாடி உட்பட அனைத்தும் சேதமாக்கப்பட்டு, சுவர்களும் கூரையும் பிளக்கப்பட்டிருக்கின்றன. பெட்டிக்கடை, சவுண்டு சர்வீஸ், மரச்சாமான் வியாபாரம், பாத்திர வியாபாரம் போன்ற தொழில் செய்வோரின் ஆதாரங்கள் அனைத்தும் அழிக்கப்பட்டிருக்கின்றன. 4 நாட்களில் நடக்கவிருக்கும் மகளின் திருமணத்திற்கு வாங்கி வைத்த நகைகள் கொள்ளையிடப்பட்டிருக்கின்றன.

இந்த தாக்குதல் திடீரென்று நடத்தப்பட்டதல்ல. மிகவும் நிதானமாக சுற்றுவட்டார கிராமங்களிலிருந்து வன்னிய சாதியினரைத் திரட்டி, ஆயுதங்கள் - எரிபொருள் ஆகியவற்றைக் கையாளும் முறை பற்றி சொல்லிக் கொடுத்து, திருட்டில் கைதேர்ந்தவர்களை வைத்துக் கொள்ளையடிக்கவும் ஏற்பாடு செய்து, உயிர்ச்சேதத்தை மட்டும் தவிர்த்து இந்த வெறியாட்டம் நடத்தப்பட்டிருக்கிறது. குஜராத்தில் இந்துவெறியர்கள் நடத்திய வன்முறையைப் போன்றே இது திட்டமிட்டு நடத்தப்பட்டிருக்கிறது. இத்தாக்குதல் நடப்பதற்கு சில நாட்களுக்கு முன்னர் காடுவெட்டி குரு அப்பகுதிக்கு வந்து சென்றதாகவும் கூறுகின்றனர். இது மேலிருந்து திட்மிட்டு நடத்தப்பட்ட தாக்குதல் என்பதில் எவ்வித ஐயமும் இல்லை.

இது ஒரு காதல் திருமணம் தோற்றுவித்த கோபத்தில் வெடித்த வன்முறை அல்ல. நீண்டகாலமாக கனன்று கொண்டிருந்த சாதிவெறி. இப்பகுதியில் பெரும்பாலான தாழ்த்தப்பட்ட மக்கள் கோவையிலும், திருப்பூரிலும், பெங்களூரிலும் கடுமையாக உழைத்து சம்பாதித்த பணத்தில் ஓரளவு வசதிகளோடு வாழ்ந்துள்ளனர். தங்களிடம் கைகட்டி நிற்காமல், சுயமாக அவர்கள் அடைந்திருந்த வாழ்க்கைத் தரம்தான் சாதிவெறியர்களின் ஆத்திரத்தில் எண்ணெய் வார்த்திருக்கிறது. தங்களுடைய வீட்டில் சாப்பிட்டவர்கள்தான் வீட்டின் மீது பெட்ரோல் குண்டுகளை எரிந்த தாகவும், காலையில் தன்னிடமிருந்து பைக்கை வாங்கி ஓட்டியவன், மாலையில் அதனை எரித்திருப்பதாகவும் கூறுகின்றனர் தாழ்த்தப்பட்ட இளைஞர்கள்.




**வன்னிய சாதிவெறியாட்டத்துக்கு எதிராக...**

தாக்குதல் நடைபெற்ற மறு தினமே பென்னாகரம் வட்ட வி.வி.மு. மற்றும் தருமபுரி மாவட்ட மனித உரிமைப் பாதுகாப்பு மையத்தின் வழக்குரைஞர்கள் தாக்குதலுக்குள்ளான கிராமங்களுக்கு நேரில் சென்று மக்களுக்கு ஆறுதல் கூறினார்கள். உடைமைகள் அனைத்தையும் இழந்து நிராதரவாக நின்ற அம்மக்களுக்கு விவசாயிகள் விடுதலை முன்னணி சார்பில் நிவாரணப் பொருட்கள், தானியங்கள், உடைகள் சேகரித்து வழங்கப்பட்டன. மனித உரிமைப் பாதுகாப்பு மையத்தின் சார்பிலான உண்மை அறியும் குழுவைச் சேர்ந்த பத்து வழக்குரைஞர்கள் பாதிக்கப்பட்ட மக்களைச் சந்தித்தது. ம.க.இ.க; வி.வி.மு; பு.மா.இ.மு; பு.ஜ.தொ.மு; ஆகிய அமைப்புகளின் சார்பில் இந்த சாதிவெறித் தாக்குதலுக்கு எதிரான சுவரொட்டிப் பிரச்சாரமும், ஆர்ப்பாட்டங்களும் நடத்தப்படுகின்றன.

தாழ்த்தப்பட்ட மக்களுடைய வாழ்க்கைத் தரம் சற்று மேம்பட்டிருப்பதைப் பார்க்கச் சகிக்காமலும், வயிறெரிந்து கொண்டிருந்த ஆதிக்க சாதிவெறி, தாக்குதல் நடத்துவதற்கு ஒரு தருணத்திற்காக காத்திருந்ததையே இந்த வெறியாட்டம் காட்டுகிறது. கடுமையாக உழைத்துச் சேர்த்த பணத்தில் அம்மக்கள் தங்கள் தலைமுறையிலேயே முதன்முறையாக எட்டியிருந்த பல வசதிகளை, ஒவ்வொன்றாகத் தேடிக் கண்டுபிடித்து அழித்திருக்கின்றனர். ஓலைக்குடிசை, அலுமினியப் பாத்திரம் என்ற வாழ்நிலைக்கு மீண்டும் அம்மக்களைத் துரத்தவேண்டும் என்ற வன்மத்தை மனதிற்கொண்டுதான் இந்த வன்முறை நிகழ்த்தப்பட்டிருக்கிறது.

கொண்டம்பட்டியில் ஒன்றரை ஆண்டுகளுக்கு முன் ஒரு தாழ்த்தப்பட்ட இளைஞரும் வன்னிய சாதிப் பெண்ணும் திருமணம் செய்திருக்கின்றனர். அப்போது தேர்தல் நேரம் என்பதால், ஓட்டுகள் போய்விடும் என்று கருதி ஏதும் செய்யவில்லை. அன்று வருத்தத்தில் இருந்த



படிப்பகம்

www.padippkam.com

பெண் வீட்டார் இப்போது சகஜமாகி, மருமகனுடன் சுமுக உறவு வைத்திருக்கின்றனர். இது சாதிவெறியர்களின் வெறியை அதிகப்படுத்தியிருக்கிறது. கொண்டம்பட்டிமீது தாக்குதல் நடத்துவதற்கு இது முக்கியமான காரணம்.

அண்ணா நகரில் அருந்ததியர் காலனிக்கு நிலம் ஒதுக்கீடு செய்தபோது, காலனி வந்தால் தங்கள் நிலத்துக்கு சுற்றித்தான் செல்லவேண்டும் என்பதால், அதனைக் கட்டக்கூடாது என்று வன்னியர்கள் எதிர்ப்பு தெரிவித்திருக்கின்றனர். எதிர்ப்பை மீறி இடம் ஒதுக்கப்பட்டு காலனி வீடுகள் கட்டப்பட்டுவிட்டன. சந்தர்ப்பத்துக்காக காத்திருந்து, தற்போது தாக்குதல் தொடுத்திருக்கின்றனர் சாதிவெறியர்கள்.

தாழ்த்தப்பட்ட மக்களுக்கு எதிரான வன்முறையில் ஈடுபட்ட ஆதிக்க சாதிவெறியர்கள் ஆத்திரம் கொள்வதற்கு அவரவர்க்கு உரிய காரணங்கள் இருந்திருக்கின்றன. குறிப்பான காரணம் ஏதும் இல்லையென்றாலும், தங்களைச் சார்ந்திராமல், சொந்தக்காலில் அம்மக்கள் நிற்பதும், கவுரவமான வாழ்க்கை வாழ்வதுமே சாதிவெறியர்கள் ஆத்திரம் கொள்ளப் போதுமான காரணமாக இருந்திருக்கிறது. இளவரசன் - திவ்யா காதல் திருமணம் என்பது இத்தாக்குதலுக்கான ஒரு முகாந்திரம் மட்டுமே.



ராமதாசு மற்றும் திருமாவளவன் இடையே அமைந்த தேர்தல் கூட்டணி தீண்டாமை- வன்கொடுமையை ஏன் ஒழிக்கவில்லை?

•••

இந்தச் சாதிவெறியர்கள் பெரும் நிலவுடைமையாளர்கள் இல்லையென்றபோதிலும், இவர்கள் ஒரு புதியவகை ஆதிக்க சக்திகள். இட ஒதுக்கீட்டுக்காகப் பிற்படுத்தப்பட்டோர், மிகவும் பிற்படுத்தப்பட்டோர் என்றும்; சமூக ஆதிக்கத்தை நிலைநிறுத்திக் கொள்வதற்கு சத்திரிய சாதியினர் என்றும் தம்மை அழைத்துக் கொள்ளும் வன்னியர், தேவர், கவுண்டர் போன்ற சாதிகளில் தனியார்மய - தாராளமயக் கொள்கைகள் புதிய ஆதிக்க சக்திகளை உருவாக்கியிருக்கின்றன. சுயநிதிக் கல்லூரி, ரியல் எஸ்டேட், பன்னாட்டு நிறுவனங்களின் ஏஜென்சிகள், செக்யூரிட்டி ஏஜென்சிகள், கந்துவட்டி பைனான்சு, பிற ஏற்றுமதி சார்ந்த தொழில்கள் போன்றவற்றில் ஈடுபட்டுக் கொழுத்திருக்கும் இந்தச் சாதிகளைச் சேர்ந்த ஆதிக்க சக்திகள்தான், சாதிக்கட்சிகளின் தூண்கள். தத்தம் சாதிகளில் தமக்குத் தேவைப்படுகின்ற சமூக அடித்தளத்தை உருவாக்கிக் கொண்டு, அரசியல் அதிகாரத்தில் பங்கு பெறுவதை நோக்கமாகக் கொண்டிருக்கும் இவர்கள்தான், தற்போதைய சாதிவெறி நடவடிக்கைகளின் பின்புலத்தில் இருப்பவர்கள்.

இருபது ஆண்டுகளுக்கு முன்னர் தனது வன்னிய சாதிச் சங்க முகத்தை மறைத்துக் கொண்டு பாட்டாளி மக்கள் கட்சி என்று பொய்முகம் காட்டி, வன்னிய, தாழ்த்தப்பட்ட, இசுலாமியக் கூட்டணி கனவு கண்ட ராமதாசின் பிழைப்புவாதம் இன்று அம்பலப்பட்டு விட்டது. இனி எந்தக் கொள்கையையும் சொல்லித் தனது சொந்த சாதியினர் மத்தியிலேயே தான் செல்வாக்கு பெற முடியாது என்ற நிலையில்தான், வெளிப்படையாகவும் கிரிமினல்தனமாகவும் ராமதாசு சாதிவெறியைத் தூண்டுகிறார்.

வன்னியப் பெண்களை மட்டுமின்றி, தாழ்த்தப்பட்ட அல்லாத எல்லா சமூகத்துப் பெண்களையும் தலித் இளைஞர்கள் காதலிப்பதாகச் சொல்லி ஏமாற்றிப் பணம் பறிப்பதாக ஒரு கட்டுக்கதையைப் பரப்பி, ஆதிக்க சாதியினர் அனைவரையும் தாழ்த்தப் பட்ட மக்களுக்கு எதிராகத் திருப்பி, அவர்கள் அனைவரின் பிரதிநிதியாகத் தன்னை முன்னிறுத்திக் கொள்ள முயற்சிக்கிறார். திராவிடக் கட்சிகளுக்கு மாற்றாக சாதிக் கட்சிகளின் கூட்டணி என்று ராமதாசு முன்வைப்பது முக்குலத்தோர், கவுண்டர் உள்ளிட்ட எல்லா ஆதிக்க சாதியினருக்கும் உவப்பானதொரு முழக்கம். அதனால்தான் நாய்க்கன் கொட்டாயில் இத்தகையதொரு கொடூரமான வன்கொடுமைத் தாக்குதலை நடத்திவிட்டு, நாகராஜை தற்கொலைக்குத் தூண்டியவர்கள் மீது நடவடிக்கை எடு என்று திமிர்த்தனமாக பா.ம.க. பேசுகிறது.

மருத்துவர் ஐயாவுக்கு முற்போக்கு முகச்சாயம் பூசியவர்களும், ‘‘தமிழ்க்குடிதாங்கி’’ பட்டம் கொடுத்தவர்களும், தாழ்த்தப்பட்டோர்-பிற்படுத்தப்பட்டோர் ஒற்றுமை பேசியவர்களும், சாதிகளுக்கிடையிலான ஒற்றுமை பேசியவர்களும் இப்போது பம்முகிறார்கள். பார்ப்பனரல்லாத இடைநிலைச் சாதிகளின் ஆதிக்க சக்திகள் தாழ்த்தப்பட்ட மக்கள் மீது வன்கொடுமை இழைப்பதென்பது புதிதல்ல. சாதிவெறி இலைமறை காயாக இல்லாமல் வெளிப்படையாக வருகிறது என்பதுதான் இப்போது புதியது.



படிப்பகம்

www.padippkam.com

சாதி, உட்சாதி அடையாளங்களை அங்கீகரிக்க வேண்டுமென்றும், கம்யூனிஸ்டுகள் அவற்றை அங்கீகரிக்க மறுப்பதாகவும் கூறி கம்யூனிச எதிர்ப்பு அரசியலை முன்நின்று நடத்தியவர்கள்தான் இதற்குப் பதில் சொல்ல வேண்டும். அடையாள அரசியல் என்பது சாதி அடையாளங்களை உறுதிப்படுத்தவும், சாதி - உட்சாதிப் பிளவுகளை அதிகப்படுத்தவும்தான் பயன்பட்டிருக்கிறது. அது அவ்வாறு மட்டுமே பயன்பட முடியும். சாதி என்ற நிறுவனமே ஜனநாயகத்துக்கு எதிரானது. சாதியின் அடிப்படையில் திரட்டப்படும் மக்களை வைத்து சாதி ஒழிப்பையோ, ஜனநாயகத்தையோ ஒருக்காலும் கொண்டுவர முடியாது. எந்த முற்போக்கான கோரிக்கையையும் சாதிக்க முடியாது. பிற்படுத்தப்பட்ட சாதிகளுக்கு மட்டுமல்ல, தாழ்த்தப்பட்டோர் மத்தியிலான சாதிகள் - உட்சாதிகளுக்கும் இது பொருந்தும்.

நக்சலைட்டு அரசியலின் செல்வாக்கு இருந்தவரை சாதி ஆதிக்கம் இல்லை என்பது, நத்தம் காலனி உள்ளிட்ட ஊர்களின் மக்கள் மட்டுமின்றி, முதலாளித்துவ ஊடகங்களும் இன்று ஒப்புக்கொள்ளும் உண்மை. இது வெற்றுப் பெருமை அல்ல, வர்க்க அரசியலின் வலிமை. புரட்சிகர அரசியலை நசுக்கி விட்டு, அந்த இடத்தில் சாதிய அரசியலையும், ஓட்டுச்சீட்டு பிழைப்புவாதத்தையும் மாற்றாக நுழைத்ததன் விளைவுதான் சாதிவெறியின் செல்வாக்கு.

வன்னிய சாதிவெறியர்கள் மற்றும் ஆதிக்க சாதிவெறியர்களுக்குத் தண்டனையும், பாதிக்கப்பட்ட தாழ்த்தப்பட்ட மக்களுக்கான நிவாரணமும், நீதியும் கிடைக்கப் போராடுகின்ற அதே நேரத்தில், தமிழகம் முழுவதும் தலையெடுத்து வரும் சாதிய அரசியலை நேருக்கு நேர் மோதி முறியடிப்பதும் அவசரக் கடமையாக இருக்கிறது.

● **அஜித்**

தகவல் உதவி : வி.வி.மு; பென்னா கரம் மற்றும் மனித உரிமைப் பாதுகாப்பு மையம்.

## 2ஜி ஏலம்:

# காங்கிரசு-கார்ப்பரேட் கும்பலின் கூட்டுக் களவாணித்தனம்!

உச்ச நீதிமன்றம் 2ஜி அலைக்கற்றை ஊழல் தொடர்பாக கடந்த பிப்ரவரி மாதம் அளித்த தீர்ப்பில், முன்னாள் தொலைத்தொடர்புத் துறை அமைச்சர் ஆ.ராசாவால் ஜனவரி, 2008-இல் ஒதுக்கீடு செய்யப்பட்ட 122 அலைக்கற்றை உரிமங்களை ரத்துசெய்ததோடு, அந்த உரிமங்களை ஏலமுறையில் மீண்டும் ஒதுக்கீடு செய்ய வேண்டுமென மைய அரசிற்கு உத்தரவிட்டிருந்தது. அதன்படி, ரத்து செய்யப்பட்ட அந்த உரிமங்களின் ஒரு பகுதியை மீண்டும் ஒதுக்கீடு செய்வதற்கு நடத்தப்பட்ட ஏலம் ‘எதிர்பார்த்த’ பலன்களை அளிக்காமல் தோல்வியில் முடிந்துவிட்டதாகக் கூறி, அதனைக் கொண்டாடியும் வருகிறது, காங்கிரசு.

நாடெங்கிலுமுள்ள 22 தொலைபேசி வட்டங்களுக்கும் நடந்த இந்த ஏலத்தில், அதிக வருவாயை ஈட்டித் தரத்தக்க டெல்லி, மும்பய், கர்நாடகா மற்றும் ராஜஸ்தான் ஆகிய வட்டங்களை ஏலத்தில் எடுக்க எந்தவொரு நிறுவனமும் முன்வரவில்லை. மீதமுள்ள 18 வட்டங்களிலும் பெருத்த போட்டியின்றி, மொத்தமே 20 உரிமங்கள் தான் விற்பனையாகியிருக்கின்றன. இந்த 18 வட்டங்களிலும், கைபேசி சேவை வளர்ச்சி குறைவாக உள்ள ஒரு சில வட்டங்களைத் தவிர, பெரும்பாலான வட்டங்களில் அரசு நிர்ணயித்த அடிப்படை விலையைவிடக் குறைவாகவே ஏல விற்பனை நடந்திருக்கிறது. சி.டி.எம்.ஏ. தொழில்நுட்பத்தின் கீழ் ஒதுக்கப்பட்டிருந்த அலைக்கற்றைகளில் ஒரு சதவீதம்கூட ஏலத்தில் விற்பனையாகவில்லை. ஏலத்தில் கலந்துகொண்ட எந்தவொரு நிறுவனமும் அகில இந்திய உரிமம் கேட்கவில்லை. குறிப்பாக, இந்த ஏலத்தின் மூலம் அதிகபட்சம் 40,000 கோடி ரூபாய் அளவிற்கு அரசிற்கு வருமானம் கிடைக்குமென மைய அரசு கூறிவந்தது. ஆனால், அலைக்கற்றைகள் மிகக் குறைவாக 9,407 கோடி ரூபாய்க்குத்தான் ஏலத்தில் விற்பனையாகியுள்ளன.

2ஜி ஏலம் ‘ஊத்திக்கொண்டதை’க் காட்டித் தலைமைத் தணிக்கைத் துறைக்குச் சவால் விட்டு வரும் நிதியமைச்சர் ப.சிதம்பரம் மற்றும் தொலைத்தொடர்புத்துறை அமைச்சர் கபில்சிபல்.






படிப்பகம்

www.padippkam.com

முன்னாள் தொலைத்தொடர்புத் துறை அமைச்சர் ஆ.ராசா அலைக்கற்றைகளை முதலில் வந்தவருக்கு முன்னுரிமை என்ற முறையில், மிகக் குறைந்த விலையில் ஒதுக்கீடு செய்ததால் அரசிற்கு 1,76,000 கோடி ரூபாய் அளவிற்கு உத்தேச வருமான இழப்பு ஏற்பட்டதாகத் தலைமைத் தணிக்கைத் துறை குற்றஞ்சுமத்தியிருந்தது. தற்பொழுது நடந்துள்ள ஏலம் அரசிற்கு அதிக வருமானம் ஈட்டித் தரத் தவறிவிட்டதைக் காட்டி, தலைமைத் தணிக்கைத் துறையின் குற்றச்சாட்டு பொய்யாகிவிட்டது என வாதாடி வருகிறது, காங்கிரசு. நிர்ணயிக்கப்பட்ட தொகையை ஏலத்தின் மூலம் ஏன் எடுக்க முடியாமல் போனது என்பதற்கு விளக்கமளிப்பதை விட, ''திருவாளர் தலைமைத் தணிக்கை அதிகாரியே, 1.76 இலட்சம் கோடி ரூபாய் எங்கே?'', ''தலைமைத் தணிக்கைத் துறை தனது கணக்கீடு முறையை மறுபரிசீலனை செய்ய வேண்டும்'' என்றெல்லாம் கூறி, மைய அமைச்சர்கள் மணீஷ் திவாரி, ப.சிதம்பரம், கபில் சிபல் ஆகியோர் தலைமைத் தணிக்கைத் துறையைக் கிண்டல் செய்து வருகிறார்கள். மேலும், இந்த ஏல விற்பனை, ''தலைமைத் தணிக்கைத் துறை குற்றஞ்சுமத்தியபடி அலைக்கற்றை ஒதுக்கீடு விற்பனையிலோ, நிலக்கரி ஒதுக்கீடிலோ எந்தவிதமான முறைகேடும் நடக்கவில்லையெனக் காட்டுவதாகவும்'' அடித்துப் பேசி வருகின்றனர்.

''2008-ஆம் ஆண்டில் இந்தியாவில் 23 கோடி பேரிடம்தான் கைபேசி இருந்தது; 80 கோடி பேருக்கு கைபேசி சேவை அளிக்க வேண்டிய அளவிற்கு சந்தை வாய்ப்புகள் இருந்தன. 2012-லோ ஏறத்தாழ 90 கோடி பேர் கைபேசி சேவை வட்டத்திற்குள் வந்துவிட்டனர். அதாவது, சந்தை ஏறக்குறைய நிரம்பிவிட்டது. இதுமட்டுமின்றி, கைபேசி நிறுவனங்களுக்கு உபயோகிப்பாளர்களிடமிருந்து கிடைக்கும் வருவாயும் குறைந்துவிட்டது. இந்தச் சந்தை நிலவரத்தைப் புரிந்து கொள்ளாமல் அரசு அடிப்படை விலையை அதிகமாக நிர்ணயித்துவிட்டதால்தான் ஏலம் தோல்வியடைந்துவிட்டதாக''ப் பொருளாதார நிபுணர்கள் கூறுகிறார்கள்.

இந்தக் காரணத்தை முதலாளித்துவப் பத்திரிகைகளும் எதிர்க்கட்சிகளும்கூடச் சுட்டிக் காட்டினாலும், ஏலத்தின் தோல்வியைக் காட்டி, 2ஜி ஒதுக்கீடு குறித்த தலைமைத் தணிக்கைத் துறையின் கணக்கீடு தவறு என காங்கிரசு பிரச்சாரம் செய்துவருவதை இவர்கள் ஏற்றுக் கொள்ள மறுக்கிறார்கள். ''2008-இல் சந்தை சூடாக இருந்தபொழுது அலைக்கற்றைக்குக் குறைந்த விலையை நிர்ணயம் செய்ததன் மூலம் அரசுக்கு இழப்பு ஏற்பட்டது; இப்பொழுது சந்தை நிரம்பிவழியும் நிலையில் அடிப்படை விலையை அதிகமாக நிர்ணயம் செய்ததன் மூலம் ஏலத்தின் தோல்விக்குக் காரணமாகிவிட்டது'' என எதிர்க்கட்சிகள் காங்கிரசின் மீது குற்றஞ்சுமத்துகின்றன.

இந்தியாவில் 90 கோடி பேரிடம் செல்போன் இருப்பதாக ஒருபுறம் கூறிவிட்டு, மறுபுறம் இவ்வளவு பெரிய சந்தைக்கு சேவை அளித்து வரும் செல்போன் கம்பெனிகளின் வியாபாரம் சரிந்து வருகிறது; வருமானமும் இலாபமும் படுத்துவிட்டது எனக் கூறுவது அபத்தமாகத் தெரிகிறது. ஒரு வாதத்திற்கு செல்போன் கம்பெனிகளின் வியாபாரம் படுத்துப் போய்விட்டது என இவர்கள் கூறுவதை உண்மையென்று வைத்துக் கொள்வோம். பொருளாதாரப் புலிகளாகக் கருதப்படும் மன்மோகன் சிங்கும், அலுவாலியாவும், ப.சிதம்பரமும் அந்த நிலையைப் புரிந்து கொள்ளாமலா, அடிப்படை விலையைக் கூடுதலாக நிர்ணயம் செய்திருப்பார்கள்? அலைக்கற்றை உள்ளிட்ட இயற்கை வளங்களை அடிமாட்டு விலையில் தரகு முதலாளிகளுக்கும் பன்னாட்டு நிறுவனங்களுக்கும் படையல் போட வேண்டும் என்ற கொள்கையைக் கொண்டிருக்கும் மன்மோகன் சிங் கும்பல், அரசிற்கு அதிக வருமானம் தேடித் தர வேண்டும் என்ற நோக்கத்தில் அடிப்படை விலையை அதிகமாக நிர்ணயம் செய்திருக்க முடியாது. அப்படியொரு நல்ல நோக்கம் மன்மோகன் சிங்கிற்கு இருந்திருந்தால், 2008-ஆம் ஆண்டிலேயே அலைக்கற்றைகளை அதிக விலைக்கு ஒதுக்கீடு செய்து அரசின் கஜானாவை நிரப்பியிருக்கலாம்.

உண்மை என்னவென்றால், பொருளாதார நிபுணர்கள் கூறுவதற்கு மாறாக, மன்மோகன் சிங் கும்பல் அடிப்படை விலையை ஓரளவு குறைத்துதான் நிர்ணயித்தது. அலைக்கற்றைகளை அகில இந்திய அளவில் உரிமம் பெறுவதற்கு அடிப்படை விலை 18,000 கோடி ரூபாய் என நிர்ணயம் செய்தது, தொலைத்தொடர்பு ஒழுங்கு முறை ஆணையம். அதனை, 14,000 கோடி ரூபாயாகக் குறைத்தது, மன்மோகன் சிங் அரசு. ஆனாலும், இதனை இன்னும் பாதியாக, 7,000 கோடி ரூபாயாகக் குறைக்க வேண்டும் என சவுண்டு கொடுத்தன செல்போன் கம்பெனிகள். ஆனாலும், காங்கிரசு தன்னை நியாயவானாகக் காட்டிக்கொள்வதற்காகவே, செல்போன் கம்பெனிகள் கோரியபடி அடிப்படை விலையைக் குறைக்காமல் ஏலத்தை நடத்தியது. அடிப்படை விலை குறைக்கப்படாததைக் காட்டி டாடா, ரிலையன்ஸ் உள்ளிட்ட பல கார்ப்பரேட் நிறுவனங்கள் ஏலத்தில் கலந்து கொள்ளாமல் புறக்கணித்தன.

> **2ஜி ஊழல் போலன்றி, உண்மையாகவே அரசிற்கு இழப்பு ஏற்படுத்தியுள்ள, 2ஜி ஊழலைவிடப் பல மடங்கு பிரம்மாண்டமான ஊழல்கள் பற்றி - உ.பி.யில் நடந்த 2 இலட்சம் கோடி ரூபாய் பெறுமான ரேஷன் அரிசி கடத்தல் ஊழல், அரசிற்குப் பல இலட்சம் கோடி ரூபாய் வருமான இழப்பை, நட்டத்தை ஏற்படுத்தி வரும் கிருஷ்ணா-கோதாவரி எண்ணெய் வயல் ஊழல் பற்றி எதிர்த்தரப்பு வாயே திறக்க மறுக்கிறது.**



படிப்பகம்

www.padippkam.com

> **ஒவ்வொரு பட்ஜெட்டிலும் கார்ப்பரேட் நிறுவனங்களுக்குக் கொடுக்கப்படும் பல இலட்சம் கோடி ரூபாய் பெறுமான வரிச்சலுகைகளும், கார்ப்பரேட் நிறுவனங்களோடு போட்டுக் கொள்ளப்படும் புரிந்துணர்வு ஒப்பந்தங்களும், சிறப்புப் பொருளாதார மண்டலங்களும், கார்ப்பரேட் நிறுவனங்களுக்கு வழங்கப்படும் இன்ன பிற சலுகைகளும் 2ஜி ஊழலைவிட மிகப்பெரிய ஊழல்-பகற்கொள்ளை என்பதை உச்ச நீதிமன்றமும் ஏற்றுக் கொள்ள மறுக்கிறது.**

''அலைக்கற்றைகளை ஏலத்தில் விட்டிருந்தால் அதிக வருமானம் ஈட்டியிருக்க முடியும்'' எனக் கூறியிருக்கும் உச்ச நீதிமன்றம்; ''முதலில் வந்தவருக்கு முன்னுரிமை என்ற அடிப்படையில் அலைக்கற்றை களை ஒதுக்கியதால் அரசுக்கு 1.76 இலட்சம் கோடி ரூபாய் இழப்பு ஏற்பட்டுள்ளது'' எனக் கூறிவரும் தலைமைத் தணிக்கைத் துறை ஆகிய வற்றின் முகங்களில் கரியைப் பூசவேண்டும் என்ற நோக்கத்தோடுதான் காங்கிரசு இந்த ஏலத்தைத் திட்டமிட்டு நடத்தியது.

செல்போன் நிறுவனங் களுக்கோ இந்த ஏலம் போணி யாகாமல் முடிவது வேறொரு காரணத்திற்காக அவசியமாக இருந்தது. ''பாரதி ஏர்டெல் உள்ளிட்ட பழைய செல்போன் நிறுவனங்களுக்கு 20 ஆண்டுகளுக்கு முன்பு ஒதுக்கப் பட்ட அலைக்கற்றைகளின் உரிமம் அடுத்த ஆண்டு முடிவடைகிறது. தற்பொழுது நடந்துள்ள இந்த ஏலத்தின் விற்பனையைப் பொருத்தே, அடுத்த ஆண்டு முடிவடையும் அலைக்கற்றைகளின் உரிமத்தைப் புதுப்பிக்கும் அடிப்படைத் தொகை நிர்ணயிக்கப்படும் எனத் தொலைத்தொடர்புத் துறை அறிவித்திருந்ததால்'' இந்த ஏலம் மண்ணைக்கவ்வுவதை அந்நிறுவனங்களும் விரும்பின. இப்படியாக அதிக வருமானம் ஈட்டிவிடாதபடி இந்த ஏலத்தை நடத்தி முடிப்பதில் காங்கிரசும் செல்போன் நிறுவனங்களும் கூட்டுக் களவாணிகளாகச் செயல்பட்டுள்ளனர்.

2008-இல் சந்தை சூடாக இருந்ததால், கார்ப்பரேட் நிறுவனங்கள் அதிக விலை கொடுத்து அலைக்கற்றைகளை வாங்க போட்டி போட்டிருப்பார்கள் எனப் பொருளாதார நிபுணர்களும் எதிர்க்கட்சிகளும் கூறிவருவதும் கூட, ஒருவிதமான அனுமானம், கற்பிதம்தான். ஏனென்றால், கார்ப்பரேட் நிறுவனங்கள் எப்பொழுதுமே தமது நலனுக்கு ஏற்ற வகையில் சந்தையை வளைக்கவும், நிமிர்த்தவும், கூட்டணி கட்டிக்கொண்டு விலையை வீழ்த்தவும் தயங்கியதே கிடையாது.

இது மட்டுமின்றி, 2008-இல் அலைக்கற்றைகளுக்கு அதிக விலை நிர்ணயித்து விற்பனை செய்திருந்தால் அரசிற்கு 1.76 இலட்சம் கோடி ரூபாய் வருமானம் கிடைத்திருக்கும் என்பதுகூடச் சர்ச்சைக்குரியதுதான். தலைமைத் தணிக்கைத் துறை அரசுக்கு ஏற்பட்டுள்ள உத்தேச வருமான இழப்பு 1.76 கோடி ரூபாய் என்கிறது. ஆ.ராசா உள்ளிட்டோர் மீது வழக்கு தொடுத்துள்ள மையப் புலனாய்வுத் துறை, தனது குற்றப்பத்திரிகையில் குறிப்பிட்டுள்ள உத்தேச வருமான இழப்பு 30,984.55 கோடி ரூபாய்தான். பா.ஜ.க.வைச் சேர்ந்த முன்னாள் தொலைத்தொடர்புத் துறை அமைச்சரான அருண் ஷோரிகூட வருமான இழப்பு 30,000 கோடி ரூபாய்தான் இருக்கும் எனக் கூறியிருக்கிறார்.

இந்த மதிப்பீடுகள் ஒருபுறமிருக்க, தலைமைத் தணிக்கைத் துறையில் தபால் மற்றும் தொலைத்தொடர்புத் துறைத் தணிக்கை பிரிவுக்கான முன்னாள் இயக்குநர் ஆர்.பி. சிங், ''2ஜி அலைக்கற்றை பற்றிய வரைவு அறிக்கை மே,2010-இல் தயாரானபொழுது உத்தேச வருமான இழப்பு 2,645 கோடி ரூபாய் என்றுதான் கணக்கிடப்பட்டது; பின்னர் பொது கணக்குக் குழு (PAC) ஆலோசனைப்படி உத்தேச இழப்பு 1.76 இலட்சம் கோடி ரூபாயாக மாற்றப்பட்டது'' என்று இப்பொழுது ஒரு குண்டைத் தூக்கிப் போட்டுள்ளார். இவற்றுள் யார் சொல்வதை நம்புவது?

''நாடாளுமன்ற பொதுக் கணக்குக் குழுவின் ஆலோசனையின் அடிப்படையில்தான், சி.ஏ.ஜி. 2ஜி ஒதுக்கீட்டில் 1.76 இலட்சம் கோடி ரூபாய் இழப்பு ஏற்பட்டதாக அறிக்கை தயாரித்தது'' எனக் குற்றஞ் சுமத்தியுள்ள சி.ஏ.ஜி.யின் முன்னாள் இயக்குநர் ஆர்.பி.சிங்.




ஊழலைப் பிரம்மாண்டமானதாகக் காட்டுவதன் மூலம் மக்கள் மத்தியில் ஒரு அதிர்ச்சி கலந்த பரபரப்பை ஏற்படுத்தும் நோக்கத்தின் அடிப்படையில்தான் பா.ஜ.க., ஜெயா, சு.சாமி, முதலாளித்துவப் பத்திரிகைகள் 1.76 இலட்சம் கோடி ரூபாய் என்ற கணக்கீட்டைப் பிடித்துத் தொங்கிக் கொண்டிருக்கிறார்கள். தலைமைத் தணிக்கைத் துறை அலைக்கற்றை ஒதுக்கீடில் அரசிற்கு 1.76 இலட்சம் கோடி ரூபாய் அளவிற்கு வருமான இழப்பு ஏற்பட்டுள்ளது என்றுதான் தனது அறிக்கையில் குறிப்பிடுகிறது. ஆனால், எதிர்த்தரப்போ ஏதோ 1.76 இலட்சம் கோடி ரூபாய் அளவிற்கு இந்த ஒதுக்கீடில் ஊழல் நடந்து, அப்பணம்



படிப்பகம்

www.padippkam.com




அலைக்கற்றை ஒதுக்கீட்டில் சி.ஏ.ஜி. குறிப்பிட்டுள்ள உத்தேச இழப்பு 1.76 இலட்சம் கோடி ரூபாயை, ஆ.ராசாவே சுருட்டிக் கொண்டதாகச் சித்தரித்து முதலாளித்துவ பத்திரிக்கைகள் நடத்திவரும் விஷமப் பிரச்சாரம்.

**2ஜி ஒதுக்கீட்டில் அரசுக்கு ஏற்பட்டுள்ள உத்தேச இழப்பு 1.76 இலட்சம் கோடி ரூபாய் என்கிறது, சி.ஏ.ஜி.**

**இந்த உத்தேச இழப்பு 30,984.55 கோடி ரூபாய் என்கிறது, சி.பி.ஐ.**

**இந்த உத்தேச இழப்பு 2,645 கோடி ரூபாய் என முதலில் கணக்கிடப்பட்டதாகக் கூறுகிறார், சி.ஏ.ஜியின் முன்னாள் இயக்குநர் ஆர்.பி.சிங்.**

**இவர்களுள் யார் சொல்வது உண்மை?**

முழுவதையும் ராசாவும், தி.மு.க.வும் பங்கு போட்டுக் கொண்டதைப் போலப் புளுகி வருகிறார்கள்.

அலைக்கற்றை ஒதுக்கீடில் அரசிற்கு ஏற்பட்டுள்ளதாகக் கூறப்படும் வருமான இழப்பு பற்றி பல்வேறு மாறுபட்ட மதிப்பீடுகள் இருக்கும் அதேசமயம், அவை அனைத்தும் உத்தேசமானதுதான். அவற்றை உண்மையாகவே ஏற்பட்டுள்ள வருமான இழப்பாகக் கருதி விடவும் முடியாது. ஆ.ராசா ஒதுக்கீடு செய்த அலைக்கற்றைகளை ரத்து செய்து தீர்ப்பு அளித்துள்ள முன்னாள் உச்ச நீதிமன்றத் தலைமை நீதிபதி ஹெச்.எஸ். கபாடியாகூட, ''இலாபம் என்பது கருதுகோள்தான்'' என விளக்கமளிக்கிறார். அதேசமயம், 2ஜி ஊழல் போலன்றி, உண்மையாகவே அரசிற்கு இழப்பு ஏற்படுத்தியுள்ள, 2ஜி ஊழலைவிடப் பலமடங்கு பிரம்மாண்டமான ஊழல்கள் பற்றி - உ.பி.யில் நடந்த 2 இலட்சம் கோடி ரூபாய் பெறுமான ரேஷன் அரிசி கடத்தல் ஊழல், அரசிற்குப் பல இலட்சம் கோடி ரூபாய் வருமான இழப்பை, நட்டத்தை ஏற்படுத்தி வரும் கிருஷ்ணா-கோதாவரி எண்ணெய் வயல் ஊழல் பற்றி எதிர்த்தரப்பு வாயே திறக்க மறுக்கிறது.

மற்ற ஊழல்களைவிட 2ஜி ஊழல் விவகாரம் இந்தளவிற்குப் பரபரப்பாகப் பேசப்படுவதற்கு அரசியல் உள்நோக்கங்களும், கோஷ்டி சண்டைகளும்தான் காரணமேயொழிய, ஊழலை அறவே ஒழித்துவிட வேண்டும் என்ற அறம் சார்ந்த அடிப்படை எதுவும் கிடையாது. 2 ஜி ஒதுக்கீடில் நடந்துள்ள முறைகேடுகளைத் தலைமை தணிக்கைத்துறை அம்பலப்படுத்துவதற்கு முன்பாகவே, மாறன் - கருணாநிதி குடும்பத்துக்கு இடையே நடந்த சண்டை காரணமாக, மாறன் சகோதரர்கள் அம்முறைகேடுகளைக் கசியவிட்டனர். கருணாநிதி -மாறன் குடும்பங்களுக்கு இடையே சமரசம் ஏற்பட்ட பின்னர், இந்த விவகாரம் அப்படியே அமுக்கப்பட்டது. இதன் பின்னர் அலைக்கற்றை ஒதுக்கீடில் ஆதாயமடைந்த முதலாளிகளுக்கும் மற்றவர்களுக்கும் இடையே ஏற்பட்ட மோதல் காரணமாக, நீரா ராடியே டேப் அம்பலப்படுத்தப்பட்டது. அதிலும் தரகு முதலாளிகளான டாடா, அனில் அம்பானி; பத்திரிகையாளர்களான வீர் சங்வி, பர்கா தத் என சம்பந்தப்பட்ட பலர் விலக்கப்பட்டு, ராசா, கனிமொழி மட்டும் பத்திரிகைகளாலும் எதிர்க்கட்சிகளாலும் குறிவைக்கப்பட்டனர்.

''ஆ.ராசா கைபேசி சேவை சந்தையில் உப்புமா கம்பெனிகளுக்கு இடங்கொடுத்து ஒரு நிச்சயமற்ற தன்மையை உருவாக்கிவிட்டதாகவும், அதனால்தான் பல நிறுவனங்கள் இத்துறையில் புதிதாக மூலதனமிடத் தயங்குவதாகவும்'' முதலாளிகள் குற்றஞ்சுமத்துகிறார்கள். ''ஒரு சில நிறுவனங்களின் பிடியில் இருந்த கைபேசி சேவையை உடைத்து, கைபேசி கட்டணத்தைக் குறைக்க வழி ஏற்படுத்தியதைப் பொறுக்காமல் தான் தன் மீது பழம் பெருச்சாளிகள் பாய்வதாக''ப் பதிலடி கொடுக்கிறார், ஆ.ராசா.

இது மட்டுமின்றி, தனக்கு முன்பு தொலைத்தொடர்புத் துறை அமைச்சர்களாயிருந்த தயாநிதி மாறன், அருண் ஷோரி ஆகியோரும் முதலில் வந்தவருக்கு முன்னுரிமை என்ற அடிப்படையில்தான் அலைக்கற்றைகளை ஒதுக்கீடு செய்திருக்கும்பொழுது, தான் மட்டும் எப்படிக் குற்றவாளியாக முடியும்? எனக் கேள்வி எழுப்பி வருகிறார்.

ஆ.ராசா 2008-இல் முதலில் வந்தவருக்கு முன்னுரிமை அடிப்படையில் ஒதுக்கீடு செய்த அலைக்கற்றை உரிமங்களை ரத்து செய்த உச்ச நீதிமன்றம், அதற்கு முன்னர் இதே அடிப்படையில் ஒதுக்கீடு செய்யப்பட்ட உரிமங்களை ஏன் ரத்து செய்யவில்லை என்ற கேள்விக்கு, அந்த ஒதுக்கீடுகள் குறித்து யாரும் வழக்குத் தொடுக்கவில்லை என்று கூறித் தப்பித்துக் கொள்கிறது.

பா.ஜ.க. ஆட்சியில் செல்போன் கம்பெனிகளுக்குச் சாதகமாகக் கொண்டுவரப்பட்ட புதிய தொலைத்தொடர்புக் கொள்கையின் விளைவாக அரசிற்கு 50,000 கோடி ரூபாய்வரை வருமானம் இழப்பு ஏற்பட்டதாகக் குற்றஞ்சுமத்தி, பா.ஜ.க.வைச் சந்திக்கு இழுத்தது, காங்கிரசு. பா.ஜ.க.வோ, தனது ஆட்சியின்



படிப்பகம்

www.padippkam.com

பொழுது இருந்த சந்தை நிலைமைகளுக்கு ஏற்ப, தான் செல்போன் கம்பெனிகளுக்குச் சலுகை அளித்ததாகவும், இதில் முறைகேடு எதுவுமில்லை என்று வாதிடுகிறது.



ஒரிசாவில் அமையவுள்ள போஸ்கோ உருக்காலை திட்டத்தை எதிர்த்து, ஜகத்சிங்பூர் மாவட்டத்தைச் சேர்ந்த விவசாய மீனவக் குடும்பங்கள் நடத்திய முற்றுகைப் போராட்டம் (கோப்புப் படம்)

அலைக்கற்றை ஒதுக்கீடு பெற்ற நிறுவனங்கள், ஒதுக்கீடு பெற்ற மறுநிமிடமே தமது பங்குகளைச் சந்தையில் விற்றுக் கொள்ளலாம் என்ற சட்டத் திருத்தம் பா.ஜ.க. கூட்டணி ஆட்சியில்தான் கொண்டு வரப்பட்டது. டாடா டெலி சர்வீசஸ், ஸ்வான், யுனிடெக் ஆகிய நிறுவனங்கள் ஆ.ராசா ஒதுக்கிய அலைக்கற்றைகளைப் பெற்ற கையோடு, தமது பங்குகளைச் சந்தையில் விற்று 22,000 கோடி ரூபாய் அளவிற்கு இலாபமடைந்ததற்கு பா.ஜ.க. கொண்டு வந்த இந்தச் சட்டத் திருத்தம்தான் உதவியிருக்கிறது.

ஆ.ராசா அலைக்கற்றைகளை ஒதுக்கீடு செய்ததில் முறைகேடுகளோ, ஊழலோ நடைபெறவில்லை என்பதல்ல நமது வாதம். மாறாக, 2ஜி ஊழல் விவகாரம், ஓட்டுக்கட்சிகள் உள்ளிட்டு இன்றுள்ள அரசியல்-பொருளாதார-நிர்வாகக் கட்டமைப்பே ஊழலும் மோசடிகளும் முறைகேடுகளும் நிறைந்தது; கார்ப்பரேட் பகற்கொள்ளைக்குச் சாதகமானது என்பதை எடுத்துக்காட்டுவதாக அமைந்திருப்பதைத்தான் முதன்மையாக கவனத்தில் கொள்ள வேண்டும் எனக் கோருகிறோம்.

ஆனால், தனியார்மயம்-தாராளமயம் என்ற மறுகாலனியாதிக்கப் பொருளாதாரக் கொள்கையைவிட, அதிகாரத் தாழ்வாரங்களில் நடந்துவரும் ஊழலும் அதிகாரமுறைகேடுகளும்தான் நாட்டைப் பிடித்திருக்கும் அபாயம் என்பதாக நடுத்தர வர்க்கம் நம்பிக் கொண்டிருக்கிறது. ஒவ்வொரு பட்ஜெட்டிலும் கார்ப்பரேட் நிறுவனங்களுக்குக் கொடுக்கப்படும் பல இலட்சம் கோடி ரூபாய் பெறுமான வரிச்சலுகைகளும், கார்ப்பரேட் நிறுவனங்களோடு போட்டுக் கொள்ளப்படும் புரிந்துணர்வு ஒப்பந்தங்களும், சிறப்புப் பொருளாதார மண்டலங்களும், கார்ப்பரேட் நிறுவனங்களுக்கு வழங்கப்படும் இன்ன பிற சலுகைகளும் 2ஜி ஊழலை விட மிகப்பெரிய ஊழல்-பகற்கொள்ளை என்பதை நடுத்தர வர்க்கம் ஏற்றுக் கொள்ள மறுக்கிறது. உச்ச நீதிமன்றம், தலைமை தணிக்கைத் துறை உள்ளிட்ட அரசியல் சாசன அமைப்புகளும் கார்ப்பரேட் நிறுவனங்களுக்குக் காட்டப்படும் இச்சலுகைகளை நாட்டை உய்விக்க வந்த கொள்கைகளாகத்தான் கருதுகின்றன.

2ஜி விவகாரத்தை எடுத்துக் கொண்டால், விலைமதிப்பற்ற இயற்கை வளமான அலைக்கற்றைகளைத் தனியார் முதலாளிகளுக்குப் படையல் போட்டுக் கொடுக்கும் கொள்கையை, நாட்டின் நலனுக்கு எதிரானதாக உச்ச நீதிமன்றம் கருதவில்லை. அதனை எப்படிப் படையல் போட்டுக் கொடுத்திருக்க வேண்டும் என்பதில்தான் ஆளுங் காங்கிரசுக் கட்சி, எதிர்க்கட்சிகள், உச்ச நீதிமன்றம் ஆகியவை பிரிந்துநின்று மோதிக் கொள்கிறார்கள். ‘‘அலைக்கற்றை ஒதுக்கீட்டில் நடந்துள்ள ஊழலுக்கும் தனியார்மயத்திற்கும் எவ்விதத் தொடர்பும் கிடையாது; அவ்வூழல் என்பது ராசாவும் சில அதிகாரிகளும் முதலாளிகளும் கூட்டாகச் சேர்ந்து நடத்திவிட்ட சதியாக, நெறியற்ற செயலாகக் காட்டிவிடத்தான்’’ உச்ச நீதிமன்றம் முயலுகிறது. இப்படிபட்ட முறைகேடுகளும், சந்தையில் திடீர்திடீரென ஏற்படும் ஏற்ற இறக்கங்கள், அராஜகம், நிச்சயமற்றதன்மை ஆகியவை இல்லாமலும் தனியார்மயத்தை நடைமுறைப்படுத்திவிட முடியும்; அதன் மூலம் நாட்டின் வளர்ச்சியைச் சாதித்துவிட முடியும் என்ற நம்பிக்கையைப் பொது மக்கள் மத்தியில் ஏற்படுத்த முயலுகிறது. அப்படியே அதில் ஊழல் நடந்தாலும், ஊழல் பேர்வழிகளை இந்த அரசியல் அமைப்பின் மூலம் தண்டித்துவிட முடியும் என்ற நம்பிக்கையைப் பொது மக்கள் மத்தியில் மீண்டும் விதைக்கும் நோக்கிலும்தான் 2ஜி ஊழல் விவகாரத்தை உச்ச நீதிமன்ற நீதிபதிகள் கையாண்டு வருகிறார்கள்.

● திப்பு

## அறிவிப்பு

அன்பார்ந்த வாசகத் தோழர்களுக்கு, மின்னஞ்சல் வழியாக எம்மைத் தொடர்புகொள்ள puthiyajananayagam@gmail.com என்ற முகவரியினைப் பயன்படுத்துமாறு கேட்டுக்கொள்கிறோம்.

– நிர்வாகி



படிப்பகம்

www.padippkam.com

# சத்தீஸ்கருக்கு சல்வாஜூடும் தமிழ்நாட்டுக்கு சிறப்புக் காவல் இளைஞர் படை

ஜெயலலிதா ஆட்சிக்கு வரும்போதெல்லாம் பார்ப்பனர்கள் மட்டுமல்ல, தமிழ்நாடு போலீசும் ''இது நம்ம ஆட்சி'' எனக் குதூகலிக்கத் தொடங்கிவிடுகிறது.

மக்கள் போராட்டங்களைக் கொடூரமாக ஒடுக்கியும், பல கொட்டடிப் படுகொலைகளையும், போலிமோதல்களையும் செய்துவரும் இந்த செல்லப் பிராணிக்கு, இராணுவத்துக்கு உள்ளது போன்ற அத்தியாவசிய பொருட்களை மலிவாக விற்கும் சிறப்பங்காடி, அதிநவீன சொகுசுக்கார்கள், பல லட்சம் மதிப்பிலான சொகுசு மாடிக் குடியிருப்புகள் என வெகுமதிகளை வாரிவழங்கி வருகிறார் ஜெயலலிதா.

காவல்துறையின் பணிச்சுமையைக் குறைத்து, சட்டம் ஒழுங்கையும் புலனாய்வையும் இன்னும் ''சிறப்பாக'' ச் செய்வதற்கென அண்மையில் ஜெயலலிதா காவல்துறைக்கு துணையாக 'தமிழ்நாடு சிறப்புக் காவல் இளைஞர் படை' யை அமைக்கப் போவதாக அறிவித்துள்ளார்.

முப்பது வயதுக்குட்பட்ட இளைஞர்களைக் கொண்டு மாவட்டப் போலீசு கண்காணிப்பாளர்களால் உருவாக்கப்படவுள்ள இந்தப்படை, போக்குவரத்தை ஒழுங்குபடுத்துதல், நீதிமன்ற உத்தரவுகளை அமல் படுத்துதல், கூட்ட நெரிசல்களை சரிசெய்தல் போன்ற வேலைகளோடு இரவு ரோந்துப்பணியிலும் ஈடுபடுத்தப்படும்.

பணிக்காலத்தில் மாதந்தோறும் ரூ.7500 ஊதியமும், காவலர்கள் சிறப்பங்காடிகளைப் பயன்படுத்தும் உரிமையும் அவர்களுக்கு வழங்கப்படும். இதுதவிர மானிய விலையில் அவர்களுக்கு அரிசி, கோதுமை, சர்க்கரை போன்றபொருட்களும் வழங்கப்படும் என்று அரசின் அறிவிப்பு கூறுகிறது.

இவ்வாண்டு பத்தாயிரம் பேரையும், அடுத்த ஆண்டு 15 ஆயிரம் பேரையும் சேர்த்து உருவாக்கப்படும் இப்படை, வருங்காலத்தில் சுமார் 50 ஆயிரம் பேரைக் கொண்டதாகக் கட்டமைக்கப்படுமாம். இதில் பணியாற்றுவோருக்கு ஆண்டுதோறும் போலீசுத் தேர்வில் முன்னுரிமை என்றும், நாற்பது வயதுவரை துணைப்படையிலேயே இருப்பவர்களை நேரடியாக போலீசுப்படையில் சேர்ப்பது என்றும் தூண்டில் போட்டு இளைஞர்களைச் சுண்டியிழுக்க உள்ளனர்.

பெருகிவரும் மக்கள்தொகைக்கேற்ப 635 பேருக்கு ஒரு போலீசு எனும் விகிதத்தை நிலைநாட்டுவதற்காகவே துணைப்படை உருவாக்கப்படுவதாக ஜெயலலிதா சொல்லியுள்ளார். இதே அரசிடம் 42 மாணவர்களுக்கு ஓர் ஆசிரியர் என்ற விகிதத்தை நிலைநாட்ட கறாரான திட்டம் ஏதும் கிடையாது. பல பள்ளிகளில் 60 முதல் 90 மாணவர்களுக்கு ஒரு ஆசிரியர்தான் பணியமர்த்தப்பட்டுள்ளனர். அதேபோல இன்னமும் 10 ஆயிரம் மக்களுக்கு 6-க்கும் குறைவான மருத்துவர்களே உள்ளனர். இந்த எண்ணிக்கைகளை எல்லாம் உயர்த்த அக்கறையில்லாத அரசு, போலீசுப்படையை மட்டும் அதிகரித்துக்கொண்டே செல்கிறது.

தி.மு.க. ஆட்சிக் காலத்தில் நியமிக்கப்பட்ட மக்கள் நலப் பணியாளர்கள், சாலைப் பணியாளர்களைத் தடாலடியாக ஒரேநாளில் வீட்டுக்கு அனுப்பி வைத்த ஜெயா, ''அவர்கள் அனைவரும் தி.மு.க. அனுதாபிகள்'' எனக் கூறி, இப்பணி நீக்கத்தை நியாயப்படுத்தினார். அப்படி தி.மு.க. மீது பழிபோட்ட ஜெயா, இப்பொழுது அ.தி.மு.க. அனுதாபிகளைக் கொண்டு சிறப்பு காவல் இளைஞர் படையை உருவாக்க முனைகிறார். மு.க. நியமித்த மக்கள் நலப் பணியாளர்களும், சாலைப்

தமிழக போலீசார் அனைவருக்கும் வீடு வழங்குவதற்காகக் கொண்டு வரப்பட்டுள்ள ''உங்கள் சொந்த இல்லம்'' என்ற திட்டத்தின் முதல் கட்டமாக, சென்னை அருகேயுள்ள மேயக்கோட்டையூரில் 2,673 அடுக்குமாடி வீடுகளைக் கட்ட அடிக்கல் நாட்டும் ஜெயா (இடது) மற்றும் அங்கு கட்டப்படவுள்ள வீடுகளின் மாதிரி.








படிப்பகம்

www.padippkam.com

பணியாளர்களும் கொஞ்சத்துக்கு கொஞ்சமாவது மக்கள் நலப் பணிகளில் ஈடுபட்டனர் எனச் சொல்லிக் கொள்ளவாய்ப்புண்டு. ஆனால், அம்மா உருவாக்க இருக்கும் இளைஞர் படையோ, மக்களுக்குச் சேவை செய்வதற்கு அல்ல; மக்களை ஒடுக்கும் நோக்கத்திற்காகவே உருவாக்கப்படுகிறது.

> **''பெருகிவரும் மக்கள்தொகைக்கேற்ப 635 பேருக்கு ஒரு போலீசு எனும் விகிதத்தை நிலைநாட்டுவதற்காகவே துணைப்படை உருவாக்கப்படுவதாக ஜெயலலிதா சொல்லியுள்ளார். இதே அரசிடம் 42 மாணவர்களுக்கு ஓர் ஆசிரியர் என்ற விகிதத்தை நிலைநாட்ட கறாரான திட்டம் ஏதும் கிடையாது. அதேபோல இன்னமும் 10 ஆயிரம் மக்களுக்கு 6-க்கும் குறைவான மருத்துவர்களே உள்ளனர். இந்த எண்ணிக்கைகளை எல்லாம் உயர்த்த அக்கறையில்லாத அரசு, போலீசுப்படையை மட்டும் அதிகரித்துக்கொண்டே செல்கிறது.''**

''சீருடைப் பணியாளர் தேர்வு வாரியத்தால் தேர்வு செய்யப்படாமல் மாவட்டப் போலீசு கண்காணிப்பாளரே இப்படையிரைத் தேர்வு செய்வதால், அ.தி.முக.வினர் பரிந்துரைதான் இப்படையின் தேர்வில் செல்லுபடியாகும்; அ.தி.மு.க. வின் இளைஞர்களை அரசுப் பணத்தில் குளிப்பாட்டிடும் திட்டம்'' என அம்பலப்படுத்தி, ஜெயாவின் இத்திட்டத்தை கருணாநிதி எதிர்த்திருக்கிறார். ஆனால், அவர் கருதுவதுபோல இப்படை வெறுமனே ஆளும் கட்சித் தொண்டர்கள் பொறுக்கித் தின்பதற்கான திட்டம் மட்டும் அல்ல.

மக்கள் விரோத குண்டர்களைப் பொறுக்கியெடுத்து துணைப்படை அமைத்து, அந்தந்த மாநிலங்களில் அரசுக்கு எதிரான கருத்துகளோ, போராட்டமோ முளைவிடாது அழித்து வருவதை கடந்த சில ஆண்டுகளாகவே பல மாநில அரசுகள் செயல் உத்தியாகவே கடைப்பிடித்து வருகின்றன. கர்நாடகத்தில் 'போலீசு நண்பர்கள்' எனும் பேரில் ஆட்காட்டிகளை உருவாக்கியுள்ளனர். மாவோயிஸ்ட் புரட்சியாளர்கள் செல்வாக்கு பெற்றுள்ள மாநிலங்களில் சல்வாஜுடும், நாகா, கோர்பா போன்ற பல பெயர்களில் ஆயுதம் தாங்கிய குண்டர் படைகளை உருவாக்கி, பழங்குடியினரையும் புரட்சியாளர்களையும் ஒடுக்கி வருகின்றனர். அதன் தொடர்ச்சியாகத்தான் இங்கு 'தமிழ்நாடு சிறப்புக் காவல் இளைஞர் படை' உருவாக்கப்படுகிறது.

ஆனால், அம்மாவின் முன்னாள் தோழர்களான ''மார்க்சிஸ்டுகள்'' இப்படை உருவாக்கப்படுவதன் பின்னுள்ள இந்த பாசிச நோக்கத்தை அம்பலப்படுத்த முன்வராமல், சாலைப் பணியாளர்கள், மக்கள்நலப் பணியாளர்கள் நீக்கப்பட்டது போல் இப்படையினரும் நீக்கப்படும் வாய்ப்புள்ளதாக வருத்தப்பட்டு, ''போலீசு குண்டர்களை இன்னும் அதிகமாகத் தேர்வு செய்யுங்கள்; இப்புதிய இளைஞர் படை தேவையில்லை'' என்ற ஆலோசனையை அம்மாவின் முன்வைத்துள்ளனர்.

இங்கே நடைமுறையிலுள்ள தீவிரமான மறுகாலனியாக்கச் செயல்திட்டங்களின் விளைவாக சகல தரப்பு மக்களிடமும் அரசுக்கெதிரான கோபம் ஏற்கெனவே பரவி வருகிறது. அணு உலை எதிர்ப்புப் போராட்டம், மின்வெட்டுக்கு எதிரான போராட்டம் என உருவாகியுள்ள அக்கோபம் மாபெரும் எழுச்சியாக மாறிவிடாதபடிக்கு ஒட்டுமொத்த சமூகத்தையும் தீவிரமான கண்காணிப்பின் கீழ் அரசு கொண்டுவர முயலுகிறது.

அரசுக்கெதிரான கூட்டங்களுக்கு போலீசு அனுமதியே தருவதில்லை. இதன்பின் நீதிமன்றத்தில் வழக்காடி அனுமதி பெற்று வந்தாலும் கூட்டத்துக்கு வருவோரின் முகங்களை வீடியோவில் பதிவு செய்து மக்களை பீதிக்குள்ளாக்குகிறது, போலீசு. பெருநகரங்களில் முக்கியமான இடங்களில் எல்லாம் 24 மணிநேரமும் இயங்கும் காமிராக்களை பொருத்திக் கண்காணிக்கிறது. விரைவில் தமிழகம் முழுவதும் உள்ள பிற்பட்ட, தாழ்த்தப்பட்ட மாணவர் விடுதிகள் அனைத்தையும் பயோமெட்ரிக் கருவிகளின் மூலம் கண்காணிக்கவும் உள்ளது.

சென்னையில் நடந்த தொடர்கொள்ளைகளைக் கண்டறியத் துப்பில்லாத போலீசு, வடமாநிலத்தினர் சிலரை போலிமோதலில் சுட்டுக்கொன்றது. பின்னர், வாடகைக்குக் குடியிருப்பவர்களின் புகைப்படங்களோடு கூடிய தகவல்களை வீட்டு உரிமையாளர்கள் காவல்நிலையங்களில் தந்தாகவேண்டும் எனக் கட்டாயப்படுத்தி, ஒட்டுமொத்த சமூகத்தையும் குற்றவாளிகள் பட்டியலில் சேர்க்க முயன்றது. மனித உரிமைப் பாதுகாப்பு மையத்தினரின் சட்டப் போராட்டத்தால் போலீசின் இந்த சட்டவிரோதச் செயல் தற்காலிகமாக நிறுத்தி வைக்கப்பட்டுள்ளது.

இப்போது வேறுவழியில் அதனைச் சாதிக்க முயலுகிறது. படித்துவிட்டு வேலையின்றி வாடும் இளைஞர்களிலிருந்து பொறுக்கி எடுக்கப்படும் இப்படையை வைத்தே ஒவ்வொரு தெருவையும் அரசு இனி கண்காணிக்கும். மக்களின் கோபம் அரசுக்கு எதிராக எங்கெல்லாம் உருவாகிறதோ, அங்கெல்லாம் இந்த உளவாளிகள் மக்களைக் காட்டிக்கொடுத்து ஒழிக்கத் துணைபோவார்கள். இவ்வாறு சமூகத்தையே பாசிசத்தின் பிடியில் ஒப்படைக்கிறது, 'தமிழ்நாடு சிறப்புக் காவல் இளைஞர் படை'த் திட்டம். இதுவே நாளை சல்வாஜுடும் போன்ற கொடூரமான படையாகவும் பரிணமிக்கலாம். நாடும் மக்களும் பாசிச பயங்கரவாதத்தின் பிடியில் தள்ளப்படும் பேரபாயம் நெருங்கிக் கொண்டிருக்கிறது. விழிப்புடனிருந்து அதனை முறியடிப்பதே இன்றைய அவசியமாகியுள்ளது.

● கதிர்



படிப்பகம்

www.padippkam.com

# அம்பானியின் சேவையில் மன்மோகன் அரசு!

**பெட்ரோலியத் துறை அமைச்சகமே அம்பானியின் பாக்கெட்டில் இருந்து வருவதை ஜெய்பால் ரெட்டியின் மாற்றல் மீண்டும் அம்பலப்படுத்தியிருக்கிறது.**

மைய அமைச்சரவை சமீபத்தில் மாற்றியமைக்கப்பட்டபொழுது, பெட்ரோலியத் துறை அமைச்சராக இருந்த ஜெய்பால் ரெட்டி அப்பொறுப்பிலிருந்து விடுவிக்கப்பட்டு, உப்பு சப்பில்லாத அறிவியல் - தொழில்நுட்பத் துறையின் அமைச்சராக அமர்த்தப்பட்டார். ஜெய்பால் ரெட்டி இப்படிப் பந்தாடப்பட்டதற்கு ரிலையன்ஸ் நிறுவன அதிபர் முகேஷ் அம்பானி கொடுத்த நெருக்குதல்தான் காரணம் எனப் பல்வேறு தரப்பிலிருந்தும் குற்றம் சுமத்தப்பட்டது. இந்தக் குற்றச்சாட்டில் எந்தளவிற்கு உண்மையுண்டு எனப் புருவத்தை நெறித்தவர்களின் ஐயத்தைத் தீர்த்து வைத்தார், பெட்ரோலியத் துறையின் புதிய அமைச்சர் வீரப்ப மொய்லி. ''நாட்டின் எரிசக்தி பாதுகாப்பைக் கருத்தில்கொண்டு சில முடிவுகளை விரைவாக எடுக்க வேண்டியிருக்கிறது'' எனக் கூறியதன் மூலமும்; கிருஷ்ணா-கோதாவரி ஆற்றுப் படுகையில் எரிவாயு வயல்களைக் குத்தகைக்கு எடுத்திருக்கும் ரிலையன்ஸ் நிறுவனத்தின் கணக்குகளை மைய அரசின் தலைமைக் கணக்காயர் தணிக்கை செய்வதைத் தள்ளிப் போட்டதன் மூலமும் எங்கப்பன் குதிருக்குள் இல்லை என்பதைப் போட்டுடைத்தார், அவர்.

கிருஷ்ணா-கோதாவரிப் படுகையிலுள்ள இயற்கை எரிவாயு வயல்களைக் குத்தகைக்கு எடுத்திருக்கும் ரிலையன்ஸ் நிறுவனம், அவ்வயல்களிலிருந்து எடுக்கப்படும் எரிவாயுவை யூனிட் ஒன்றுக்கு ரூ.226/- என்ற விலையில் அரசு நிறுவனங்களுக்கு விற்று வருகிறது. இவ்விலையை ரூ.756/- ஆக அதிகரிக்க வேண்டுமெனக் கோரி வருகிறது, அந்நிறுவனம். ஜெய்பால் ரெட்டி இவ்விலைஉயர்வுக்கு அனுமதி அளிக்க மறுத்துவிட்டதோடு, ரிலையன்ஸ் நிறுவனம் குத்தகை ஒப்பந்தத்தில் கூறப்பட்ட அளவிற்கு எரிவாயுவை உற்பத்தி செய்யாமல் குறைந்த அளவிற்கே உற்பத்தி செய்து வருவதால், அந்நிறுவனம் 2011-12 ஆம் நிதியாண்டில் 100 கோடி அமெரிக்க டாலர்களை அரசிற்கு அபராதமாகச் செலுத்த வேண்டும் என்றும் உத்தரவிட்டார். மேலும், இந்த உற்பத்திக் குறைவு காரணமாக ரிலையன்ஸ் நிறுவனத்தின் மீது 2012-13 ஆம் நிதியாண்டில் 172 கோடி அமெரிக்க டாலர்களும், 2013-14 ஆம் நிதியாண்டில் 210 கோடி அமெரிக்க டாலர்களும் அபராதம் விதிக்க வேண்டும் எனப் பரிந்துரையும் செய்திருக்கிறார். ஜெய்பால் ரெட்டி பெட்ரோலியத் துறையிலிருந்து தூக்கியெறியப்பட்டதன் பின்னணி இதுதான் என்பது இப்பொழுது ஏறத்தாழ உறுதியாகிவிட்டது.

ரிலையன்ஸ் அதிபர் முகேஷ் அம்பானி கொடுத்த நெருக்குதலால், பெட்ரோலியத் துறையில் இருந்து ''கல்தா'' கொடுக்கப்பட்ட ஜெய்பால் ரெட்டி




முதல் போட்டவனுக்கு இலாபம் கிடைக்காமல் ஜெய்பால் ரெட்டி தடுத்துவிட்டார்; அதனால் பிரதமர் மன்மோகன் சிங் அவரை பெட்ரோலியத் துறையிலிருந்து தூக்கியடித்து விட்டார் என்பது இந்தப் பிரச்சினையின் ஒரு சிறு பகுதிதான். இன்று பெட்ரோலியத் துறை அமைச்சகமே அம்பானியின் பாக்கெட்டில் இருப்பதாகக் கூறுகிறார்கள் இத்துறையைச் சேர்ந்த முன்னாள் அதிகாரிகள். கோதாவரிப் படுகையில் கொட்டிக் கிடக்கும் கச்சா எண்ணெய் மற்றும் இயற்கை எரிவாயு வளத்தை முகேஷ் அம்பானியின் ரிலையன்ஸ் குழுமம் கடந்த பத்தாண்டுகளுக்கும் மேலாகக் கொள்ளையடித்துக் கொழுப்பதற்கு முந்தைய பா.ஜ.க. கூட்டணி அரசும், இன்றைய காங்கிரசு கூட்டணி அரசும் எல்லாவிதத்திலும் துணையாக நின்றன; நின்று வருகின்றன. சட்டபூர்வமான முறையிலும் சட்டவிரோதமான முறையிலும் நடந்துவரும் இக்கார்ப்பரேட் கொள்ளை முன் அலைக்கற்றை ஊழலெல்லாம் சுண்டைக்காய் தான்.

கிருஷ்ணா-கோதாவரிப் படுகையில் கச்சா எண்ணெயும் இயற்கை எரிவாயுவும் இருப்பது கண்டறியப்பட்டவுடன், அப்படுகையின் பெரும்பகுதி - ஏறத்தாழ 339 சதுரகிலோமீட்டர் பரப்பளவு கொண்ட வயல்கள் உற்பத்திப் பகிர்வு என்ற ஒப்பந்தத்தின் அடிப்படையில், முந்தைய பா.ஜ.க. கூட்டணி அரசால் ரிலையன்ஸ் குழுமத்திடம் ஒப்படைக்கப்பட்டன. இப்படுகையில் கிடைக்கும்



படிப்பகம்



கே.ஜி. எண்ணெய் வயல் ஊழலின் சூத்திரதாரிகள்: முன்னாள் பெட்ரோலியத் துறை அமைச்சர் முரளி தியோரா (இடது), முன்னாள் ஹைட்ரோ கார்பன் தலைமை இயக்குநர் வீ.கே.சிபல் மற்றும் ரிலையன்ஸ் அதிபர் முகேஷ் அம்பானி.

இயற்கை எரிவாயுவைத் தோண்டியெடுக்க எவ்வளவு மூலதனம் போடப்படுகிறதோ, அம்மூலதனத்தை ரிலையன்ஸ் முழுமையாகத் திரும்ப எடுக்கும் வரை, அரசிற்குக் குறைந்தபட்ச ''ராயல்டி'' தொகை கொடுத்தால் போதும் என்பதுதான் உற்பத்தி பகிர்வு ஏல ஒப்பந்தத்தின் அடிப்படையான அம்சம். இந்த மூலதனம் அதிகரிக்க அதிகரிக்க, அரசிற்குக் குறைந்தபட்ச ராயல்டி கொடுக்கும் காலமும் அதிகரித்துக் கொண்டே போகும். உமி கொண்டுவந்தவன் அவல் தின்னும் கதைதான் இது. இந்த ஒப்பந்த விதிதான் இந்தப் பகற்கொள்ளையின் ஆணி வேராக அமைந்துள்ளது.

ரிலையன்ஸ் நிறுவனம் இப்படுகையில் துரப்பணப் பணியைத் தொடங்கியபொழுது, தினந்தோறும் 4 கோடி கனமீட்டர் இயற்கை எரிவாயுவைத் தோண்டியெடுக்க 239 கோடி அமெரிக்க டாலர் மூலதனச் செலவு பிடிக்கும் எனக் கணக்குக் காட்டியது. பின்னர், இம்மூலதனச் செலவை 519 கோடி அமெரிக்க டாலராக அதிகரித்து, தினந்தோறும் 8 கோடி கனமீட்டர் இயற்கை எரிவாயுவைத் துரப்பணம் செய்யப் போவதாகக் கணக்குக் காட்டியது. இறுதியாக, இம்மூலதனச் செலவை 880 கோடி அமெரிக்க டாலராக அதிகரித்தது, ரிலையன்ஸ்.

மணிசங்கர் அய்யர் பெட்ரோலியத் துறையின் அமைச்சராக இருந்தபொழுது, அவர் ரிலையன்ஸ் தனது மூலதனச் செலவை அதிகரித்துக் கொள்வதை அங்கீகரிக்க மறுத்திருக்கிறார். இந்நிலையில் மணிசங்கர் அய்யர் இத்துறையிலிருந்து திடீரென மாற்றப்பட்டு, அம்பானி குடும்பத்தாரால் ''மாமா'' என அன்புடன் அழைக்கப்படும் முரளி தியோரா பெட்ரோலியத் துறையின் அமைச்சராக்கப்பட்டார். எரிவாயு உற்பத்தியை இரண்டு மடங்கு அதிகரிப்பதற்கு, மூலதனச் செலவை நான்கு மடங்காக அதிகரிப்பது ஏற்றுக் கொள்ளத்தக்கதல்ல எனப் பொருளாதார நிபுணர்கள் சுட்டிக் காட்டியதையும் மீறி, பெட்ரோலியத் துறை அமைச்சராகப் பொறுப்பேற்றுக் கொண்ட முரளி தியோராவும், ஹைட்ரோ கார்பன் துறையின் தலைமை இயக்குநராக இருந்த சிபலும் ரிலையன்ஸ் தனது மூலதனச் செலவை அதிகரித்துக் கொள்வதற்கு ஒப்புதல் அளித்தனர்.

ரிலையன்ஸ் நிறுவனம் இப்படுகையைக் குத்தகைக்கு எடுத்தபொழுது, ஒரு யூனிட் இயற்கை எரிவாயு 124/- ரூபாய் என்ற அடிப்படையில் பதினேழு ஆண்டுகளுக்குத் தேசிய அனல் மின் கழகத்திற்குத் தருவதாக பெட்ரோலிய அமைச்சகத்திடம் ஒப்பந்தம் செய்து கொண்டது. ஆனால், உற்பத்தி தொடங்கிய ஓரிரு ஆண்டுகளுக்குள்ளாகவே ஒரு யூனிட் இயற்கை எரிவாயுவின் விலையை 226 ரூபாயாக உயர்த்த வேண்டுமென பெட்ரோலிய அமைச்சகத்திடம் கோரிக்கை வைத்தது. உள்நாட்டில் உற்பத்தி செய்யப்படும் இயற்கை எரிவாயுவை சர்வதேசச் சந்தை விலை அடிப்படையில் ரிலையன்ஸ் விற்க முயலுவது எந்த விதத்திலும் நியாயமற்றது என முதலாளித்துவப் பொருளாதார நிபுணர்கள் எதிர்ப்பு தெரிவித்ததையும் பொருட்படுத்தாமல், பிரணாப் முகர்ஜி தலைமையில் செயல்பட்டுவந்த அதிகாரமளிக்கப்பட்ட அமைச்சரவைக் குழு விலை உயர்வு என்ற பகற்கொள்ளைக்கு அனுமதி அளித்தது.

தேசிய அனல் மின் கழகம் இவ்விலை உயர்வை எதிர்த்து மும்பய் உயர் நீதிமன்றத்தில் தொடுத்த வழக்கில், அக்கழகத்திற்குச் சாதகமாகத் தீர்ப்பு அளிக்கப்பட்டது. எனினும், தேசிய அனல் மின் கழகத்திற்கு மட்டுமின்றி, தனது தம்பி அனில் அம்பானிக்கும் 226 ரூபாய் என்ற விலையின் அடிப்படையில் இயற்கை எரிவாயுவை விற்கத் தன்னை அனுமதிக்க வேண்டும் எனக் கோரி உச்ச நீதிமன்றத்தில் வழக்குத் தொடுத்தார், முகேஷ் அம்பானி. இந்த வழக்கின்பொழுது ஒரு யூனிட் இயற்கை எரிவாயுவின் உற்பத்திச் செலவு 2 அமெரிக்க டாலர்கள்தான் (ஏறத்தாழ நூறு ரூபாய்) என வாக்குமூலம் அளித்தது, ரிலையன்ஸ் நிறுவனம். இதேசமயத்தில், இந்திய அரசு நிறுவனமான எண்ணெய் - எரிவாயுக் கழகம் ஒரு யூனிட் இயற்கை எரிவாயுவை ரூ.100/-க்கும் குறைவாகவே சந்தையில் விற்பனை செய்து வந்தது. ஆனாலும், அப்பொழுது உச்சநீதிமன்ற



படிப்பகம்

www.padippkam.com

தலைமை நீதிபதியாக இருந்த கே.ஜி. பாலகிருஷ்ணன் தலைமையில் இவ்வழக்கை விசாரித்து வந்த அமர்வு மன்றம் ரிலையன்ஸுக்கு ஆதரவாகத் தீர்ப்பளித்தது.

இந்த விலை உயர்வினால் ரிலையன்ஸுக்கு 30,000 கோடி ரூபாய் வரை அதிரடி இலாபம் கிடைத்தது; தேசிய அனல் மின் கழகம் 24,000 கோடி ரூபாய் நட்டத்தில் தள்ளப்பட்டது.

இத்தீர்ப்பு வெளிவந்த அடுத்த ஐந்தாவது நாள் கே.ஜி. பாலகிருஷ்ணன் தலைமை நீதிபதி பதவியிலிருந்து ஓய்வு பெற்றார்; ஓய்வு பெற்ற அடுத்த நிமிடமே, கேபினட் அமைச்சருக்குரிய தகுதி கொண்ட தேசிய மனித உரிமை ஆணையத்தின் தலைவராக அவர் நியமிக்கப்பட்டார். இது காக்கை உட்காரப் பனம் பழம் விழுந்த கதையல்ல.

மைய அரசு ரிலையன்ஸ் நிறுவனம் கோரிய படி ஒரு யூனிட் இயற்கை எரிவாயுவின் விலையை ரூ.226/- என உயர்த்திய சமயத்திலேயே, இனி 2014-ஆம் ஆண்டு முடிய எரிவாயுவின் விலையை இதற்கு மேல் உயர்த்தக் கூடாது என நிபந்தனை விதித்து, ஒப்பந்தம் செய்து கொண்டிருந்தது. ஆனாலும், ரிலையன்ஸ் நிறுவனம் கடந்த ஓராண்டாகவே இயற்கை எரிவாயுவின் விலையை ரூ.756/- ஆக உயர்த்த வேண்டுமெனச் சண்டித்தனம் செய்து வருகிறது.

ரிலையன்ஸ்கோரி வரும் விலை உயர்வு ஒப்பந்த விதிகளுக்கு முரணானது என்பது ஒருபுறமிருக்க, இந்த விலை உயர்வை ஒப்புக்கொண்டால், ரிலையன்ஸிடமிருந்து எரிவாயுவைப் பெற்று இயங்கிவரும் மின் மற்றும் இரசாயன உர நிறுவனங்கள் அடுத்த ஓரிரு ஆண்டுகளில் 53,000 கோடி ரூபாய் வரை நட்டத்தைச் சந்திக்க நேரிடும். குறிப்பாக, மின்சாரத்திற்கும் இரசாயன உரத்திற்கும் மைய, மாநில அரசுகள் தந்துவரும் மானியம் அடுத்த ஆண்டுக்குள் 48,000 கோடி ரூபாய் வரை அதிகரிக்கும். விலை உயர்வினால் அரசுக்கு ஏற்படும் இந்த நட்டம், இழப்பு ரிலையன்ஸுக்குக் கிடைக்கும் இலாபம் என்பதைக் கூறத் தேவையில்லை.

இந்தக் காரணங்களை முன்வைத்து ஜெய்பால் ரெட்டி விலை உயர்வை அனுமதிக்கத் தேவையில்லை எனக் கூறி வந்தபொழுது, மைய அரசின் நிதித் துறையோ, ''நட்டம், கூடுதல் செலவு பற்றிக் கவலைப்பட வேண்டியது நாங்கள்தான்; பெட்ரோலியத் துறை இதில் மூக்கை நுழைக்கத் தேவையில்லை'' என ரிலையன்ஸுக்குச் சாதகமாக வாதாடியிருக்கிறது. பிரதம மந்திரி அலுவலகமோ இந்தப் பிரச்சினையில் ரிலையன்ஸுக்குச் சாதகமாக முடிவெடுக்க முடியாதென்றால், இதனைச் சட்டத் துறையிடமும், அதிகாரமளிக்கப்பட்ட அமைச்சரவைக் குழுவிடமும் விட்டுவிடுங்கள் என நயவஞ்சகமான ஆலோசனையை முன்வைத்தது.

ரிலையன்ஸ் நிறுவனம் ஒப்பந்தப்படி கோதாவரிப் படுகை வயல்களில் நாளொன்றுக்கு 8கோடி கன மீட்டர் அளவிற்கு இயற்கை எரிவாயுவை உற்பத்தி செய்ய வேண்டும். ஆனால், பெட்ரோலிய அமைச்சகம் விலை உயர்வுக்கு அங்கீகாரம் அளிக்காததால், ரிலையன்ஸ் நடப்பாண்டில் எரிவாயுவை உற்பத்தியை நாளொன்றுக்கு 2.7 கோடி கன மீட்டராகக் குறைத்ததோடு, அடுத்த ஆண்டில் தனது எரிவாயு உற்பத்தி நாளொன்றுக்கு 1.8 கோடி கன மீட்டராகக் குறைந்துவிடும் என்றும் அறிவித்தது. இதனால், கோதாவரி எரிவாயுவை நம்பியிருக்கும் மின் மற்றும் இரசாயன உர உற்பத்தி நிறுவனங்கள் ஒன்று தங்கள் உற்பத்தியை நிறுத்த வேண்டும்; அல்லது, வெளிநாடுகளிலிருந்து எரிவாயுவை அதிக விலை கொடுத்து - யூனிட் ஒன்றுக்கு ரூ.650/- கொடுத்து இறக்குமதி செய்து கொள்ள வேண்டும் என்ற நிலைக்குத் தள்ளப்பட்டன.

> **''பெட்ரோலிய அமைச்சகத்தில் மட்டுமல்ல, அரசின் அனைத்துத் துறைகளிலும் கார்ப்பரேட் நிறுவனங்களை நத்திப் பிழைக்கும் கும்பல்தான் இன்று அமைச்சர்களாக, அதிகாரிகளாக வலம் வருகின்றனர். பிரதம மந்திரியாக உட்காரவைக்கப்பட்டுள்ள மன்மோகன் சிங்கே உலக வங்கியின், அமெரிக்காவின் ஏஜென்ட்தான்! நாட்டின் வளங்களை இந்தியத் தரகு முதலாளிகளும் ஏகாதிபத்திய நிறுவனங்களும் கூட்டாகச் சேர்ந்து கொள்ளையடிப்பதற்குத் திறந்துவிடுவதுதான் இக்கும்பல் செய்துவரும் ஒரே திருப்பணி!''**

ரிலையன்ஸ் எரிவாயு உற்பத்தியை முடக்கியதால், 2012-13 ஆம் ஆண்டில் 12,000 மெகாவாட் மின் உற்பத்தியும், அடுத்த ஆண்டில் 13,500 மெகாவாட் மின் உற்பத்தியும் பாதிக்கப்படுமென்றும்; எரிவாயு இறக்குமதிச் செலவு, மின் மற்றும் இரசாயன உர உற்பத்தி பாதிப்பு மற்றும் கூடுதல் மானியச் செலவு ஆகியவற்றால் அரசிற்கு ஏற்படவுள்ள மொத்த இழப்பு ஏறத்தாழ 1,10,000 கோடி ரூபாயாக இருக்கக்கூடும் என மதிப்பிடப்பட்டுள்ளது. ரிலையன்ஸின் அடாவடித்தனமான இந்த உற்பத்தி முடக்கம், ஒருபுறம் கையை முறுக்கி காரியம் சாதிக்கும் தந்திரம் என்றால், மறுபுறம், அதிக விலை கிடைக்கும் வரை எரிவாயுவை உற்பத்தி செய்யாமல் முடக்கி வைப்பது, அத்தியாவசியப் பொருட்களைப் பதுக்கி வைப்பது போன்ற கிரிமினல் குற்ற நடவடிக்கையாகும்.

கூடங்குளம் அணு மின் நிலையத்திற்கு எதிராகப் போராடும் மீனவ கிராம மக்களை நாட்டின் வளர்ச்சிக்கு எதிரானவர்களாகக் குற்றஞ்சுமத்துவ



படிப்பகம்

www.padippkam.com

தோடு, அவர்கள் மீது தேசத் துரோகக் குற்றச்சாட்டு உள்ளிட்டுப் பல்வேறு கிரிமினல் வழக்குகளைத் தொடுத்துள்ள அரசு, 13,500 மெகாவாட் மின் உற்பத்தி முடங்குவதற்குக் காரணமான ரிலையன்ஸ் நிறுவனத்திற்கு எதிராகச் சுண்டுவிரலைக்கூட அசைக்கவில்லை. மாறாக, ஜெய்பால் ரெட்டியை பெட்ரோலியத் துறையிலிருந்து தூக்கியடித்து, ரிலையன்ஸ் நிறுவன முதலாளி முகேஷ் அம்பானியின் மனதைக் குளிர வைத்திருக்கிறது.

ஆறு சிலிண்டர்களுக்கு மேல் மானிய விலையில் சமையல் எரிவாயுவை வழங்கினால் பெட்ரோலிய நிறுவனங்களுக்குப் பெருத்த நட்டமேற்படும் எனப் பீதி கிளப்பி வரும் மைய அரசு, கோதாவரிப் படுகையில் கிடைக்கும் எரிவாயுவின் விலையை உயர்த்திக் கொள்ள ரிலையன்ஸுக்கு அனுமதி அளித்து, அதன் மூலம் அந்நிறுவனம் அடுத்த இரு ஆண்டுகளில் 43,000 கோடி ரூபாயைக் கொள்ளையடித்துக் கொள்வதற்கு ஏற்பாடு செய்து வருகிறது.



மைய அரசின் தணிக்கைத் துறை கிருஷ்ணா-கோதாவரிப் படுகை வயல்கள் ரிலையன்ஸ் நிறுவனத்திற்கு உற்பத்தி பகிர்வு என்ற முறையில் ஒதுக்கப்பட்டதிலும்; அவ்வயல்களிலிருந்து கச்சா எண்ணெயையும் எரிவாயுவையும் உற்பத்தி செய்ய போடப்பட்டுள்ளதாகக் கூறப்படும் மூலதனச் செலவிலும்; இயற்கை எரிவாயுவிற்கு விலை நிர்ணயம் செய்ததிலும் பல்வேறு முறைகேடுகள் நடந்திருப்பதைக் கண்டுபிடித்து, மைய அரசிற்கு அறிக்கை அளித்திருக்கிறது. இரண்டு ஆண்டுகளுக்கு முன்பே மைய அரசிடம் அளிக்கப்பட்டுள்ள அத்தணிக்கை அறிக்கையில், ரிலையன்ஸ் நிறுவனம், பெட்ரோலியத் துறை அமைச்சராக இருந்த முரளி தியோரா, ஹைட்ரோ கார்பன் துறையின் இயக்குநராக இருந்த சிபல் ஆகிய மூவரும் கூட்டுக் களவாணிகளாகச் செயல்பட்டு வந்திருப்பது தக்க ஆதாரங்களோடு அம்பலமாகியிருக்கிறது. எனினும், மைய அரசு அவ்வறிக்கையை வெளியேவிடாமல் அதிகாரத் தாழ்வாரங்களிலேயே அமுக்கிப் போட்டுவிட்டது.

அலைக்கற்றை ஒதுக்கீடு பெற்ற தனியார் நிறுவனங்களுள் சில, தங்களின் பங்குகளை 22,000 கோடி ரூபாய்க்கு விற்று இலாபமடைந்ததைப் போலவே, முகேஷ் அம்பானியும் கிருஷ்ணா-கோதாவரிப் படுகை ஒதுக்கீட்டில் 30 சதவீதப் பங்குகளை பிரிட்டிஷ் பெட்ரோலியம் என்ற பன்னாட்டு நிறுவனத்திற்கு 37,908 கோடி ரூபாய்க்கு விற்றுக் கொழுத்த இலாபத்தைச் சுருட்டியிருக்கிறார். இக்கார்ப்பரேட் பகற்கொள்ளை பற்றிய செய்திகள் பத்திரிகைகள் வழியாகக் கசிந்து வெளிவந்த பிறகும்கூட, பா.ஜ.க. உள்ளிட்ட எதிர்க்கட்சிகளும், சு.சாமி உள்ளிட்ட ஊழல் எதிர்ப்பு கனவான்களும் இதனைப் பெரிதாகக் கண்டு கொள்ளவில்லை. முகேஷ் அம்பானியின் (பண) பலம் இவர்களின் வாயை அடைத்துவிட்டது போலும்!

அம்பானி சகோதரர்களின் அன்பு மாமாவான முரளி தியோராவைத் தூக்கிவிட்டு, ஜெய்பால் ரெட்டியை பெட்ரோலியத் துறையின் அமைச்சராக்கிய தன் மூலம், அத்துறையில் எல்லாம் சட்டபூர்வமான வழியில் நடப்பதாகக் காட்டும் ஒரு நாடகத்தை அரங்கேற்றியது, மன்மோகன் சிங் கும்பல். முதலாளித்துவப் பத்திரிகைகளாலும், ஊழல் எதிர்ப்பு கனவான்களாலும், போலி கம்யூனிஸ்டுகளாலும் விதந்தோதப்படும் ஜெய்பால் ரெட்டியின் நேர்மை என்பது கார்ப்பரேட் பகற்கொள்ளையைச் சட்டபூர்வமான வழியில் மட்டுமே அனுமதிக்க முடியும் என்பது தவிர வேறெதுவுமில்லை. டீசலுக்கும் சமையல் எரிவாயு உருளைக்கும் வழங்கப்படும் மானியத்தை ரத்து செய்ய வேண்டும் எனக் கூறி வந்த தனியார்மயத்தின் தாசானு தாசன்தான் ஜெய்பால் ரெட்டி.

பெட்ரோலிய அமைச்சகத்தில் மட்டுமல்ல, அரசின் அனைத்துத் துறைகளிலும் கார்ப்பரேட் நிறுவனங்களை நத்திப் பிழைக்கும் கும்பல்தான் இன்று அமைச்சர்களாக, அதிகாரிகளாக வலம் வருகின்றனர். திட்ட கமிசனின் துணைத் தலைவர் மாண்டேக் சிங் அலுவாலியா, நிதியமைச்சர் ப.சிதம்பரம், வர்த்தகத் துறை அமைச்சர் ஆனந்த் சர்மா, தொலைத்தொடர்புத் துறை அமைச்சர் கபில் சிபல், கனரகத் தொழில் அமைச்சர் பிரஃபுல் படேல், மனித வள மேம்பாட்டுத் துறை அமைச்சர் பல்லம் ராஜூ, மின்சாரத் துறை அமைச்சர் ஜோதிர் ஆதித்யா சிந்தியா - இவர்கள் அனைவருமே கார்ப்பரேட் நிறுவனங்களின் கைக்கூலிகள்தான். இவ்வளவு ஏன், பிரதம மந்திரியாக உட்காரவைக்கப்பட்டுள்ள மன்மோகன் சிங்கே உலக வங்கியின், அமெரிக்காவின் ஏஜென்ட்தானே! நாட்டின் வளங்களை இந்தியத் தரகு முதலாளிகளும் ஏகாதிபத்திய நிறுவனங்களும் கூட்டாகச் சேர்ந்து கொள்ளையடிப்பதற்குத் திறந்துவிடுவதுதான் இக்கும்பல் செய்துவரும் ஒரே திருப்பணி!

● செல்வம்



படிப்பகம்

www.padippkam.com

# தேசிய முதலீட்டு வாரியம்:

# கார்ப்பரேட் நிறுவனங்களின் கைத்தடி!

**தேசிய முதலீட்டு வாரியம் கார்ப்பரேட் நிறுவனங்களுக்குச் சலுகை அளிப்பதில் ஒரு சூப்பர் அரசாங்கம் போலச் செயல்படும்.**

ஆயிரம் கோடி ரூபாய்க்கு மேல் முதலீடு செய்யும் அனைத்து உள்நாட்டு, வெளிநாட்டு தனியார் நிறுவனங்களுக்கும் விரைவாக உரிமம் வழங்குவதற்காக தேசிய முதலீட்டு வாரியம் (NIB) என்ற புதிய அமைப்பை முன்மொழிந்துள்ளார், நிதியமைச்சர் ப.சிதம்பரம். ஒரு பெரிய தொழில் நிறுவனம் ஒவ்வொரு துறையாக விண்ணப்பித்து அனுமதி பெறுவதில் உள்ள தாமதங்களைத் தவிர்த்து, அவர்களுக்கு அனைத்து அனுமதிகளையும் ஒரே இடத்தில் வழங்கும் மையமாக தேசிய முதலீட்டு வாரியம் செயல்படும் என்றும், இதற்கு பிரதமர் தலைவராகவும் நிதியமைச்சரும் சட்ட அமைச்சரும் உறுப்பினர்களாகவும் இருப்பார்கள் என்றும் ப.சிதம்பரம் அறிவித்துள்ளார். 12-வது ஐந்தாண்டு திட்டத்தின் இலக்கை நிறைவேற்ற இத்தகைய அமைப்பு உருவாக்கப்படுவது அவசியமாகியுள்ளதாக அவர் தெரிவிக்கிறார்.

இந்த வாரியம் நடைமுறைக்கு வந்தால், இனி தனித்தனியாக ஒவ்வொரு துறையிடமும் தொழில் தொடங்குவதற்கு முன்னதாக ஒப்புதல் பெறத் தேவையில்லை; எவ்விதத் தாமதமோ, தடங்கலோ இன்றி அனைத்தும் இந்த வாரியத்தில் விரைவாக நிறைவேற்றித் தரப்படும்; இதனால் தொழில் வளர்ச்சி விரைவாக சாத்தியப்படும் என்கிறார் ப.சிதம்பரம். வெறுமனே உரிமங்கள் வழங்குவது, ஒப்புதல் அளிப்பது என்பதாக மட்டுமின்றி, தேர்தல் ஆணையம், மையப் புலனாய்வுத்துறை போன்று சட்டரீதியாக அதிகாரம் கொண்ட அமைப்பாக இந்த வாரியம் இருக்கும்; ஒரு புதிய தொழில் நிறுவனத்துக்கு இந்த வாரியம் ஒப்புதல் அளித்துவிட்டால், அதன் பிறகு வேறு எந்தத் துறையும் இதற்கு ஆட்சேபனை தெரிவிக்க முடியாது; தொடங்கப்படும் தொழில் நிறுவனத்தால் மக்களுக்கும் சுற்றுச்சூழலுக்கும் பாதிப்பு ஏற்படுவதைப் பற்றி மனித உரிமை அமைப்புகளோ, சுற்றுச்சூழல் இயக்கத்தினரோ, எதிர்க்கட்சிகளோ கேள்விகள் எழுப்பினால் இதற்கு தேசிய முதலீட்டு வாரியம் பதிலளிக்க வேண்டிய அவசியமில்லை; அவற்றைப் பொருட்படுத்த வேண்டியதுமில்லை; அந்நிய முதலீடுகளை ஈர்க்கவும் நாட்டின் தொழில் வளர்ச்சியை விரைவாகச் சாத்தியமாக்கவும் இத்தகைய சட்ட ரீதியான அதிகார அமைப்பு அவசியமாகியுள்ளது என்று அவர் விளக்குகிறார்.

'ஒரு தொழில் முனைவர், தொழில் தொடங்குவதற்கு முன்பாக பல துறைகளிடமிருந்தும் அனுமதி பெறுவதற்கு பல ஆண்டுகளாகிவிடுகின்றன; இதனால் இலக்கு நிறைவேறாமல் நட்டம் ஏற்படுகிறது; சுற்றுச்சூழல் அமைச்சகத்தின் ஒப்புதல் கிடைத்தால், வனத்துறை அமைச்சகம் இழுத்தடிக்கிறது; இதனால் பல மின்திட்டங்கள் இன்னமும் ஒப்புதல் கிடைக்காமல் உள்ளன. நீண்ட இழுத்தடிப்புகளுக்குப் பிறகு ஒப்புதல்கள் கிடைத்தாலும், அதன் பிறகு மைய அரசானது, நிலம் கையகப்படுத்துவது, பாதிக்கப்பட்டோருக்கு நிவாரணமும் மறுவாழ்வும் அளிப்பது முதலான பிரச்சினைகளை வைத்து இழுத்தடிக்கிறது. அதிகார வர்க்கத்தின் சிவப்புநாடாத்தனம், ஊழல், மெத்தனம், அலட்சியம் தொடர்வதால், இதைக் களைந்தெறிய ஒரு அறுவை சிகிச்சை அவசியமாகிவிட்டது' - என்று இந்த அமைப்பை சி.ஐ.ஐ; அசோசெம், ஃபிக்கி முதலான தரகுப் பெருமுதலாளிகளின் சங்கங்கள் வரவேற்று ஆதரிக்கின்றன.

நம்நாட்டிலுள்ள அரசியலமைப்பு முறைகளின்படி, ஒவ்வொரு துறை சார்ந்த அமைச்சகத்திடமும் ஒப்புதல் பெற்றுதான் தொழில் திட்டங்களை நிறைவேற்ற முடியும். அத்தகைய சில்லறைத் தடைகள் கூட இருக்கக்கூடாது என்பதுதான் ஏகாதிபத்திய மூலதனத்தின் நோக்கம். அந்த நோக்கத்தை நிறைவேற்றும் சேவகர்களாக பிரதமரும் நிதியமைச்சரும் வரிந்து கட்டிக் கொண்டு கிளம்பியிருக்கிறார்கள். வேறு வார்த்தைகளில் சொன்னால், இந்தியாவில் ஏற்கெனவே நிலவிவரும் பெயரளவிலான ஜனநாயக ஆட்சியமைப்பு வடிவங்கள் இனி இருக்க வேண்டியதில்லை என்பதே இதன் பொருள்.

இயற்கை வளத்தையும் சுற்றுச்சூழலையும் ஒரு பெருந்தொழில் திட்டம் பாதிக்கும் என்றால், அதைத் தடுக்கின்ற பொறுப்பும் கடமையும் சுற்றுச்சூழல் அமைச்சகத்துக்கு உள்ளது. அதன்படி ஒரு திட்டத்தைத் தொடங்குவதற்கு முன்பாக இந்த அமைச்சகத்திடம் ஒப்புதல் பெற்றாக வேண்டும். தற்போதைய தேசிய முதலீட்டு வாரியம் நடைமுறைக்கு வந்துவிட்டால், இனி சுற்றுச்சூழல், பழங்குடியின நலத்துறை, மனிதவள மேம்பாட்டுத்துறை, கல்வி-சுகாதாரத்துறை அமைச்சகங்களின் ஒப்புதல் இல்லாமலேயே ஒரு பெருந்தொழில் திட்டத்தைத் தொடங்க முடியும். இப்படி எல்லா துறைகளுக்கான கடமைகளையும்



படிப்பகம்

www.padippkam.com

உரிமைகளையும் அதிகாரத்தையும் ஒரு அமைப்பே கையில் எடுத்துக் கொண்டால், மற்ற துறைகளும் அமைச்சர்களும் எதற்காக?


சுற்றுச்சூழல் துறை அமைச்சர் ஜெயந்தி நடராஜன்

ஒரு திட்டம் பழங்குடியின மக்களின் வாழ்வுரிமையைப் பறிக்கிறது என்றால், ஒரு திட்டம் சுற்றுச்சூழலைப் பாதிக்கிறது என்றால், இது பற்றி நாடாளுமன்றத்தில் எதிர்க்கட்சிகள் கேள்வி எழுப்பினால் சம்பந்தப்பட்ட துறைசார்ந்த அமைச்சர்கள்தான் பதிலளிக்க வேண்டியுள்ளது. ஒரு பெருந்தொழில் திட்டத்தால் உழைக்கும் மக்கள் பாதிக்கப்பட்டு போராட்டங்கள் நடந்தால், அவர்களுக்குப் பதிலளிக்க வேண்டியது அத்துறை சார்ந்த அமைச்சர்களும் அதிகாரிகளும்தான்.

ஆனால் தேசிய முதலீட்டு வாரியம் என்ற அமைப்புஇவற்றுக்குப்பதிலளிக்க வேண்டியதில்லை என்பதால், இந்த அமைப்பு பிற அமைச்சர்களின் அதிகாரத்தைப் பறிக்கும் வகையில் உள்ளது என்று சுற்றுச்சூழல் துறை அமைச்சரான ஜெயந்தி நடராசன் பிரதமருக்குக் கடிதம் எழுதி இந்த வாரியம் அமைக்கப்படுவதை எதிர்க்கிறார். பழங்குடியினர் விவகாரத்துறை அமைச்சர் கே.சி.தேவும் இதே காரணங்களைக்கூறி எதிர்க்கிறார். சுற்றுச்சூழல், மனித உரிமை அமைப்புகளும் ஊடகங்களும் எதிர்ப்பு தெரிவித்துள்ளன. உருவாக்கப்படும் இந்த வாரியம், ஜனநாயக அரசமைப்பு முறையின் அடித்தளத்தையே சிதைக்கிறது என்கிறது, இந்து நாளேடு. இந்த வாரியம் நடைமுறைக்கு வந்தால், அமைச்சர்களின், அமைச்சகங்களின் அதிகாரம் பறிக்கப்படுவது மட்டுமல்ல; நிலத்தை இழந்த விவசாயிகள் தங்கள் வாழ்வுரிமை பறிக்கப்படுவதை எதிர்த்து போராடினாலும் துறைசார்ந்த அமைச்சர்களோ, அதிகாரிகளோ பொறுப்பாக பதிலளிக்க முடியாது. போராட்டத்தை ஒடுக்க போலீசின் தடிகளும் துப்பாக்கிகளும்தான் பேசும்.


நிதியமைச்சர் ப.சிதம்பரம்

தேர்ந்தெடுக்கப்பட்ட மக்கள் பிரதிநிதிகளின், அமைச்சகங்களின் அதிகாரங்களைப் பறித்து இந்த வாரியத்திடம் இப்படி அதிகாரத்தைக் குவிப்பதன் காரணம் என்ன? ஏற்கெனவே நீடித்துவரும் பெயரளவிலான ஜனநாயக அரசமைப்பு முறைகளை மாற்றியமைக்க வேண்டிய அவசியம்தான் என்ன? தற்போதைய அரசும் ஆளும் வர்க்கங்களும் செயல்படுத்தி வரும் தனியார்மயம் - தாராளமயம் - உலகமயம் எனும் புதிய பொருளாதாரக் கொள்கையை மேலும் தீவிரமாகச் செயல்படுத்துவதற்கு ஏற்றதாக, நம்நாட்டில் ஏற்கெனவே உள்ள அரசியலமைப்புச்சட்டம் பொருத்தமானதாக இல்லை. தீவிரமாக்கப்படும் தனியார்மய-தாராளமய-உலகமயப் பொருளாதார நடவடிக்கைகளுக்குப் பொருத்தமாக அரசியலமைப்புச் சட்டத்தையே மறுவார்ப்பு செய்வது அவர்களுக்கு அவசியமாகியுள்ளது.

> **"தேர்ந்தெடுக்கப்பட்ட மக்கள் பிரதிநிதிகளைச் செல்லாக் காசாக்கிவிட்டு , ஏகபோக முதலாளிகளின் கொள்ளைக்கும் சுரண்டலுக்கும் ஏற்ற வகையில் அரசியலமைப்பு முறை வேகமாக மாற்றியமைக்கப்பட்டு வருகிறது. பெயரளவிலான ஜனநாயகம் கூட இல்லாமல், யாருக்கும் பதில்சொல்லப் பொறுப்பில்லாத ஒரு அப்பட்டமான பாசிச ஆட்சி வேகமாகத் திணிக்கப்பட்டு வருகிறது."**

எவ்வாறு சோசலிச சீனத்தில் கட்சியையும் ஆட்சியையும் கைப்பற்றிய முதலாளித்துவப் பாதையாளர்கள் முந்தைய அரசியலமைப்புச் சட்டங்களைப் படிப்படியாக மாற்றியமைத்து முதலாளித்துவ உற்பத்திமுறைக்கேற்ற முறையில் மறுவார்ப்பு செய்து முதலாளித்துவத்தை நிலைநாட்டினார்களோ, அதைப் போலவே நம் நாட்டில் ஏற்கெனவே நிலவிவரும் பெயரளவிலான ஜனநாயக அரசியலமைப்பு முறையை மாற்றியமைத்து தனியார்மய-தாராளமய- உலகமயமாக்கலுக்கு ஏற்ப இன்றைய ஆட்சியாளர்கள் மறுவார்ப்பு செய்து மறுகாலனியாதிக்கத்தை நிலைநாட்டி வருகின்றனர். ஏகாதிபத்திய உலகமயமாக்கம், அதன் இயல்பிலேயே ஜனநாயகத்தைச் சிதைக்கும் தன்மை கொண்டது. உலக அளவில் எல்லா வளங்களையும் கொள்ளையிடுவதற்குக்



படிப்பகம்

www.padippkam.com

கட்டற்ற சுதந்திரத்தைக் கோருவதுதான் உலகமயம். மறுகாலனியாக்கமானது பாசிச சர்வாதிகார அரசுகளையே, அப்படிப்பட்ட உள்கட்டமைப்பு கொண்ட அரசு வடிவங்களையே உலகு தழுவிய அளவில் கோருகின்றது. இதற்கேற்ப சட்டங்களையும் அமைப்புகளையும் நிறுவனங்களையும் மறுகட்டமைப்பு செய்து புதிய வகைப்பட்ட அரசுகளை உருவாக்குவதே உலகமயமாக்கத்தின் நோக்கமாக உள்ளது.

இப்படித்தான் தனியார்மய-தாராளமயமாக்கலைத் தொடர்ந்து இந்தியாவின் தொலைத்தொடர்புத்துறை, மின்துறை உட்பட பல துறைகளிலும் சுயேட்சையானதும் அதிகாரம் கொண்டதுமான அமைப்புகள் உருவாக்கப்பட்டன. சிறப்புப் பொருளாதார மண்டலங்களுக்காக விளைநிலங்களைக் கையகப்படுத்துவதற்கேற்ப நில உச்சவரம்புச் சட்டம் மாற்றியமைக்கப்பட்டது. இந்தியாவில் முதலீடு செய்துள்ள பன்னாட்டு ஏகபோக நிறுவனங்கள், வங்கி மற்றும் காப்பீடு துறைகளில் நுழைந்துள்ள அந்நிய நிதி நிறுவனங்களின் மீதான வழக்குகள்- தாவாக்களை நீதிமன்றத்துக்கு வெளியே கட்டப் பஞ்சாயத்து முறையில் தீர்த்துக் கொள்ளவதற்கு ஏற்ற வகையில் உரிமையியல் சட்டத் திருத்தம் கொண்டுவரப்பட்டு, வழக்குரைஞர்களின் போராட்டத்தால் அதை நடைமுறைப்படுத்துவதை மைய அரசு தற்காலிகமாக நிறுத்தி வைத்தது.

மொரிஷியஸ், சுவிட்சர்லாந்து போன்ற வரியில்லா சொர்க்கங்களின் வழியாக இந்தியாவில் முதலீடு செய்து வரி ஏய்ப்பு செய்வதைத் தடுக்க, ''வரி ஏய்ப்பைத் தடுப்பதற்கான பொது உத்தரவு (GAAR)'' என்ற புதிய வரிவிதிப்பு முறையை இந்திய அரசு முன்மொழிந்தது. இவ்வாண்டின் தொடக்கத்தில் பிரணாப் முகர்ஜி நிதியமைச்சராக இருந்தபோது, பட்ஜெட்டுக்குப் பின்னர் இந்த வரிவிதிப்பு முறை நடைமுறைக்கு வரப்போவதாக அறிந்ததும் பலதரப்பட்ட உள்நாட்டு, வெளிநாட்டு பெருமுதலாளிகள் கடும் எதிர்ப்பு தெரிவித்ததால், அது தற்காலிகமாக ஒத்தி வைக்கப்பட்டது. பின்னர், பார்த்தசாரதி ஷோமே என்பவர் தலைமையில் ஒரு நிபுணர் குழுவை பிரதமர் அமைத்தார். அது ஏகபோக முதலாளிகளின் விருப்பத்துக்கேற்ப தனது வழிகாட்டுதலையும் பரிந்துரைகளையும் அளித்துள்ளது. அதன்படியே வருமாண்டு ஏப்ரல் முதலாக நேரடி வரி விதிப்பு மூலம் இது நடைமுறைக்கு வரப் போகிறது.



உள்நாட்டு, வெளிநாட்டு ஏகபோக முதலாளிகளின் விருப்பத்துக்கேற்ப ''வரி ஏய்ப்பைத் தடுப்பதற்கான பொது உத்தரவு (GAAR)'' முறையைத் தயாரித்துள்ள நிபுணர் குழுவின் தலைவர் பார்த்தசாரதி ஷோமே.

மரபணு மாற்றுப் பயிர்களை இந்தியாவில் அனுமதிக்கக் கூடாது; இதற்கான கள ஆய்வுகள் செய்வதையும் நிறுத்த வேண்டும் - என்று வேளாண்மைக்கான நாடாளுமன்ற நிலைக்குழு தனது பரிந்துரையாக மத்திய அரசுக்குத் தெரிவித்துள்ளது. ஆளுங் கட்சி, எதிர்க்கட்சிகள் உள்ளிட்ட அனைத்துக்கட்சிஎம்.பி.களையும் கொண்ட நாடாளுமன்ற நிலைக் குழு அளித்துள்ள இப்பரிந்துரையின் மீது நாடாளுமன்றத்தில் விவாதம் வந்தால், எந்தக் கட்சியுமே இதை எதிர்த்துப் பேச வழியில்லை என்பதால், மரபணு மாற்றுப் பயிர்களுக்கு - அதாவது, மாண்சாண்டோ போன்ற ஏகபோக வேளாண் நிறுவனங்களின் பி.டி. பருத்தி விதைகளுக்கும், பி.டி. கத்தரிக்காய்க்கும் - எதிராகத்தான் நாடாளுமன்றம் முடிவெடுக்க வேண்டிய கட்டாயம் ஏற்படும். இப்படி நடந்தால் இனி மாண்சான்டோ இந்தியாவில் காலூன்றவே முடியாமல் போய்விடும் என்று ஆடிப்போன மன்மோகன்சிங், பேராசிரியர் ராவ் தலைமையில் ''பிரதமரின் அறிவியல் ஆலோசனைக் குழு (Scientific Advisory Council of PM)'' என்கிற நிபுணர் குழுவை அமைத்தார். அக்குழு, நாடாளுமன்ற நிலைக்குழுவின் பரிந்துரைகளை வரிக்குவரி மறுத்து, '' மரபணு மாற்றுப் பயிர்கள் சிறப்பான நல்ல விளைவுகளைத் தருகின்றன, இதை எதிர்ப்பவர்கள் விவரம் புரியாதவர்கள்'' என்று தனது பரிந்துரையாக அளித்துள்ளது. மீண்டும் கொல்லைப்புறமாக மாண்சான்டோவின் பி.டி.பருத்தி மற்றும் கத்திரிக்காயைத் திணிக்க இந்தக்குழுவின் பரிந்துரைப்படி செயல்பட முயற்சித்து வருகிறது, கைக்கூலி மன்மோகன் அரசு.

ஷோமே, ராவ் போன்றோர் தேர்ந்தெடுக்கப்பட்ட மக்கள் பிரதிகளுக்கும் மேலானவர்களாக, ஆலோசகர்களாக, நிபுணர் குழுக்களாக மேலிருந்து திணிக்கப்பட்டு அவர்களிடம் அதிகாரம் குவிக்கப்பட்டு வருகின்றது.

ஏகாதிபத்தி உலகமயக் கட்டத்தில், இப்படி மேலிருந்து மட்டுமின்றி, கீழிருந்தும் அரசு அதிகாரம் பிடுங்கப்பட்டு வருகின்றது. சிவில் சமூக அமைப்புகள் எனப்படும் தன்னார்வக் குழுக்களும் மகளிர் சுய உதவிக்குழுக்களும் ஏகாதிபத்திய உலகமயமாக்கத்தைக் கீழிருந்து செயல்படுத்தும் அமைப்புகளாக இயக்கப்படுகின்றன.

தேர்ந்தெடுக்கப்பட்ட மக்கள் பிரதிநிதிகளைச் செல்லாக்காசாக்கிவிட்டு , ஏகபோக முதலாளிகளின் கொள்ளைக்கும் சுரண்டலுக்கும் ஏற்ற வகையில் அரசியலமைப்புமுறை வேகமாக மாற்றியமைக்கப்பட்டு வரு

● மனோகரன்



படிப்பகம்

www.padippkam.com

# விவசாயிகளின் வாழ்வைப் பறிக்கும் மின்திட்டங்கள்

**விதர்பா பிராந்திய விவசாயிகளின் தற்கொலைச் சாவுகளைத் தீவிரப்படுத்தும் வகையில் அங்கு 71 அனல் மின்நிலையங்கள் உருவாக்கப்பட்டு விவசாயத்துக்கான தண்ணீர் அனைத்தும் உறிஞ்சப்படுகிறது.**

நாடெங்கும் ஆட்சியாளர்கள் 66-வது சுதந்திர தினத்தைக் கோலாகலமாகக் கொண்டாடிக் கொண்டிருந்த போது, மகாராஷ்டிராவின் விதர்பா பிராந்தியத்திலுள்ள வார்தா மாவட்டத்தின் சாகூர் கிராமத்தைச் சேர்ந்த சுரேஷ் கண்பத் போரே என்ற 40 வயதான விவசாயி, கடன் சுமை தாளாமல் ஆகஸ்ட் 15 அன்று தற்கொலை செய்து கொண்டு மாண்டுபோனார். அவர் பயிரிட்ட பி.டி. பருத்தி அதிக அளவு தண்ணீரையும் உரம் பூச்சிக்கொல்லி மருந்துகளையும் விழுங்கி, செலவு அதிகரித்துக் கொண்டே போனதாலும், கடந்த 3 ஆண்டுகளாக பி.டி. பருத்தியின் விளைச்சல் குறைந்து போனதாலும், கடன் சுமை பெருகி கந்துவட்டிக்காரர்கள் நெருக்கியதால் மனமுடைந்த அவர் தற்கொலை செய்து கொண்டார்.

விதர்பா பிராந்தியத்தில் 11 பெரிய அணைகளும் 58 நடுத்தர அணைகளும் உள்ளன. ஆனாலும் இப்பகுதியில் பாசன வசதியோ மிக மோசமானதாக இருக்கிறது. பருத்தி விவசாயிகளோ தண்ணீர் முறையாகக் கிடைக்காமல் தவிக்கிறார்கள். இடுபொருட்களின் செலவுகள் அதிகரிப்போடு, முறையாகப் பாசன நீர் இல்லாமல் பயிர்கள் பாழாவதும், விளைச்சல் குறைவதும், கடன்சுமை பெருகுவதும், அதனால் விவசாயிகள் தற்கொலைகள் அதிகரிப்பதும் தொடர்கிறது. விதர்பா பிராந்தியத்தில் மட்டும் கடன் சுமையால் 2002 முதலாக இதுவரை 8,200 விவசாயிகள் தற்கொலை செய்து கொண்டுள்ளனர். இந்த அவலம் இன்னமும் தொடர்ந்து கொண்டிருக்கிறது.

இந்நிலையில், இத்தற்கொலைகளைத் தீவிரப்படுத்தும் வகையில் இப்பிராந்தியத்தில் உருவாக்கப்படும் 71 அனல் மின்நிலையங்களால் புதிய அச்சுறுத்தல் ஏற்பட்டுள்ளது. இவற்றில் 33 மின்நிலையங்களுக்கு ஒப்புதல் அளிக்கப்பட்டு ரிலையன்ஸ், டாடா, எஸ்ஸார், இஸ்பட், ஜிண்டால் முதலான கார்ப்பரேட் நிறுவனங்கள் ஏற்கெனவே இங்கு மின்திட்டக் கட்டுமானப் பணிகளைத் தொடங்கியுள்ளன. 38 மின்திட்டங்கள் அனுமதிக்காகக் காத்திருக்கின்றன.

12-வது ஐந்தாண்டு திட்டத்தில், ஒரு லட்சம் மெகாவாட் மின்சாரத்தை உற்பத்தி செய்ய மைய அரசு தீர்மானித்துள்ளது. இதில் மகாராஷ்டிராவில் மட்டும் விவசாயிகளின் தற்கொலைகள் அதிகமாக நடந்துவரும் விதர்பா பிராந்தியத்தில் அனல் மின்நிலையங்களைத் தொடங்கி 55,000 மெகாவாட் மின்சாரம் தயாரிக்க முடிவாகியுள்ளது. இதன்படி, ஏறத்தாழ 2,049.2 மில்லியன் கன மீட்டர் அளவுக்கு விவசாயத்துக்கான பாசன நீர் இம்மின்திட்டங்களுக்காகத் திருப்பி விடப்படும். இத்திட்டங்களால் வார்தா ஆற்றின் நீர்மட்டம் 40 சதவீத அளவுக்குக் குறையும்.

விவசாயத்துக்கும் குடிநீருக்குமான நீரை, தொழிற்சாலைப் பயன்பாட்டுக்கு ஒதுக்குவது சட்டவிரோதமானது. பருத்தி, கரும்பு விவசாயம் நடந்துவரும் விதர்பா பிராந்தியத்தின் கிராமப்புறங்களில் கிளைக் கால்வாய்கள் இல்லாததால் விவசாயம் செய்ய முடியாமல் விவசாயிகள் தவித்துக் கொண்டிருக்கும் நிலையில், விதர்பா பாசன வளர்ச்சிக் கழகமோ இதனால் விவசாயிகளுக்கு எந்தப் பாதிப்பும் ஏற்படாது என்கிறது. அரசாங்கமோ, விவசாயிகள் நீர்ப்பாசனத்தைப் பயன்படுத்

விதர்பாவின் தீராத அவலம்:கடன் சுமை தாளாமல் தற்கொலை செய்து கொண்டு மாண்டுபோன கொத்தோடா கிராமத்தைச் சேர்ந்த விவசாயி கஜனன் கோடேகர்.





படிப்பகம்

www.padippkam.com

தாததாலேயே அவற்றை மின்திட்டங்களுக்குத் திருப்பி விட்டதாகப் புளுகிக் கொண்டிருக்கிறது.

ஏற்கெனவே தானே மாவட்டத்தில் 1996-இல் தொடங்கப்பட்ட ரிலையன்ஸ் எனர்ஜி லிமிடெட் நிறுவனத்தின் 500 மெகாவாட் திறன் கொண்ட அனல் மின்திட்டத்தால் தகானு எனும் கிராமமே நாசமாகிவிட்டது. இவ்வட்டாரத்தில் பயிர்களின் மீது சாம்பல் படிந்து விளைச்சல் இல்லாமல் போயுள்ளதோடு, நீர்நிலைகள் பாழாகி கால்நடைகளுக்குக்கூட தண்ணீர் இல்லாமல் விவசாயிகள் தவிக்கின்றனர்.



பா.ஜ.க. தலைவர் நிதின் கட்காரி.

இந்நிலையில், விவசாயத்துக்கு அல்லாமல் தண்ணீரை அனல் மின் திட்டங்களுக்குத் திருப்பி விடப்பட்டால் விதர்பா பிராந்தியமே வறண்ட பாலைவனமாகிப் போகும். அனல் மின் திட்டங்களால் விவசாயிகளில் சில ஆயிரம் பேருக்கு வேலை கிடைக்கும் என்று கூறப்பட்டாலும், இலட்சக்கணக்கான இதர விவசாயிகளின் அப்பகுதியில் வாழக்கூட முடியாத நிலையில் தள்ளப்படுவார்கள். ஏற்கெனவே கடன் சுமையால் தற்கொலைகள் தொடரும் விதர்பாவில், விவசாயத்துக்குத் தண்ணீரும் இல்லாமல் போனால் விவசாயிகளின் தற்கொலைகள் மேலும் தீவிரமாகும். அதனாலென்ன? விவசாயமும் விவசாயிகளும் அழிந்தாலும் பரவாயில்லை, மின்திட்டங்கள் தான் முக்கியம் என்பதுதான் அரசின் அறிவிக்கப்படாத கொள்கையாகிவிட்டது. மின் பற்றாக்குறையைக் காரணமாகக் காட்டி இப்படி விதர்பா பிராந்தியத்தை நாசமாக்கும் செயல் நியாயப்படுத்தப்படுகிறது. மின் திட்டங்களுக்காக அரசின் சலுகைகளும் மானியங்களும் வாரியிறைக்கப்படுகின்றன.

தேசியவாத காங்கிரசு கட்சியின் முன்னாள் நீர்ப்பாசனத்துறை அமைச்சர் அஜித்பவார்



விவசாயத்தையும் விவசாயிகளையும் அழிக்கும் மின்திட்டங்களை உருவாக்கிக் கொள்ளையடிக்கும் ஓட்டுப்பொறுக்கிகளும் முதலாளிகளும் இதற்கு முன்பாக இதே விதர்பா விவசாயிகளைக் காட்டி இன்னுமொரு கூட்டுக் கொள்ளையை நடத்தினர். மகாராஷ்டிராவில் விதர்பா பிராந்தியத்தில் விவசாயிகள் கடனில் சிக்கி தற்கொலைகள் பெருகிய நிலையில், விவசாயிகளின் மேம்பாட்டுக்காகவும், விவசாய உள்கட்டமைப்பு மற்றும் நீர்ப்பாசனத் திட்டங்களுக்காகவும் பல்லாயிரம் கோடிகள் ஒதுக்கப்பட்டன. ஒப்பந்ததாரர்களோ இத்திட்டங்களின் செலவினங்களைப் பலமடங்கு உயர்த்தி கொள்ளையடித்தனர்.

2009-இல் தேசியவாத காங்கிரசு அரசில் அஜித்பவார் நீர்வளத்துறை அமைச்சராக இருந்தபோது, 20,000 கோடி மதிப்பில் விதர்பா பிராந்தியத்தில் 32 திட்டங்களும் கொங்கண் பிராந்தியத்தில் 6 திட்டங்களுமாக மொத்தம் 38 நீர்ப்பாசனத் திட்டங்களுக்கு நாலே நாளில் முறைகேடாக அனுமதி அளித்தார். இத்திட்டங்களைச் செயல்படுத்திய ஒப்பந்ததாரர்களோ, விதர்பா நீர்ப்பாசன வளர்ச்சிக் கழகம் திட்டமிட்டதை விட 300% அளவுக்கு செலவுகள் அதிகரித்துவிட்டதாகக் கணக்கு காட்டினர். அது குறித்து அரசு விசாரணை ஏதும் செய்யாமலேயே, செலவை 6 முதல் 33 மடங்கு உயர்த்திக் கொள்ள தாராள அனுமதி அளித்துள்ளது. உதாரணமாக, வார்தா கீழணைத் திட்டத்துக்கான உத்தேச திட்ட மதிப்பீடு ரூ.950 கோடியிலிருந்து, திருத்தப்பட்ட திட்டச் செலவு ரூ. 2,356 கோடியாக உயர்த்தப்பட்டது.

பா.ஜ.க. தலைவரான நிதின் கட்காரி இப்பிராந்தியத்தில் 5 மின் நிறுவனங்களையும் 3 சர்க்கரை ஆலைகளையும் வைத்திருக்கிறார். இதுதவிர, கட்டுமான நிறுவனம், சாராயம், விவசாயப் பொருட்களைப் பதப்படுத்தும் ஆலை முதலானவற்றையும் கொண்டு மிகப் பெரிய முதலாளியாக அவர் வளர்ந்துள்ளார். கட்காரியின் பூர்த்தி பவர் நிறுவனக் குழுமத்தின் கீழ் அவினாஷ் எரிபொருள் எனும் நிறுவனம் மகாராஷ்டிரா, ஒரிசா, ம.பி. மாநிலங்களில் நிலக்கரி சுரங்கத் தொழிலில் ஈடுபட்டுள்ளது.

ஐடியல் ரோடு பில்டர் எனும் நிறுவனம் பா.ஜ.க. தலைவர் நிதின் கட்காரியின் பூர்த்தி பவர் மற்றும் சர்க்கரை ஆலை ஆகியவற்றுக்கு நிதியளித்துள்ளது. நிதின் கட்காரி, முன்பு மகாராஷ்டிர மாநிலப் பொதுப்பணித்துறை அமைச்சராக இருந்தபோது, ஐடியல் ரோடு பில்டர் நிறுவனத்துக்குப் பல்வேறு ஒப்பந்தங்களை அள்ளிக் கொடுத்துள்ளார். அதற்குக் கைமாறாக ஐடியல் நிறுவனம் கட்காரியின் நிறுவனங்களுக்குக் கடன் கொடுத்துள்ளதாகக் கணக்குக்காட்டியது. கட்காரியின் மகன் நிகில், 270 மெகாவாட் திறன் கொண்ட ஐடியல் எனர்ஜி மின் நிறுவனத்தில் சுயேட்சையான இயக்குனராக உள்ளார்.



படிப்பகம்

கட்காரியின் பூர்த்தி சர்க்கரை மற்றும் மின் நிறுவனத்தின் 70 சதவீதப் பங்குகளை 18 நிறுவனங்கள் வைத்துள்ளன. இந்த 18 நிறுவனங்கள் யார்? அவற்றின் பங்குதாரர்கள் யார் என்ற விவரத்துக்குள் போனால், அந்தப் பங்குதாரர்கள் எவருக்கும் முறையான முகவரியே இல்லை. உதாரணமாக, எர்ன்வெல் வர்த்தகர்கள் என்ற நிறுவனம் பூர்த்தி நிறுவனத்தில் 5 கோடி ரூபாய் அளவுக்குப் பங்குகளை வாங்கியுள்ளது. இந்த நிறுவனத்தின் முகவரியாக மாலாட் கிழக்குப் பகுதியிலுள்ள கோவிந்த் கர்மான் குடியிருப்பிலுள்ள பெயர் கொடுக்கப்பட்டுள்ளது. ஆனால் அந்தக் குடியிருப்பில் சென்று விசாரித்தால், அப்படியொரு நிறுவனமே இங்கு இல்லை என்று குடியிருப்போர் தெரிவிக்கின்றனர். பூர்த்தி நிறுவனத்தின் பங்குகளை வாங்கியுள்ள பல பங்குதாரர்களின் கதையும் இதுதான். ஆனால் கட்காரியோ, பூர்த்தி நிறுவனத்தில் ஆயிரக்கணக்கான விவசாயிகள் பங்குதாரர்களாக இருப்பதால், அவர்கள் அடிக்கடி இடம் மாறியிருக்கலாம், அவர்களின் முகவரிகளைத் துல்லியமாக தெரிவிக்க வாய்ப்பில்லை என்கிறார்.



''பாசனத்துக்கான தண்ணீரைப் பறிக்காதே!'' - விதர்பா பிராந்தியத்தின் பெடி கீழணைத் திட்டப் பகுதியில் அனல் மின் நிலையம் அமைக்கப்படுவதை எதிர்த்துப் போராடும் கிராம மக்கள்.

மனோகர் பன்சீ என்பவர் கட்காரியின் வாகன ஓட்டுநர். அவர் அஷ்வாமி வர்த்தகம் என்ற நிறுவனத்தை நடத்துவதாகவும், அந்த நிறுவனம் கட்காரி நிறுவனத்தில் 3.2 கோடிக்கு பங்குகளை வாங்கியுள்ளதாகவும் கணக்கு காட்டுகிறார் கட்காரி. நீர்ப்பாசனத் திட்டங்களுக்கான ஒப்பந்தங்களைப் பெற்ற நிறுவனங்களில் ஒன்றுதான் பா.ஜ.க. தலைவரான கட்காரியின் கூட்டாளியும் பா.ஜ.க. எம்.பி.யுமான அஜய் சஞ்செட்டியின் நிறுவனமாகும். இந்நிறுவனம் தேசியவாதக் காங்கிரசு அரசுடன் கூட்டுச் சேர்ந்து செலவுத்தொகையை பலமடங்கு உயர்த்திக் காட்டியதும், விவசாயிகளின் நலனை முன்னிட்டு இந்த நிலுவைத் தொகையை உடனடியாகச் செலுத்துமாறு மத்திய நீர்வளத்துறை அமைச்சருக்கு கட்காரி கடிதம் எழுதியுள்ளார். ஒப்பந்தக்காரர்களால் கூடுதலாகக் கோரப்பட்ட தொகையைச் செலுத்துமாறு மைய அரசுக்கு பலமுறை கடிதம் எழுதிய கட்காரி, இந்த அணைக்கட்டுத் திட்டங்களின் மூலம் கிடைக்கும் தண்ணீரை விவசாயிகளுக்குக் கொடுக்காமல், மின் நிறுவனங்களுக்குத் தாரை வார்ப்பதை எதிர்த்து மைய அரசுக்கு ஒரு கடிதம் கூட எழுதவில்லை. இதுதான் விவசாயிகளின் நலனுக்காக உருகுவதாக நாடகமாடும் கட்காரியின் லட்சணம்.

போலி நிறுவனங்களின் பெயரால் கட்காரி நிறுவத்தில் முதலீடுகள் செய்யப்பட்டதையொட்டி குற்றச்சாட்டுகள் கிளம்பியதும், அவரைத் தலைவர் பதவியிலிருந்து விலகுமாறு பா.ஜ.க. வின் தலைவர்களான முன்னாள் மத்திய அமைச்சர் ராம்ஜெத்மலானி, யஷ்வந்த் சின்கா ஆகியோரும், பா.ஜ.க. நாடாளுமன்ற உறுப்பினரான நடிகர் சத்ருகன் சின்காவும் போர்க்கொடி தூக்கினர். இத்தனைக்கும் பிறகும் கட்காரியின் மீதான குற்றச்சாட்டுகள் அவரது வர்த்தகத்தில் நடந்துள்ள தவறுகள்தானே தவிர, அவர் அதிகாரத்தைப் பயன்படுத்தி ஊழலில் ஈடுபட்டார் என்பதற்கான ஆதாரமல்ல என்கின்றனர், அத்வானியும் குருமூர்த்தியும்.

விதர்பாவில் நிலவிய விவசாயிகளின் தற்கொலையையும் அவலத்தையும் காட்டி நீர்ப்பாசனத் திட்டங்களைத் தொடங்கி கொள்ளையடித்த அனைத்து ஒட்டுப்பொறுக்கிகளும் முதலாளிகளும், இப்போது அந்த நீர்ப்பாசனத் திட்டங்களால் கிடைக்கும் தண்ணீரை மின்நிலையங்களுக்கும் சர்க்கரை ஆலைகளுக்கும் மடைமாற்றிக் கொண்டுள்ளனர். விதர்பாவில் இப்போது பாசனத்துக்கு நீருமில்லாமல் போனதோடு, இப்பகுதியில் உருவாக்கப்படும் மின்திட்டங்களால் விவசாயிகளை விவசாயத்திலிருந்தே விரட்டியடிக்கப்பட்டு பட்டினிச் சாவுக்குள் தள்ளப்படும் பேரபாயம் நெருங்கிக் கொண்டிருக்கிறது.

ஒரிசாவிலும் சட்டிஸ்கரிலும் பழங்குடியின மக்களை விரட்டியடித்துவிட்டு கனிமவளங்களைக் கொள்ளையடிக்கும் கார்ப்பரேட் முதலாளிகள், விதர்பாவில் நிலவும் விவசாயிகளின் அவலத்தை மூலதனமாகக் கொண்டு அதன் வழியாகக் கேள்விமுறையின்றிக் கொள்ளையடித்து வருகின்றனர். தனியார்மயம் - தாராளமயம் என்பது விவசாயிகளுக்கும் உழைக்கும் மக்களுக்கும் கொடூரமானது என்பதையும், அது கார்ப்பரேட் முதலாளிகளின் பகற்கொள்ளைக்கானதுதான் என்பதையும் நாட்டுக்கு உணர்த்திவிட்டு தீராத அவலத்தில் புதைந்து கொண்டிருக்கிறது, மகாராஷ்டிராவின் விதர்பா பிராந்தியம்.

● குமார்

www.padippkam.com

## காசா முனை:

# பேரழிவு ஆயுதங்களைப் பரிசோதிக்கும் களமானது!

**அமெரிக்கா–இசுரேல் கூட்டணி காசா முனை மீது நடத்திய தாக்குதல், இரான் போருக்கான முன்தயாரிப்பாகும்.**

பாலஸ்தீன சுயாட்சிப் பகுதியான காசா முனை மீது நவம்பர் 14 தொடங்கி 22 முடிய, ஒரு வார காலம் மீண்டும் ஒரு முழு அளவிலான இராணுவத் தாக்குதலைத் தொடுத்தது, இசுரேல். இப்போர் நடந்த ஒரே வாரத்திற்குள், காசா முனை மீது ஆயிரத்துக்கும் மேற்பட்ட முறை வான்வழித் தாக்குதல்களை நடத்தி, நூற்றுக்கும் மேற்பட்ட பாலஸ்தீனர்களைக் கொத்துக் கொத்தாகக் கொன்றது, யூத மதவெறி இசுரேல் அரசு. கொல்லப்பட்டவர்களுள் பெரும்பாலோர் பெண்கள், குழந்தைகள் உள்ளிட்ட சாதாரண பொதுமக்கள் என்பது தற்பொழுது உலகெங்கும் அம்பலமாகிவிட்டது. இதுவொருபுறமிருக்க, காசா முனைப் பகுதியினுள் நுழைந்து தரைவழிப் போரை நடத்துவதற்கு 75,000 சிப்பாய்கள் தயாராக இருப்பதாகவும் இசுரேல் அறிவித்தது.

''காசா முனை சுயாட்சிப் பகுதியில் ஆட்சி நடத்தி வரும் ஹமாஸ் இயக்கம், கடந்த நவம்பர் 10 அன்று தன் மீது ராக்கெட் தாக்குதலை நடத்தியது. அதனால் தனது நாட்டையும் குடிமக்களையும் தற்காத்துக் கொள்ளும் நோக்கத்தில்தான் இந்த இராணுவத் தாக்குதலை நடத்தியதாக''க் கூறித் தனது ஆக்கிரமிப்புப் போர் நடவடிக்கைகளை நியாயப்படுத்தி வருகிறது, இசுரேல். இதுவொரு புளித்துப் போன காரணம் மட்டுமல்ல, நவம்பர் 10 அன்று ஹமாஸ் இயக்கம் நடத்திய ராக்கெட் தாக்குதலை இசுரேலின் மீது தொடுக்கப்பட்ட போர் போலக் குற்றஞ்சுமத்துவதற்கு எந்தவொரு அடிப்படையும் கிடையாது.

1990-களில் இசுரேலுக்கும் பாலஸ்தீன விடுதலை இயக்கத்துக்கும் கையெழுத்தான ஆஸ்லோ ஒப்பந்தப்படி காசா முனை சுயாட்சிப் பகுதியாக அறிவிக்கப்பட்டுள்ளபோதிலும், உண்மையில் காசா முனை இன்றும் இசுரேலின் ஆக்கிரமிப்பு-முற்றுகையின் கீழ்தான் இருந்துவருகிறது. காசா முனைப் பகுதியில் செல்வாக்குடன் உள்ள ஹமாஸ் இயக்கத்தினரை ஒடுக்க வேண்டும் என்பதற்காகவே, அப்பகுதி மீது 2008-ஆம் அண்டு தொடங்கி ஒரு சட்டவிரோதமான பொருளாதாரத் தடையை விதித்து, அத்தியாவசிய உணவுப் பொருள் போக்குவரத்தைக்கூடத் தடுத்து வருகிறது, இசுரேல். இப்பொருளாதாரத் தடை இனப்படுகொலைக்குச் சமமானது எனக் குற்றஞ்சுமத்தப்பட்ட பின்னும் இத்தடையை நீக்க மறுக்கிறது, இசுரேல். இது மட்டுமின்றி, காசா முனை மீது பீரங்கி கொண்டு தாக்குவது உள்ளிட்டு ஒரு தாழ்நிலைப் போரைத் தொடர்ந்து நடத்தியும் வருகிறது, இசுரேல்.



காசாமுனை மீது இசுரேல் நடத்திய விமானத் தாக்குதலில் கொல்லப்பட்ட சிறுவர்களின் உடலை ஏந்தியவாறு பாலஸ்தீன மக்கள் நடத்திய ஆர்ப்பாட்டம்.

இசுரேலின் இந்தச் சட்டவிரோத ஆக்கிரமிப்பைப் புறக்கணித்துவிட்டு, ஹமாஸ் நடத்தி வரும் ராக்கெட் தாக்குதல்களைப் பயங்கரவாதமெனக் குற்றஞ்சுமத்துவது ஒருதலைப்பட்சமானது. குறிப்பாக, நவம்பர் மாதத் தொடக்கத்தில் இசுரேல் காசா முனை மீது அடுத்தடுத்து நடத்திய இரண்டு தாக்குதல்களில், வீதிகளில் சுற்றித் திரிந்த ஒரு மனநோயாளியும், ஒரு 13 வயதுச் சிறுவனும் மாண்டு போனார்கள். இதற்குப் பதிலடியாகத்தான் ஹமாஸ் இசுரேலின் மீது நவம்பர்




படிப்பகம்

www.padippkam.com

10 அன்று ராக்கெட் தாக்குதலை நடத்தியது.

காசாமுனைமீது மீண்டும் ஒரு முழுநிறைவான இராணுவத் தாக்குதலைத் தொடுப்பதற்குக் காரணம் தேடிக் கொண்டிருந்த யூத மதவெறி பாசிச ஆட்சியாளர்களுக்கு இந்த ராக்கெட் தாக்குதல் சாக்காகக் கிடைத்தது என்பதே உண்மை. இந்த ராக்கெட் தாக்குதல் நடந்திருக்காவிட்டாலும் காசா முனைமீது இத்தகைய தாக்குதலை நடத்துவதற்கு இசுரேல் வேறொரு புளுகை அவிழ்த்துவிடவும் தயங்கியிருக்காது. ஏனென்றால், இசுரேலும், அதன் எஜமானனான அமெரிக்காவும் சில அரசியல்-இராணுவ நோக்கங்களுக்காக காசா முனை மீது இப்படியானதொரு விரிந்த தாக்குதலைத் தொடுக்கக் காத்திருந்தனர் என்பதும் தற்பொழுது அம்பலமாகியிருக்கிறது. குறிப்பாக, இத்தாக்குதல் தொடங்குவதற்கு முன்பாக இசுரேலும் அமெரிக்காவும் கூட்டாக நடத்திய இராணுவ ஒத்திகையைத் தற்செயலானதாக ஒதுக்கித் தள்ளிவிடவும் முடியாது.



இசுரேலின் விமானப் படையால் குறி வைத்துத் தாக்கிக் கொல்லப்பட்ட ஹமாஸ் இராணுவத் தளபதி அகமது ஜாபாரி (உள்படம்) மற்றும் தாக்குதலில் நாசமான ஜாபாரி பயணம் செய்த கார்.

லெபனான் நாட்டில் இயங்கிவரும் ஹிஸ்புல்லா குழுவுக்கும் இசுரேலுக்கும் 2006-ஆம் ஆண்டு நடந்த போரின்பொழுது, ஹிஸ்புல்லா குழு நடத்திய ராக்கெட் தாக்குதல்களை இசுரேலால் சமாளிக்க முடியாமல் போனது. இப்படிபட்ட ராக்கெட் தாக்குதல்களிலிருந்து தன்னைத் தற்காத்துக் கொள்வதற்காக, ராக்கெட்டுகளை இடைமறித்து அழிக்கும் ஏவுகணை பாதுகாப்பு கேடயத் தொழில்நுட்பத்தை, அப்போருக்குப் பின் அமெரிக்காவின் உதவியோடு உருவாக்கி வருகிறது, இசுரேல். இரும்பு மாடம் (Iron Dome) என அழைக்கப்படும் இப்பாதுகாப்புக் கேடய செயல்திறனைப் பரிசோதித்துப் பார்ப்பதற்கான வாய்ப்பாக இந்தத் தாக்குதலைப் பயன்படுத்தியது, இசுரேல். இரானின் அதிகதொலைவு சென்று தாக்கும் ராக்கெட்டுகளை இடைமறித்து அழிப்பதற்கு இந்த ஏவுகணைத் தொழில்நுட்பம் அவசியமானது என அமெரிக்க-இசுரேல் கூட்டணி கருதுவதால், காசா முனை மீது நடத்தப்படும் இத்தாக்குதலை ஒரு ஒத்திகையாக, இரான் மீதான போர் தயாரிப்புக்கான முன்னோட்டமாகவே கருதி நடத்தியது, அமெரிக்க-இசுரேல் கூட்டணி.

ஹமாஸ் இயக்கம் இசுரேல் மீது ஏவும் ராக்கெட்டுகள், இசுரேலிடம் உள்ளது போன்ற பேரழிவு ஏற்படுத்தும் ஆயுதம் கிடையாது. இந்த ராக்கெட் ஒருவரைக் கொல்ல வேண்டும் என்றால், அது நேரடியாக அவர் தலை மீது விழ வேண்டும் என மதிப்பிடுகின்றனர், இராணுவ வல்லுநர்கள். இத்தகைய ராக்கெட்டுகளை ஏவுவதற்கு காசா முனையில் அமைக்கப்பட்டுள்ள ஏவுதளங்களை அழிப்பது மற்றும் ஹமாஸ் இயக்கத்தின் முக்கியத் தலைவர்களைக் குறிவைத்துத் தாக்கிக் கொன்று, அவ்வியக்கத்தை இராணுவரீதியாகப் பலவீனப்படுத்துவது இத்தாக்குதலின் முக்கிய நோக்கமாகும். இதன் அடிப்படையில், ஹமாஸ் இயக்கத்தின் முக்கிய தளபதியான அகமது ஜாபாரி காரில் சென்றுகொண்டிருந்தபொழுது, விமானக் குண்டுவீச்சு மூலம் கொல்லப்பட்டார். ஹமாஸின் இராணுவக் கிடங்குகளை அழிப்பது என்ற போர்வையில் காசா முனையின் பிரதமர் அலுவலகம் உள்ளிட்ட முக்கிய அரசு அலுவலகங்கள், பத்திரிகை அலுவலகங்கள் என கேந்திரமான மையங்கள் அனைத்தையும் விமானக் குண்டுவீச்சு மூலம் தரைமட்டமாக்கியிருக்கிறது, இசுரேல். பொது மக்களின் குடியிருப்புகள் மட்டுமின்றி, காசா முனையில் ஐ.நா. மன்றம் நடத்தும் அகதி முகாம்கூட இசுரேலின் விமானத் தாக்குதலுக்கு இலக்காகியிருக்கிறது.

> **“காசா முனை மீது இசுரேல் விதித்துள்ள பொருளாதாரத் தடைகளை முற்றிலுமாக நீக்குவது, இசுரேலின் போர்க் குற்றங்களுக்காக அதனின் ஆட்சியாளர்களைத் தண்டிப்பது, காசா முனை மீது இசுரேல் இழைத்துள்ள நாசங்களுக்கு நட்ட ஈடு வழங்குவது, பாலஸ்தீன மக்களின் சுயநிர்ணய உரிமையை அங்கீகரிப்பது பற்றியெல்லாம் பேசாத எந்தவொரு சமாதான ஒப்பந்தமும் உண்மையானதாக, நியாயமானதாக இருக்கப் போவதில்லை.”**



படிப்பகம்




அடுத்த ஆண்டு ஜனவரி மாதத்தில் இசுரேல் நாடாளுமன்றத்திற்கான தேர்தல்கள் நடைபெறவுள்ளன. தற்பொழுது அதிகாரத்திலுள்ள பிரதமர் நேதன்யாஹூ, தனது அரசின் தோல்விகளை மூடிமறைக்கவும், எதிர்க்கட்சிகளின் வாயை அடைக்கவும், மீண்டும் ஆட்சியைப் பிடிக்கவும் தற்பொழுது காசா முனை மீது நடத்தப்பட்ட தாக்குதலைத்தான் முன்னிறுத்திப் பிரச்சாரம் செய்துவருகிறார். இந்த வகையிலும் இசுரேலின் ஆளுங்கட்சிக்கு இத்தாக்குதல் அவசியமானதாக இருக்கிறது.

வழமை போலவே, அமெரிக்காவும் இங்கிலாந்தும் இசுரேல் நடத்திவரும் இந்த அடாவடித்தனமான தாக்குதலை, ‘‘பாறை போல’’ ஆதரித்து நிற்கின்றன. ஒபாமா, இரண்டாவது முறையாக அதிபர் தேர்தலில் வெற்றி பெற்ற கையோடு, ‘‘இசுரேல் தன்னைத் தற்காத்துக் கொள்ள நடத்தும் போர் இது’’ என அறிக்கை விடுத்து, யூத மதவெறி பயங்கரவாதத்துக்குக் கொம்பு சீவிவிட்டார். ஐ.நா. பாதுகாப்பு கவுன்சில் இசுரேலின் ஒருதலைப்பட்சமான இத்தாக்குதலைக் கண்டித்து ஒரு காகிதத் தீர்மானம் இயற்ற முன்வந்ததைக்கூடப் பொறுத்துக் கொள்ள முடியாமல், தனது ரத்து அதிகாரத்தைப் பயன்படுத்தித் தடுத்து நிறுத்தியது, அமெரிக்கா. ஜார்ஜ் புஷ் இராக், ஆப்கானில் தொடங்கி வைத்த ஆக்கிரமிப்புப் போரை லிபியா, சிரியா என விஸ்தரித்த ஒபாமா என்ற ஓநாயிடமிருந்து இந்தப் போர்வெறியைத் தவிர, சமாதானத்தையோ, நல்லிணக்கத்தையோ எதிர்பார்க்க முடியாது.

ஒருபுறம் இசுரேல் காசா முனை மீது விதித்துள்ள பொருளாதாரத் தடையினையும், அதன் விமான மற்றும் கப்பற்படைத் தாக்குதலையும் ஆதரித்து நிற்கும் அமெரிக்க அரசு, மறுபுறம் இசுரேல் காசா முனை மீது தரைப்படை தாக்குதலை நடத்தக் கூடாது என உபதேசிக்கிறது. மேற்குலக ஏகாதிபத்திய நாடுகள் தரைவழித் தாக்குதலை ஆதரிக்க மறுப்பதால், இசுரேலும் எல்லைப்புறத்தில் படைகளைக் குவித்து உதார் விடுவதற்கு அப்பால் செல்லவில்லை.

அரபுலக நாடுகளில் ஏற்பட்டுள்ள சில அரசியல் மாற்றங்கள்தான் அமெரிக்க-இசுரேல் கூட்டணி காசா முனை மீது உடனடியாகத் தரைவழித் தாக்குதலை தொடங்க முடியாமல், அவற்றின் கைகளைக் கட்டிப் போட்டுள்ளன. அமெரிக்க அடிவருடியும் இராணுவ சர்வாதிகாரியுமான ஹோஸ்னி முபாரக் பதவியிறக்கப்பட்ட பின் எகிப்தில் நடைபெற்ற தேர்தலில் வென்று ஆட்சியைப் பிடித்துள்ள சன்னி பிரிவைச் சேர்ந்த முசுலீம் சகோதரத்துவக் கட்சிக் கூட்டணி, ஹமாஸ் இயக்கத்தை ஆதரிப்பதோடு, இசுரேல் தனது தாக்குதலை உடனடியாக நிறுத்திவிட்டு ஹமாஸுடன் ஒரு சமாதான ஒப்பந்தத்தைப் போட்டுக் கொள்ள வேண்டும் எனக் கோரியது. எகிப்தின் இக்கோரிக்கையை துனிசியா, துருக்கி, கத்தார் ஆகிய அரபு நாடுகள் மட்டுமின்றி, அரபு லீக் அமைப்பும் ஆதரித்தன.

அமெரிக்காவை எதிர்த்து வரும் இரான், சிரியா மற்றும் ஹிஸ்புல்லா இயக்கத்தோடு நெருக்கமாக இருந்துவரும் ஹமாஸ் இயக்கம், தற்பொழுது அமெரிக்காவின் நட்பு நாடுகளான எகிப்து, துருக்கி, கத்தார் ஆகியவற்றை நோக்கித் திரும்புவது ஒரு திருப்புமுனையாகக் கருதப்படுகிறது. எகிப்து அமெரிக்காவை மீறிச் செயல்படாது என்றபோதிலும், கடந்த இரண்டாண்டுகளில் அந்நாட்டில் ஏற்பட்டுள்ள அரசியல் மாற்றங்கள், பாலஸ்தீனத்துக்கு எதிரான இசுரேலின் போர் நடவடிக்கைகளை முன்னைப் போல வெளிப்படையாக ஆதரித்து நிற்க முடியாத நிலைமைக்கு அந்நாட்டைத் தள்ளியிருக்கிறது. இந்த நிலைமைகளைக் கருத்தில்கொண்டுதான் அமெரிக்காவும் எகிப்தின் சமாதான முயற்சிகளுக்கு வெள்ளைக்கொடி காட்டியது.

காசா முனை மீது இசுரேல் விதித்துள்ள பொருளாதாரத் தடைகளை முற்றிலுமாக நீக்குவது, இசுரேலின் போர்க் குற்றங்களுக்காக அதனின் ஆட்சியாளர்களைத் தண்டிப்பது, காசா முனை மீது இசுரேல் இழைத்துள்ள நாசங்களுக்கு நட்ட ஈடு வழங்குவது, பாலஸ்தீன மக்களின் சுயநிர்ணய உரிமையை அங்கீகரிப்பது பற்றியெல்லாம் பேசாத எந்தவொரு சமாதான ஒப்பந்தமும் உண்மையானதாக, நியாயமானதாக இருக்கப் போவதில்லை. ஆனால், ஐ.நா.-எகிப்து-அமெரிக்கக் கூட்டணியோ, ‘‘ஹமாஸ் தனது ராக்கெட் தாக்குதலை நிறுத்த வேண்டும்; இசுரேல் தனது வான்வழித் தாக்குதலை நிறுத்த வேண்டும்’’ என்ற மொன்னையான ஒப்பந்தத்தைத்தான் பாலஸ்தீன மக்களின் மீது திணித்தது. அதாவது, இசுரேல் தனது இராணுவத் தாக்குதல்களுக்குச் சற்று ஓய்வு கொடுப்பதையே மாபெரும் சமாதானமாகக் காட்டி ஏய்த்துவிட முயலுகின்றன. ‘‘பாம்பும் சாகக் கூடாது; தடியும் நோகக் கூடாது’’ என்ற தந்திரத்தோடு தயாரிக்கப்பட்டு முன்வைக்கப்படும் இத்தகைய சமாதான ஒப்பந்தங்கள் யூத மதவெறி பாசிச இசுரேல் அரசை மேலும் மேலும் பலப்படுத்தவே பயன்பட்டுள்ளன என்பதுதான் கடந்த கால அனுபவங்கள் உணர்த்தும் உண்மை.

● குப்பன்

Owned and Published by R. SHANMUGA RAJ, from Shop No. 110, IInd Floor, 63, N.S.K. Salai, Kodambakkam, Chennai-600 024 and Printed by him at EZHIL PRINTS, Shop No. 110, IInd Floor, 63, N.S.K. Salai, Kodambakkam, Chennai-600 024. Editor: R. SHANMUGA RAJ.

www.padippkam.com

2-ஆம் பக்கத் தொடர்ச்சி

புமாஇமு. தோழர்கள் இளைஞர்களுக்கே உரித்தான துடிப்போடு சக்கை நடனத்தை நடத்தினர். ''ஊரு காக்கும் காவல் தெய்வம் அய்யனார்சாமி, நம்ம நாடு காக்கும் காவல் தெய்வம் நக்சல்பாரி'', ''முதலாளித்துவம் கொல்லும், கம்யூனிசமே வெல்லும்'' ஆகிய பாடல்களை பெ.வி.மு. தோழர்கள் இசைச்சித்திர நிகழ்ச்சியாக நடத்தினர். இறுதியாக, ம.க.இ.க. மையக் கலைக்குழு தோழர்களின் புரட்சிகர கலைநிகழ்ச்சி நடைபெற்றது.



*ஒசூரில்...*

செங்கொடிகள் விண்ணில் உயர மார்க்சிய ஆசான்களின் உருவப்படங்களுடன் முழக்கஅட்டைகளைஏந்திகிருஷ்ணகிரிமாவட்ட பு.ஜ.தொ.மு.வும் வி.வி.மு.வும் இணைந்து ஊர்வலமாகச் சென்று பாகலூர் சர்க்கிளில் கொடியேற்றி முழக்கமிட்டனர். அதைத் தொடர்ந்து நடைபெற்ற தெருமுனைக்கூட்டத்தில், நமது நாடு மறுகாலனியாக்கத்தின்கீழ் சிக்கியுள்ள நிலையில் ரஷ்யாவின் சோசலிசப் புரட்சியைப் போல நாமும் இங்கு ஓர் புரட்சியைச் சாதிக்க வேண்டிய அவசியத்தை விளக்கி முன்னணியாளர்கள் சிறப்புரையாற்றினர். இளம் தோழர்களின் புரட்சிகரப் பாடல்களுடன்




நடைபெற்ற இத்தெருமுனைக்கூட்டம் உழைக்கும் மக்களிடம் பெருத்த தாக்கத்தை ஏற்படுத்துவதாக அமைந்தது.

*கம்பம்- கூடலூரில்...*

தேனி மாவட்டத்தில் வி.வி.மு. செயல்படும் பகுதிகள் எங்கும் நவம்பர் புரட்சி நாளன்று காலையில் கொடியேற்றுவிழா நடைபெற்றது. மாலையில் கூடலூரில் நடந்த அரங்குக் கூட்டத்தில் தேனி மாவட்டத் தோழர்களோடு கேரள மாநிலத்தைச் சேர்ந்த தோழர்களும் கலந்து கொண்டனர். இக்கூட்டத்தில் உரைவீச்சு, கவிதை வாசிப்பு, நாடகம், பாடல்கள், தியாகத் தோழர் வர்கீஸ் பற்றிய நூல் அறிமுகம் ஆகிய நிகழ்ச்சிகள் நடந்தன.

*பூவனூர் கிராமத்தில்...*

கடலூர் மாவட்டம், விருத்தாசலம் வட்டம் பூவனூர்கிராமத்தில் பு.மா.இ.மு. தோழர்கள் இக்கிராம இளைஞர்களுடன் இணைந்து நவம்பர் புரட்சி நாளைக் கொண்டாடினர். 150 -க்கும் மேற்பட்ட மாணவர்களும் இளைஞர்களும் விளையாட்டுப் போட்டிகளில் பங்கேற்று பரிசளிக்கப்பட்ட இந்த விழாவில், கடலூர் மாவட்ட ம.உ.பா.மையத்தின் தலைவர் தோழர் குணசேகர், ம.உ.பா.மையத்தின் மாநில ஒருங்கிணைப்பாளரான வழக்குரைஞர் ராஜு ஆகியோர் சிறப்புரையாற்றி ரஷ்ய சோசலிசப் புரட்சியின் முன்மாதிரிகளை அனைவரது நெஞ்சிலும் பதிய வைத்தனர். ''இது போன்ற புரட்சிகரத் திருவிழா எங்கள் பகுதியில் இதுவரை நடந்ததேயில்லை. இனி நாங்களே இந்த விழாவை ஆண்டுதோறும் நடத்துவோம், எங்களுக்காக நாங்களே போராடுவோம்'' என்று இக்கிராம மக்கள் வாழ்த்தி வரவேற்குமளவுக்கு இந்த விழா மக்கள் நெஞ்சில் நீங்கா இடத்தைப் பெற்றது.

*திருவெண்ணெய் நல்லூர் வட்டாரத்தில்...*

காரப்பட்டு, பொய்கை அரசூர், இருவேல் பட்டு ஆகிய வி.வி.மு.வின் கிளைகளில் நவம்பர் 7 அன்று செங்கொடியேற்றி, இனிப்புகள் வழங்கி,சிறுவர்களுக்கான விளையாட்டுப் போட்டிகள் நடத்தப்பட்டு பரிசளிக்கப்பட்டன. இருவேல்பட்டு கிராமத்தில் பிறப்பால் உயர்சாதியினரானவர்களின் வீடுகளிலேயே மாட்டுக்கறி உணவு தயாரிக்கப்பட்டு, அங்கு அனைத்து உழைக்கும் மக்களுக்கும் விருந்து அளிக்கப்பட்டது. சாதி வேறுபாடின்றி அனைவரும் சமமாக அமர்ந்து உணவருந்தினர். அதைத் தொடர்ந்து, இந்துப் பண்டிகைகளுக்கும் நவம்பர் புரட்சி நாள்விழாவுக்கும் உள்ள வேறுபாட்டை உணர்த்தியும் உழைக்கும் மக்கள் ஓரணியில் திரண்டு போராட வேண்டிய அவசியத்தை விளக்கியும் முன்னணியாளர்கள் சிறப்புரையாற்றினர்.

இவைதவிர கரூர், பென்னாகரம் முதலான பகுதிகளிலும் எழுச்சியோடு நவம்பர் புரட்சி நாள் விழாக்கள் நடைபெற்றன. வர்க்க உணர்வூட்டும் மக்கள் திருவிழாவாக நவம்பர் புரட்சி நாளைக் கொண்டாடிய இப்புரட்சிகர அமைப்புகள், சோசலிசப் புரட்சியைச் சாதித்த போல்ஷ்விக்குகளின் உண்மையான வாரிசுகள் நாங்கள்தான் என்பதை நிரூபித்துக் காட்டியுள்ளன.

-பு.ஜ.செய்தியாளர்கள்.





படிப்பகம்

www.padippkam.com

PUTHIYA JANANAYAGAM (Tamil Monthly) PUBLISHED ON 1st OF EVERY MONTH
REGISTERED WITH THE REGISTRAR OF NEWS PAPERS FOR INDIA UNDER No.42648/85
REGISTERED No.TN/CC(S)Dn/190/12-14. Licensed to Post without pre-payment under WPP No.TN/PMG/CCR/WPP-562/12-14

# பள்ளிகளில் தலைவிரித்தாடும் தீண்டாமை!


பொது விசாரணை

மனித உரிமைக் களம் என்ற அமைப்பின் சார்பில் திருநெல்வேலியில் தாழ்த்தப்பட்ட மாணவர்களிடையே தீண்டாமை குறித்து நடத்தப்பட்ட பொது விசாரணையில், கடந்த இரண்டாண்டுகளில் நெல்லை மாவட்டத்தில் மட்டும் தாழ்த்தப்பட்ட சாதிகளைச் சேர்ந்த 1,680 மாணவ-மாணவியர் பள்ளிப் படிப்பைப் பாதியிலேயே நிறுத்தியிருக்கும் உண்மை அம்பலமாகியிருக்கிறது.

இந்த மாணவர்கள் பள்ளிப் படிப்பைப் பாதியிலேயே கைவிட்டு ஓடியதற்குப் படிப்பின் மீது நாட்டமின்மையோ, ஏழ்மையோ காரணமாக அமையவில்லை. பள்ளிக்கூடத்தில் இம்மாணவர்களிடம் காட்டப்பட்ட சாதிப் பாகுபாடும் தீண்டாமைக் கொடுமையும்தான் முதன்மையான காரணமாக உள்ளது.

''நான் வீட்டுப் பாடம் எழுதவில்லை; அதற்கு ஹெட் மாஸ்டர், 'உன் அப்பா கக்கூஸ் அள்ளுறவன்தானே, பின்னே உனக்கு மட்டும் எப்படி படிப்பு வரும்' எனச் சாதிவெறியோடு கிண்டல் செய்தார். தினம் தினம் சாதியைச் சொல்லித் திட்டியதால் பள்ளிக்கூடமே வெறுத்துவிட்டது. இப்பொழுது நான் மதுரையில் லாரி கிளீனராக இருக்கிறேன்'' என தேவர்குளத்தைச் சேர்ந்த 14 வயதான அருந்ததியர் சாதியைச் சேர்ந்த அஜித்குமார் அப்பொதுவிசாரணையில் சாட்சியம் அளித்திருக்கிறான்.

பள்ளிகளில் நிலவும் தீண்டாமையைத் தனது பார்வையைப் பறிகொடுத்துத் தமிழகத்திற்கு எடுத்துக் காட்டினாள், தனம் என்ற சிறுமி. அச்சம்பவம் நடந்து பத்தாண்டுகளுக்கு மேலாகிவிட்ட பின்னும் தமிழகப் பள்ளிகளில் தாழ்த்தப்பட்ட மாணவர்கள் இழிவுபடுத்தப்படுவது எவ்வித உறுத்தலும் அச்சமுமின்றித் திமிரோடு தொடர்ந்து கொண்டிருப்பதை இப்பொது விசாரணை அம்பலப்படுத்திக் காட்டியிருக்கிறது. இவ்வன்கொடுமையைத் தடுக்க முயலாமல் வேடிக்கை பார்க்கும் தமிழக அரசு, பள்ளிப் பாடப் புத்தகங்களில் ''தீண்டாமை மனிதநேயமற்ற செயல்-பெருங்குற்றம்'' என அச்சடித்துப் போதிக்க மட்டும் தவறுவதில்லை. இம்மோசடியை, பகல்வேடத்தை இன்னுமா நாம் பொறுத்துக் கொள்ளுவது? ■

# புளுகுணி ஜெயாவின் காட்டாட்சி!


சல்மா

மின்வெட்டைக் கண்டித்து ஒரு துண்டுப் பிரசுரம் தயாரித்து, அதனைப் பொதுமக்கள் மத்தியில் கொடுத்த 'குற்றத்திற்காக' கோவை, சிவானந்தா காலனியைச் சேர்ந்த சல்மா என்ற பெண் பத்திரிகையாளரை, நள்ளிரவு நேரத்தில் அவரது வீடு புகுந்து ஸ்டேஷனுக்குத் தூக்கிவந்து, கொலை மிரட்டல் விடுத்தல் உள்ளிட்ட மூன்று கிரிமினல் குற்றச்சாட்டின் கீழ் கைது செய்து, அந்த நள்ளிரவிலேயே அவரை மாஜிஸ்ட்ரேட் முன் நிறுத்தி, பின் சிறையில் அடைத்துத் தனது விசுவாசத்தைக் காட்டிக் கொண்டிருக்கிறது, கோவை நகர போலீசு.

''இது மக்களை வாழ வைக்க வந்த அரசா? இல்லை, கோவை மாவட்டத்தில் முதுகெலும்பாக உள்ள சிறு தொழிற்சாலைகளை அழிக்க வந்த அரசா?'' எனத் தனது துண்டுப் பிரசுரத்தில் கேட்டிருக்கிறார், சல்மா. அவரின் இந்தக் கேள்வி, ஒட்டுமொத்த தமிழக மக்களின் உள்ளக் குமுறல் அன்றி, வேறென்ன? எனவே, சல்மாவைப் பொய்க் குற்றச்சாட்டுகளின் கீழ் கைது செய்ததை, மின்வெட்டை எதிர்த்துப் போராடிவரும் தமிழக மக்களுக்கு விடப்பட்டுள்ள எச்சரிக்கையாகவே கருத முடியும்.

''தான் ஆட்சிக்கு வந்தால் மூன்று மாதத்தில் மின்சாரப் பிரச்சினையைத் தீர்த்து விடுவேன்'' என்ற ஜெயாவின் பிரச்சாரத்தை நம்பி, அ.தி.மு.க.விற்கு வாக்களித்தவர்களுள் இந்த சல்மாவும் ஒருவர். இப்பொழுதோ பதவியில் அமர்ந்துவிட்ட கொழுப்பில், ''நான் அப்படி எந்த வாக்குறுதியும் கொடுக்கவேயில்லை'' என புளுகித் திரிகிறார், ஜெயா. சட்டமன்றத் தேர்தல் சமயத்தில் அவர் அளித்த வாக்குறுதி அண்டப் புளுகு என்றால், அவரது மறுப்பு ஆகாசப் புளுகு!

நியாயத்தைக் கேட்ட சல்மாவின் மீது வழக்கும் சிறையும் பாயுமென்றால், பொய் வாக்குறுதி அளித்துத் தமிழக மக்களை நம்பிக்கை மோசடி செய்த ஜெயாவை எந்தக் காராகிரகத்தில் அடைப்பது? ■